# வாசகர்களுக்கு

**தா**ங்கள் இதுவரை காவேரியை மிகவும் ஊக்கமுடன் ஆதரித்துத் தொடர்ந்து படித்து வந்திருக்கிறீர்கள். அதில் எங்கள் சிற்றறிவுக்கு எட்டிய சிற்சில மாறுதல்களையும் அவ்வப்போது செய்து வந்திருக்கிறோம். எனினும் காலத்திற்கேற்ப புரட்சிகரமான மாறுதல்களையும் புதிய அம்சங்களையும் தாங்கள் விரும்புவது இயல்பு. தங்களுடைய யோசனைகளை எங்கள் காரியாலயத்திற்கு தயவு கூர்ந்து அனுப்பியுதவுமாறு வேண்டிக்கொள்கிறோம். இயன்ற அளவு வாசகர்கள் விரும்பும் அம்சங்களை, காவேரியில் இணைக்க முயலுவோம்.

# எழுத்தாளர்களுக்கு

**த**மிழ்க் கதைகள் பழகிப் பழகி அலுத்துப்போன சுவட்டிலேயே சென்று கொண்டிருக்கின்றன என்பது பொதுவாகக் கூறும் குறை. இது முற்றிலும் உண்மையல்ல என்பதை ஒப்புக்கொண்டாலும், இக் குறைபாட்டிற்கு இடமளிக்காமலிருப்பது நமது கடமை. சரித்திர சம்பந்தமான கதைகளும் ஒரே பொருளைக் கொண்டு ஒரே நிகழ்ச்சியைக் குறித்துப் பல்வேறு வடிவங்களில் பல்வேறு பத்திரிகைகளில் வெளிவருவதை நாம் காண்கிறோம். ஆசிரியர்கள் இதை அறிந்தோ, அறியாமலோ பிரசுரித்துவிடுகிறார்கள். வாசகர்கள்தான் சலித்துப் போகிறார்கள். காதல் கற்பனைக் கதைகளும் இதே தோசைப் புரட்டல்தான்.

இனி காவேரியில் பிரசுரிப்பதற்கென அனுப்பப்படும் கதைகள் கற்பனைகள் தற்கால வாழ்க்கைச் சம்பவங்களைப் பொறுத்து இருப்பது நலம். பற்பல வாழ்க்கைப் பிரச்னைகள், மக்களின் விசித்திர நடவடிக்கைகள், சொல்லுக்கும் செயலுக்கும் புறம்பான போக்கு, இன்னும் அனேக விஷயங்களை நமது தமிழ்க் கதைகள் அணுகவில்லை. இவைகளையெல்லாம் கருத்தாகக் கொண்ட சிறந்த எழுத்தோவியங்களை காவேரி ஆர்வத்துடன் வரவேற்கும்.

காவேரி தோன்றியதிலிருந்து எழுத்தாளர்களுக்கு இத்தகைய வேண்டுகோள் விடுத்தோமில்லை. இன்னும் காரியாலயத்திற்குக் கட்டுரைகளும், கதைகளும் வந்து குவிகின்றன. ஆனால் பெரும்பாலும் அவை அலுத்துப்போன கற்பனைகளின் மாற்றமே. எனவே தமிழ்நாட்டின் தலை சிறந்த எழுத்தாளர்களை இத்தகைய புதிய துறைகளில் தங்கள் கற்பனைகளை ஓட்டி எளிய நடையில் எழுத்தோவியங்களைத் தொகுத்து நமக்கு அனுப்புமாறு வேண்டிக்கொள்ளுகிறோம். கட்டுரைகளின் தரத்திற்குத் தகுந்த சன்மானம் அளித்திடுவோம்.

ஆசிரியர்.

# 1950-ல்

## என்ன நேர இருக்கிறது



புத்தாண்டாகிய 1950 க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி. கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள் நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற்செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

**Shri**

**Swami Satnarayan Jotish Ashram**

**(C. K.) HOSHIARPUR.**



# உங்கள்

## மனைவிக்கு

டேராடூன் மலைகளில் வசிக்கும் ஓர் சன்யாசியின் அபூர்வ மருந்து

எமது மிகவும் சக்தி வாய்ந்த தயாரிப்பான "ஸன்யாஸி ஔஷதி" லியுகோரியா மற்றும் மாதவிடாய்க் கோளாறுகளை விரைவில் நிவர்த்தி செய்யும். கண்களுக்கு ஒளி, முக வசீகரம் முதலியவை உண்டாக்கும். சோம்பல், தளர்ச்சி முதலியவை பறந்து போகும். அனுபவமும் திறமையும் நிறைந்த வைத்தியர்களால் இம்மருந்து தயார்செய்யப்படுகிறது. 15 நாட்களுக்கு சாப்பிட வேண்டிய மருந்து ரூ. 2–14–0 தான். தபாற் செலவு தனி. இதை விற்பதன் மூலம் லாபமடைய வேண்டுவது என் விருப்பமல்ல. கடவுள் என ஜீவனத்திற்குத் தேவையான பொருள் அளித்திருக்கிறார். நோயால் வருந்தும் எனது சகோதரிகளின் பொருட்டு அடக்க விலைக்கே மருந்தைக் கொடுக்கிறேன். வேறு வியாதிகள் சம்பந்தமாக என்னிடம் மருந்துகள் எதுவும் கிடையாது. ஆகையால் வேறு வியாதிகள்பற்றி எனக்கு எழுதவேண்டாம்.

இம் மருந்து உபயோகமற்றது என்று நிரூபிப்பவர்களுக்கு முழு விலை திருப்பி அளிக்கப்படும். இந்த ஔஷதத்தை ஓர் முறை உபயோகித்தால் இதன் இயல்புகள் நன்கு புலப்படும்!

**Prof. Dev Dutt (C. K.)**

Vir Bhan Street, Jullundur, E. P.

# இனாம்



எமது நெ. 501 கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக் கறுப்பாக மாறி பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் செய்கிறது.

புட்டி ஒன்று விலை ரூ. **2—4—0**

**3** புட்டிகள் (பூரா முறை) ரூ. **5—15—0**

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்டு வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதமும், 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பேன்ஸி ரிஸ்டு வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

**AMRIT PHARMACY (C. K.)**

JULLUNDUR CITY.

# உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?



நீங்கள் இனி ஏமாற்றமடைய வேண்டாம். “வசிகரன்” கைக்குட்டையின் உதவியால் நீங்கள் விரும்புபவரை அடையலாம். மிகவும் கடின மனதுடையவரும் உங்கள் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடப்பர். உத்யோக விஷயங்களில் விசேஷ அபிவிருத்தி ஏற்படும். இறந்தவர்களுடன் ஆத்மீகத் தொடர்பு கொள்ளலாம். வழக்குகளில் வெற்றி, வியாபாரத்தில் லாபம், லாட்டரி முதலியன மூலம் வருமானம் ஏற்படும். அதிர்ஷ்டம் உங்களைத் தேடி வரும். உங்கள் விருப்பங்கள் யாவும் நிறைவேறும்.

வசிகரன் கைக்குட்டை

No. 1 ரூ. 1—15—0

ஸ்பெஷல் ,, ரூ. 3—15—0

இதன் அபூர்வ இயல்புகள் உபயோகிக்க ஆரம்பித்து 24 மணி நேரத்திலேயே தெரியும். ஆயிரக்கணக்கான நண்பர்கள் உபயோகித்து நன்மை அடைந்திருக்கிறார்கள். இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!

**Shree Mahavir Swami**

**(C. K.) Kartarpur (E. P.)**

## பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாயீ செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimati. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City.

# ரூ. 300 இனாம்



இந்த மகா காளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டைக் கைவசம் வைத்துக்கொண்டு தியானம்பண்ணும்போது, இந்த மகாகாளிதோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1—4—0. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3—2—0. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத் தகடு ஒன்று ரூ. 3—15—0. தபாற் செலவு தனி. சக்தி இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனாம்.

**THE BENGAL MESMERISM HOUSE (C. K.)**

**HOSHIARPUR.**

திடத்திலும்
தரத்திலும்
தேர்ந்தது

சங்கர்
IC
பிராண்ட்

சூலம் மார்க்
போர்ட்லண்ட் ஸிமெண்ட்

சர்க்கார் சோதனைச்சாலையின்
நற்சாட்சி பத்திரம் பெற்றது

Govt Test House .. Alipore
TEST CERTIFICATE
No CT - PC - 1260 dated 1st & 6th Dec 1949

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்
தொழிற்சாலை : தாழையூத்து, திருநெல்வேலி ஜில்லா.
ரிஜிஸ்டர்ட் ஆபிஸ் : 107. அரமனைக்காரத் தெரு, மதராஸ் - 1.

எல்லா நகரங்களிலும்
இந்தியா ஸிமெண்ட்ஸ்
ஸ்டாக்கிஸ்டுகளுள்ளனர்

# ரூபாய் 25,000 பரிசு

ரிஜிஸ்தர் நெ. 249 — போட்டி நெ. 22

M/S. Premier Bank of India Ltd..ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ள சரியான விடைக்கு எண்ணுக்கு-எண், கட்டத்திற்கு-கட்டம், முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசைகள் சரியான விடைக்கு, இரண்டாம் பரிசு ரூ. 7000-ம். முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000-ம். முதல் மூன்று நெம்பர் சரியாக உள்ள விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000-ம். முதல் இரண்டு நெம்பர்கள் சரியானவர்களுக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் சரியாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

162

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

முடிவு தேதி 13—3—50

விடை 13—5—50

பிரவேசக்கட்டணம்

கூபன் 1-க்கு ரூ. 1. 6 கூபனுக்கு ரூ. 5.

**விடை கண்டுபிடிக்கும் விதம்:-** 33 முதல் 48 வரையுள்ள எண்களை, கொடுக்கப் பட்டு இருககும் கட்டங்களில், மேல் இருந்து கீழும் இடமிருந்து வலமும் 162 குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 162 வருமபடியாக அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்கவேண்டும்.

**RAINBOW COMPETITIONS**

KEY S. NO. 19 *30 TO 45=150

| | | | |
|---|---|---|---|
| 39 | 34 | 37 | 40 |
| 44 | 33 | 30 | 43 |
| 32 | 45 | 42 | 31 |
| 35 | 38 | 41 | 36 |

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions* No. 19 on 9.1.50 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

*For The Premier Bank of India Ltd*

V. Ramanathan [signature]
28.1.50.
*Agent, Madras*

**விதிகள்:-** காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூபன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்ப லாம். பிரவேசக் கட்டணத்தை மணியார்டர் மூலமாகவோ அல்லது கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூல மாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசிதை கூபன்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும். வரு லுக்குத்தகுந்தாற்போல் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். இப்போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவு (சட்டபூர்வமாய் கட்டுப்படுவதுமாகும்). போட்டியின் முடிவு தெரிந்துகொள்ள RAINBOW இங்கிலீஷ் மாதமிருமுறை பத்திரிகையில் காணவும். கிடைக்காவிட்டால் அணா 4 ஸடாம்பு அனுப்பினால் விடை அனுப் பப்படும். பரிசுத் தொகையும மற்ற விதிகளும் மேலே குறிப்பிட்டபடி அளிக்கப்படும்.

**THE RAINBOW COMPETITIONS No. 22 - 306/6, Mint Street, MADRAS-1.**

# மாதவிடாய்!

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ் ரிஜிஸ்டர்ட்) எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிக சுலபமாகவும் அதி சீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். ஆயிரக்கணக்கான மக்களின் நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற ஔஷதம். உத்தரவாதமுள்ளது. போலி மருந்துகள் வாங்கி ஏமாறு கிர்கள். விலை ரூ. 7—0—0 சாதாரண கேஸுகளுக்கு Ordinary. விலை ரூ. 9—0—0 நாள்பட்ட கேஸுகளுக்கு Special. (த. சி. தனி.)

# கர்ப்பத்தடை!

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) 12 நாட்கள் சாப் பிட்டால் 6 வருஷ-க்குச் சாசுவதமாகக் கர்ப்பத்தைத் தடுக்கும்: மாதவிடாய் தவறாது. (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பர ரியாகக் கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 10-0-0. ஜெல்லி விலை ரூ. 5-8-0 (த. சி. தனி).

**Manufacturers: SEENU & CO., Post Box No. 1638, (3) MADRAS-1.**

**Branch: 134, Serangoon Road, SINGAPORE.**

# தியானத்தின் அருள்

சோதிட சாஸ்த்திரம் முனிவர்களின் ஆழ்ந்த தியானத்தின் பயனைக் கண்டறிந்த உண்மை. யோகிகள் முக்காலத்திய பயனையும் தெள்ளெனத் தெரிவிக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர். அத்தகைய யோகிகளின் பரம்பரையில் வந்திருக்கும் 'ராஜ ஜோதிஷி' பண்டிட் ஹரீஷ் சந்திர சாஸ்திரி, கீழ் நாடுகளிலும், மேல் நாடுகளிலும் வழங்கும் சோதிட முறைகளை நன்கு உணர்ந்தவர். மஹாராஜாக்களாலும், இந்தியத் தலைவர்களாலும் புகழப் பெற்ற இவ்வறிஞர் தமது சோதிட ஆராய்ச்சி மூலம் உங்களது சகலவித மான தொல்லைகளையும் நிவர்த்திப்பதுடன் டாக்டர் களால் கைவிடப்பட்ட தீராத வியாதிகளையும் குணப் படுத்துவார். எமது அபூர்வ தயாரிப்புகள் :—



**சாந்தி கவசம் :** கிரகதோஷங்களினின்று காப் பாற்றும். வியாதிகளை நிவாரணம் செய்து, மன அமைதி உண்டாக்கும்.

சாதாரணம் ரூ. 5/-. ஸ்பெஷல் (உடனே பலன் தருவது) ரூ. 20/-

**பாகால கவசம் :** வழக்குகளில் வெற்றி, தொழிலில் லாபம், செல்வப் பெருக்கு முதலியவை விரைவில் ஏற்படும்.

சாதாரணம் ரூ. 12/-. ஸ்பெஷல் ரூ. 45/-.

**ந்ருஸின்ஹ கவசம் :** தீராத நோய் நொடிகளும் பறந்து போகும். குழந்தையில்லாத ஸ்திரீகள் புத்திர பாக்கியம் பெறுவர்.

சாதாரணம் ரூ. 10/-. ஸ்பெஷல் ரூ. 29/-

**ஆகர்ஷணி கவசம் :** நீங்கள் விரும்புபவரை எளிதில் அடையலாம். உங்கள் விருப்பங்கள் யாவும் நிறைவேறும்.

சாதாரணம் ரூ. 12/-. ஸ்பெஷல் ரூ. 50/-

**ஆயிரக்கணக்கான பிரமுகர்களால் உலகெங்கும் உபயோகிக்கப்பட்டு நற்சாட்சி பெற்றவை.**

எதிர்கால பலன்கள் விபரமாகக் கூறுவதுடன் உங்கள் எல்லா மனக் கவலைகளையும், வியாதிகளையும் நிவர்த்தி செய்து மன நிம்மதியும் சந்தோஷமும் பண்டிட்ஜி ஏற்படுத்துவார். நேரில் சந்தித்தோ அல்லது தபால் மூலமாகவோ பயனடையுங்கள். இந்த அரிய தருணத்தை இழக்கவேண்டாம்!

விபரங்களுக்கு:

## HOUSE OF ASTROLOGY,

141/1c, Russa Road, Kalighat, Calcutta, 26.

(Just East of Hazra Park)

Phone : South 978.




லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

**LIVER CURE** Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West),
**BOMBAY 4.**



## மாதவிடாய் :

சகோதரிகளே ! எமது "சும்பகி—ரேசனி" என்ற மருந்தை உபயோகித்தால், மாத வெளியீட்டை ஒழுங்குபடுத்துவதுடன் எவ்வளவு நாட்பட்ட தொந்தரவாக இருப்பினும் நிவர்த்திசெய்யும். தீங்கற்றது. 100க்கு 100 பலன் நிச்சயம். விலை ரூ. 5/- தபாற்செலவு ரூ. 0-14-0.

## கர்ப்பத்தடை :

"தம்பதி—சகா" நீங்கள் விரும்புகிறபடி கர்ப்பத்தடைக்கு உதவுகிறது. தீமை கிடையாது. 30 வருடங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்படுகிறது. பலர் நன்மை அடைந்திருக்கின்றனர்.
பூரண கர்ப்பத் தடைக்கு ரூ. 4-4-0 6 மாத காலத் தடைக்கு ரூ. 2-0-0
(தபாற் செலவு ரூ. 0-14-0)

## வீரியம், யௌவனம் :

உடல், மனம் இரண்டிற்கும் "மதன விலாஸ் ரஸாயனம்" சிறந்த டானிக். மயக்கம், சோர்வு, நரம்புத் தளர்ச்சி, மறதி, அஜீரணம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து. சோர்வடைந்த மாணவர்கள், மூளை வேலையில் ஈடுபடும் கவிஞர்கள், மணவாழ்க்கை தொடங்கிய காதலர்கள் இவர்களுக்கு இந்த டானிக் ஓர் வரப்பிரஸாதம். விலை ரூ. 2—8—0

## விரைவாதம் :

குடல் இறக்கம், யானைக்கால், கீல்வாதம், வீக்கம் வலியுடன் கூடியதாயினும், எத்தனை நாட்பட்டதாயினும் ஒரு வாரத்தில் நிச்சயம் குணமளிக்கும் எமது ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த "ஸம்ஸந்தி". ஓர் முறை உபயோகித்துப்பாருங்கள் ! விலை ரூ. 4-8-0 தபாற்செலவு ரூ. 0-14-0

KAVIRAJ M. KAVYATIRTHA (C. M.)
**70, Cornwallis Street, CALCUTTA-6.**

# தி யுனைடெட்
# கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

**கல்கத்தா**

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | .... | ரூ. 8,00,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | .... | ரூ. 4,00,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | .... | ரூ. 2,00,00,000 |
| ரிஸர்வ் நிதி | .... | ரூ. 52,50,000 |

●

டைரக்டர்கள்
**G. D. பிர்லா—சேர்மன்**

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா
(வைஸ்-சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா
(வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்
**B. T. தாகூர்**

●

**இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில்
70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத்
திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.**




Agent:— T. T. KRISHNAMACHARI & Co.
12A, Lingha Chetty Street, — G. T. MADRAS.

**மாதவிடாய்**

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) திமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 5-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 3-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-14-0)

**விரைவாதம்**

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி.எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

**வீரியம்**

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்றால் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

**கூஞ்சா தைலம்**

வழுக்கை, மயிர் கொட்டுதல் போன்ற வியாதிகளை நிவர்த்திப்பதுடன் மயக்கத்தையும் போக்குகிறது. தலை மயிர் சம்பந்தமான எவ்வித நோயையும் கண்டிக்கவல்ல சிறந்த கேசவிருத்தி டானிக்.

ஒரு பாட்டில் ரூ. 2-0-0

தபாற் செலவு ரூ. 0-14-0 வேறு.



கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

**KAVIRAJ R. N. CHAKRAVARTHI**

Ayurvedha Sasthri ( K. M. )

24, Debendra Ghose Road, Bhowanipore

CALCUTTA, 25

*Stockists:*

Messrs. APPAH & CO., 286, Netaji Subhas ChandraBose Road, Madras.

# பொருளடக்கம்

விரோதி மலர் 9 — மாசி இதழ் 7

நமது குடியரசு ... 9

நாதன் கோயில் — எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் ... 20

மதிப்பில்லா மாணிக்கம் — வே. ரங்கராஜன் ... 25

முத்துக்களின் தந்தை — எம். எஸ். கமலா ... 30

நிலைபெற்ற சிலை — ஜெகசிற்பியன் ... 33

பெண்களுக்குப் பிரத்தியேகமானது — ஷிபானி செளத்ரி — சாரி ... 38

பொங்கல் பிரார்த்தனை — வாரன் ... 42

பிரிட்டிஷ் மாதரும் யுத்தமும் — லீலா கோபாலன் ... 48

லக்ஷியக் கனவு (தொடர் கதை) — கே. சுந்தரம்மாள் ... 50

ஒளியின் வண்ணம் — வி. ஜி. ஸ்ரீநிவாஸன் ... 62

நளினியின் கவலை — கௌரி ... 66

நமது புராதன சிற்பக் கலை ... 71

குறைக்கடிதம் — ஆர். எஸ். ... 73

புத்தக விமர்சனம் ... 79

பட்டண் பெருமை (தொடர் கதை) — கே. எம். முன்ஷி ... 82

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

# மேன்மையின்

## பெருமை அநேக வருஷ உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



ைசக்கிள்கள்

ைசக்கிள் சாமான்கள்

பெராம்புலேட்டர்கள்

குழந்தை வண்டிகள்

இவைகளில்

உயரிய ரகத்திற்கு



நம்பி வாங்க

# இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

2/9 பிராட்வே :: :: மதராஸ்-1.

தந்தி :—''ஸைக்கிள்ஸ்'' போன்: 3168

சென்னை-600 008

199314


# காவேரி

| விரோதி<br>மலர் 9 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | மாசி<br>இதழ் 7 |
|---|---|---|


## நமது குடியரசு

முடி அரசுகள் மறைந்தன. குடி அரசு ஜோதிப் பிழம்பாய் உதித்து விட்டது. ஏதேனும் ஒன்று அழிக்கப்பட்டால், தீயிலிடப் பட்டால் ஜோதி கிளம்புவது இயல்பு. சைனா தீயிலிடப்பட்டது. பன்னிரண்டு வருட காலமாக எங்கும் அக்னி மயம் தான். இன்று செஞ்ஜோதி அந்நாடெங்கும் காணப்படுகிறது.

ஆனால் இந்தியாவில் காணப்படுவது அத்தகைய ஜோதியல்ல. அழிவினால் ஏற்பட்ட ஜோதியல்ல. அது யாரையும் அழிக்கவில்லை. சந்திர ஜோதி போல் எல்லோர் மனதையும் குளிர வைக்கும் ஜோதி.

இந்தியக் குடியரசு ஜனவரி 26 ஆம் தேதி பிறந்தது. மன்னர் ஆட்சி மடிந்தால்தான் குடி ஆட்சி நிலைக்கும். இதைச் சாதித்தார்கள் நம் மக்களின் தலைவர்கள். இங்கும் ஹிம்ஸையில்லை. சரித்திரத்திலேயே இத்தகைய குடியரசு அஹிம்ஸா முறையில் பிறந்ததில்லை.

இதற்கு அடிகோலியவர் நமது மஹாத்மா காந்தி. நாட்டு மக்கள் அவரைப் பின்பற்றினார்கள், சிலர் நம்பிக்கையுடன், பலர் வேறு வழியின்றி. இறுதியில் அவர் காட்டிய வழி வெற்றி தந்தது.

ஆனால் அவர் மறைந்து விட்டார். உலக சரித்திரம் தெரிந்தவர்கள் இதைக் கண்டு வருந்த இடமில்லை. உலகில் தூய வழி காட்டியவர்கள் தங்கள் வழி நடந்து ஏற்படும் பலாபலன்களைக் கண்டு களிக்க நேருவதில்லை. அவர் ஈன்ற குடியரசு அவரை என்றென்றும் மறவாது.

உலக சரித்திரத்தில் முடி அரசுகள் குடியரசாக மாறுவதும் மறுபடியும் குடியரசு முடியரசாகவோ அல்லது அதற்கொப்பான ஏகாதிபத்தியமாக மாறுவதோ இயல்பு. மக்கள் அனைவரும் மன்னர் என்றாய் விட்டால் பொறுப்பு காலக்கிரமத்தில் குறைந்து, பலவான் கையில் நாடு சிக்கி, மறுபடியும் குடியரசு மறைவது தான் நாம் கண்ட சரித்திரநிகழ்ச்சி. நம் நாட்டைப் பொறுத்தவரை இத்தகைய மாறுதல் ஏற்படா வண்ணம் பாதுகாப்பது ஒவ்வொரு இந்தியனுடைய பொறுப்பு.

குடியரசுக் கொண்டாட்டம் ஓய்ந்து விட்டது. இனி நாம் செய்யவேண்டியதென்ன? மக்களைப் பொறுத்தவரை அவர்கள் இனி மன்னர்கள் என்று உரைத்தவுடன் குதூகலிப்பார்கள் சில காலம். ஆனால் அன்றாட வாழ்க்கையில் அது சிறிதளவேனும் பிரதிபலிக்காவிட்டால் அவர்களுடைய ஊக்கமெல்லாம் ஆவியாகிப் பறந்தோடிவிடும். ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டாலென்ன என்ற கொள்கைதான் பிறகு. அத்தகைய மன நிலையில்தான் நாடாசை கொண்ட வெளிநாட்டுக்காரர்களோ அல்லது பதவி மோகங்கொண்ட உள்நாட்டு யதேச்சாதிகாரிகளோ கிளர்ச்சி செய்வார்கள்.

குடியரசுக்கு இத்தகைய மனோபாவம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வது பெரும் பொறுப்பு. அதற்கென மன்னராட்சியைக் காட்டிலும் அதிகமாக

உழைத்து, மக்களை நிம்மதியாகவும் சௌகரியங்களுடனும் வாழச் செய்ய வேண்டும். ஓர் சக்கரவர்த்திக்குப் பதிலாக மக்களின் தலைவர்கள் பதவி வகித்து அதிகாரம் செலுத்துவது மட்டும் குடியரசாகாது. அல்லது தேர்தல் காலங்களில் மக்களைப் புகழ்ந்து அவர்கள் வாக்கு உரிமைகளைப் பெற்று, தான்தோன்றித்தனமாகப் பிறகு ஆட்சி நடத்துவதும் குடியரசோ ஜனநாயகமோ ஆகாது. நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும். குடியரசு ஆட்சியினால் அவர்கள் மனம் பூரிப்பெய்தவேண்டும். அப்பொழுதுதான் அதன்பால் அவர்களுக்கு ஓர் பற்று ஏற்படும். சகல தியாகங்களுக்கும் முன்வருவார்கள்.

இதைத்தான் நமது ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரப்பிரஸாத் தம் பிரசங்கத்தில் எடுத்துக்காட்டினார். "காந்தி காட்டிய வழியை நாம் கடைப்பிடிக்க இன்று கங்கணம் கட்டிக் கொள்ளவேண்டும். குடியானவர்களையும், தொழிலாளிகளையும், பாடுபடுகிறவர்களையும், புத்திக் கூர்மையினால் உழைப்பவர்களையும் சுதந்தரமாக, சந்தோஷமாக, கலைப்பண்புடன் வாழச் செய்வதே நமது கடமை. ஒவ்வொரு இல்லத்திலும் உற்சாகமும், பண்பும், சுதந்திரமும், செழிப்பும், உயிரும் பிரகாசமும் ஊடுருவிப் பாயச்செய்ய வேண்டும். எதிர்காலம் நம் கையில் உளது. அது எவ்வுருவெடுக்கும் என்பது நம்மைப் பொறுத்துளது. நாம் காலத்தை வீணாக்காமல் உழைக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். பண்டிதநேருவும் இதைத்தான் வலியுறுத்தினார். சுதந்திரத்தை வகிக்க அருகதை உள்ளவர்களாக நம்மை ஆக்கிக்கொள்ள வேண்டுமென்றார் சர்தார் படேல்.

குடியரசுத் தினத்தன்று சந்தோஷ உணர்ச்சியைக் காட்டிலும் பொறுப்புணர்ச்சிதான் நமது தலைவர்களிடம் மேலோங்கி, காணப்படுகிறது. இது சுபசூசகமே. மக்களும் குட்டித் தலைவர்களும் இதை உணர்ந்து, தங்கள் நடத்தையில் பண்டிதநேரு சுட்டிக்காட்டிய உயரிய நடத்தை, மனத்திலும் செய்கையிலும் தூய்மை, சகிப்புத்தன்மை, ஒத்துழைப்பு, சலியா உழைப்பு—இக் குணங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவார்களானால் நமது குட்டிக் குடியரசு வானளாவ ஓங்கி ஜோதிப் பிழம்பாய்த் திகழ்வது திண்ணம்.

குடியரசுத் திருவிழாவில் நம் மனதை கலக்கும் ஓர் சம்பவம் இல்லாமல் இல்லை. அதுதான் கவர்னர் ஜனரலாக இருந்த ராஜாஜி பதவியைத் துறந்து வீடுதிரும்பியது. அவரைப் பொறுத்தமட்டில் அவர் வாழ்க்கையில் அது யாதொரு மாறுதலையும் உண்டாக்காது. ஆனால் இந்திய மக்கள் இதில் கொஞ்சம் கலக்கம் அடையத்தான் அடைவார்கள். அறிவுச் சுடராக விளங்கிய ராஜாஜிக்குக் குடியரசு ஆட்சியில் பதவியில்லை என்றால் மக்கள் அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும். இதுவரை அவர் ராஜப் பிரதிநிதியாக இருந்தது நமக்கு அளவிலாப் பெருமை அளித்தது. ஜனாதிபதியாக ராஜேந்திரப் பிரஸாதைத் தேர்ந்தெடுத்தது மிக்க பொருத்தம் என்பதுதான் நமது அபிப்பிராயம். ஆனால் ராஜாஜி போன்ற அரசியல் ஞானி மிகவும் நெருக்கடியான இக்காலத்தில் குடியரசு ஆட்சியில் பங்கெடுத்துக் கொள்ளாமல் ஓய்வெடுத்துக் கொள்ள நேரிட்டது நமது துர்ப்பாக்கியம் தான். ஜனாதிபதி போன்ற அலங்காரப் பதவிகளில் கொலு வீற்றிருப்பதைக் காட்டிலும் ராஜாஜி போன்றவர்கள் ஆட்சி முறையில் ஈடுபட்டு உழைப்பது மக்களுக்கு மிகவும் பயன் தரும். ஆனால் அவர் வகித்த பெரும் பதவி இனி அவர் சாதாரண பதவிகளை ஏற்க இயலாமல் செய்து விட்டது.

காங்கிரஸ் ஸ்தாபனம் பிளவுபட்டு, சீர்குலைந்து கிடக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிவதினால் அதன் முழு ஊழல்களும் அம்பலப் படவில்லை. காங்கிரஸைச் செப்பனிடத் தகுதிவாய்ந்த ஞானி எவரும் இல்லை. அரசியல் ஞானம் கொண்ட ராஜாஜி போன்ற தலைவர் அதன் தலைவராக வந்தாலொழிய நிலைமையைச் சமாளிக்க முடியாது. வருகிற தேர்தலில் அவரைத் தேர்ந்தெடுக்குமாறு காங்கிரஸில் பற்றுக் கொண்டவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். ராஜாஜி இது வரை காங்கிரஸ் தலைவராக இருந்ததில்லை. ஜனாதிபதியைக் காட்டிலும் ராஷ்டிரபதி தாழ்ந்தவரல்ல. சீக்கிரம் அப்பதவிக்கு அவரை அழைத்து அவருடைய புத்திக் கூர்மையையும் நிர்வாக சக்தியையும் நாம் பயன் படுத்திக் கொள்வோமாக.

# படிப்பினை

வி. ஜி. ஸ்ரீ.

அறிவிலே தெளிவு கொண்டோன்
அகத்துளே அமைதி கண்டோன்
பொறிதனை யாண்டு வென்றான்
போதமே உருவாம் புத்தன்
எறிதரும் அலைகள் பொங்கி
எழுந்திடும் ஆழிப் பாங்கர்
குறியிலே நோக்க மோடக்
கரையினில் திரியும் காலை, 1

சிறியதோர் அணில்வந் தாங்கே
குறுகிய தன்வால் கொண்டு
எறிதரு நீரில் தோய்த்துக்
கரையினில் சிதறிற் றாமே !
அறிவனும் கண்டான்; உள்ளம்
அளப்பரு வியப்பு மேவ
அறிவிலாச் சிறுவி லங்கைக்
குறித்திது கேட்க லுற்றான் : 2

‘‘அன்புக் குரிய அணிலின் பிள்ளையே!
வம்புக் கெனநீ வால்கொண் டாற்றும்
செய்கை தேரேன், செப்புக நீயே!
மெய்யில் சிறியாய், மதியிலும் சிறியாய்!
அளத்தில் ஆகா அளவும் அமைப்பும்
துளக்கல் ஆகாத் தோற்றமும் காட்டும்
அலைகடல் தன்னை நிலைதெரி யாமல்
குலைத்திடும் எண்ணம் நிலைத்துள் ளாயோ?
குரைத்திடு கடலைக் குறைத்திடு வாயோ?
இரையும் கடலை இறைத்தொழிப் பாயோ?
அறைகுவை எனக்குக் குறிலுரு வணிலே!’’ 3

ஆங்கிது வினவக் கேட்டும்
ஆகுலம் அடையாப் பிள்ளை
ஓங்கிய பெருமை சான்ற
உத்தமன் பக்கல் வந்து
தாங்கிய தகவி னோடு
தக்கது செய்வ தாகப்
பாங்குடன் பணிந்து நின்று
பகர்ந்தநல் லுரையும் கேளீர்! 4

“அன்பும் அழகும் இன்பும் அருளும்
நன்கே அமைந்த பண்புடைப் பெரியோய்!
உருவில் சிறியோன் உளத்தில் வலியோன்
உறுதியும் இதுவே, ஊக்கம் மிகுந்தேன்!
சிறுவால் கொண்டு சீறுமிக் கடலினை
இறைத்திடு வன்யான் இருந்துநீ காண்பாய்!
இரையும் திரைகடல் இறுதியில் வற்றும்
பொறுமையே உருவாய்ப் போந்த போதனே!
நன்றிது நேரும், நின்றிது தேர்வாய்!” 5

என்றது மொழியக் கேட்ட
ஏந்தலும் எண்ண மிட்டான்;
“இன்றிது தெரிந்தேன் திண்மை
இன்சிறு அணிலி னாலே!
‘நன்குரு வாய்த்திட் டாலும்
வன்மன உறுதி வேண்டும்’
நன்றினி உண்மை காண
நனிமிக உழைப்பன் யானே!” 6

என்றிது போல வாங்கு
எண்ணமே யெழுந்த லைப்பத்
துன்புறு வாழ்க்கை தன்னைத்
துணிவொடு துய்ப்ப தாகும்
வன்மன முடைய னாகி
நன்றிதாங் குள்ள மோடு
சென்றனன் சித்த மூர்த்தி
செம்மையாம் நெறியே பற்றி!

ஜனாதிபதி ராஜேந்திர பிரஸாத்



குடியரசு மக்களின் லக்ஷியத் தலைவர் பிரதம மாஜுமி.




Aid
to Beauty
a Guardian
of COMPLEXION
பருந்து சத்துக்கள், தாவர எண்ணெய்கள்—முக்கியமாக வேப்பெண்ணெய்—வாசனைத் திரவியங்கள் இவைகளைக் கலப்பதில் கைதேர்ந்த அனுபவத்தில் உருவானது மலபார் லிம்டா சோப். தொடர்ந்து உபயோகித்தால் சரும நோய்களை அண்டவிடாமல் தடுக்கும். மிருகக் கொழுப்பு சேராதது. உஷ்ணப் பிரதேசங்களுக் கேற்றதோர் அருமையான சோப்.
LIMDA
LIMDA
MALABAR
LIMDA
SOAP
உயர்தரமானதும், புகழ் பெற்றதுமான எமது மற்ற
டாய்லெட் சோப்புகள்:
மலபார்
ஸாண்டல் உட்
கஸ்
கஸ்தூரி
ஹாலிவுட்
ரோஸ்
க்ளோரி (டாய்லெட் சோப்புகளில் தலைசிறந்தது)
VEGETABLE SOAP WORKS, CALICUT.
PROPRIETORS: SAIT N.P. & CO., LTD CALICUT-BOMBAY-2, MADRAS-1.

# தி இண்டஸ்ட்ரியல் & புருடென்ஷியல்

## அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1913)

**தலைமை ஆபீஸ்: பம்பாய்**

முன்னேற்றக் குறிகள்

| | | |
|---|---|---|
| 1948 பிரீமியம் வருமானம் | ரூ. 79.8 லக்ஷத்துக்குமேல் | |
| அமுலிலுள்ள மொத்த தொழில் | ரூ. 1,532 | ,, |
| கம்பெனியின் மொத்த ஆஸ்தி | ரூ. 430 | ,, |
| மொத்த வரும்படியில் செலவு விகிதம் | ரூ. 22.3% | ,, |
| ரினியுவல் பிரீமிய வரும்படியின் விகிதம் | ரூ. 13.5% | ,, |

தேவை

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, வட, தென் மலபார் ஜில்லாக்களுக்கு நல்ல ஸ்பெஷல் ஏஜண்டுகளும், லைசென்ஸ் ஏஜண்டுகளும் தேவை.

விண்ணப்பித்துக்கொள்க:-

பிராஞ்சு மானேஜர்,

10, லிங்கச்செட்டித் தெருவு, ஜி. டி. மதராஸ்.

# DON'T WORRY!!



-Try "**KUMARI**" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless!! Thousands satisfied!!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

"**RASAYAN**" (Tabs.) Gives youthful vigour, increases energy, purifies the blood and valuable in nervous debility and premature old-age. On the whole, it is a BOON to married couples. Each tube Rs. 4/-. 3 tubes Rs. 10-8. (V. P. Extra.)

## Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA-33.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

1. இண்டோ மெடிகல் ஸப்ளைஸ், 29, வைத்யநாத முதலித் தெரு, சென்னை—1.
2. ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்ஹராஜா ரோட், பங்களூர் ஸிடி.
3. ஸிந்தி, 172—A, பிரின்ஸெஸ் தெரு, (ஹனுமான் மந்திர் மேல்புறம்) பம்பாய்—2.
4. எல். எம். முகர்ஜி & ஸன்ஸ் லிமிடெட், 167, தரம்தாலா தெரு, கல்கத்தா
5. இங்கிலீஷ் கம்பெனி, ஆலப்புழை. (திருவாங்கூர்)
6. பயனீர் பார்மஸி, 183, மெயின் தெரு, பேட்டை, கொழும்பு (ஸிலோன்)



ஸத்திய மேவ ஜயதி — குடியரசுப் பிரதிக்ஞை!

# ராஜாஜி விடை பெற்றுக்கொள்ளுகிருர்



தம்முடைய பாதுகாப்பாளரிடமிருந்து



அகதிப் பெண் திலகமிட்டு ராஜாஜியை வழியனுப்புகிருர்.



ராஜாஜியுடன், மிஸஸ். டொராதி நார்மன், மிஸஸ். இந்திரா காந்தி, மிஸ். ஜயராம்தாஸ் தௌலத்ராம்



# நாதன் கோயில்

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

பழங்கள் பலவாம். அவற்றில் மூன்றே மிகவும் விசேஷம். அம் மூன்றும் வாழை, மா, பலா ஆகும். அவற்றை முக்கனி என்பர் தமிழ் நூலார்.

அசல் சிறுமலைப் பழத்திலே, சுவை மிகுந்திராத பாகம் ஏது? ஒட்டுமாங்கனியிலே, உருசி நிரம்பியிராத இடம் உண்டா? வேர்ப் பலாவிலே தித்திப்புத் தேங்கியிராத சுளை இருக்குமோ?

அவ்விதமே, நமது தமிழகத்தில் சரித்திரப் பிரசித்தியோ, சமயச் சிறப்போ, பண்டைப் பெருமையோ, இல்லாத இடம் ஏது? பக்தன் தொட்ட தொட்ட இடந்தோறும் திருமால் தோன்றுவதேபோல், நாம் ஆராயும் இடமெல்லாம் ஓர் அற்புதம் துலங்கும்.

நமது கும்பகோணம் ஒருசமயம் சோழ வேந்தரின் ராஜதானியாக விளங்கா நின்றது. அப்பாலோ, தஞ்சை நாயக்க வேந்தர், மகாராஷ்டிர மன்னவர் இவர்களுக்கு ஒரு தனி நகராகத் துலங்கியது. அப்போதெல்லாம், அந் நகரின் பரப்பு முப்பது மைல்.

கும்பகோணம் எனப்படும் திருக்குடந்தை ஒரு புறமிருக்கட்டும். அதனைச் சுற்றியுள்ள சோழ மாளிகை, சாக்கோட்டை, சத்திமுற்றம், தாராசுரம், திருவலஞ்சுழி, நாதன் கோயில் முதலியனவும் முன்னம் மகிமை வாய்ந்த நகரங்களாய், பெருமைபெற்ற தலங்களாய்த் திகழாநின்றன. இப்போது அவையெல்லாம் குக்கிராமங்களாக இருப்பினும் என்ன?

நாதன் கோயில் என்னும் நல்ல கிராமம் முன்னாளிலேயே மொய்ம்பு வாய்ந்த பெரு நகராகவே இருந்தது. திருமங்கை மன்னன் அதனை நந்திபுரம் என்றே அழைக்கிறார். பெரிய பட்டணங்களுக்குத் தான் புரம் என்ற அடைமொழி உண்டு. இதற்குத் திரிசிரபுரம் என்பதே சான்றாம்.

மேலும், நாதன் கோயிலை நந்திபுர விண்ணகரம் என்றும் தமது பாசுரத்தில் பேசுகிறார் அக்கள்ளாழ்வார். வைணவப் பெரியார்களோ, திருப்பரமேச்சுர விண்ணகரம் என்று அதனை வழங்குவர். அங்கே எழுந்தருளியுள்ள ஆண்டவனது திருநாமம் நாதன் என்பதாம். ஆதலின், நாதன் கோயில் என்று பெயர் பெற்றது. திருவரங்கம் பெரிய கோயில் என்பதைப் பார்க்கவும்.

ஆதியிலே பல்லவர் என்னும்பேரரசர் வடக்கே கிருஷ்ணை நதிக்கும் தெற்கே காவேரிக்கும் மத்தியிலுள்ள பூப்பரப்பை ஓர் எழுநூறு வருஷகாலம் ஆண்டு வந்தனர். தமிழகம் முழுவதிலும் அவர்கள் ஒரு சமயம் கொடி தூக்கியதுண்டு. அவ் வேந்தர்கள் அனைவரும் மகா தெய்வ பக்தர்கள். அவர்களிலே, எட்டாவது தலை முறையில் வந்தவன் நந்திவர்மன் எனப்படுவான்.

அந்நந்தி வர்மன் சோழ நாட்டின் மீதும் தனது ஆட்சியைப் பரப்பினான். அப்போது குடமூக்கு எனப்படும் குடந்தைக்கு அடுத்த நாதன் கோயில் நாதன் மீது அந்தரபதி மிக்க ஈடுபாடு கொண்டான். உடனே நாதன் கோயிலை நனி சிறந்த நகராக்கினான். ஆண்டவனுக்கு அரிய திருப்பணிகள் பலவும் அன்போடமைத்தான்; அதனை ஒரு தலைநகராகவும் சமைத்து அங்கே வாழ்ந்து வந்தான்.

ஆதலினால், நந்திபுரம், நந்திபுர விண்ணகரம் என்னும் பெயர்கள் எழலாயின. பத்தாவது திருமொழியிலே திருமங்கை ஆழ்வார் அருளியிருக்கும் திவ்ய பாசுரம் பாருங்கள்.

தந்தை மனம் உந்து துயர் நந்த
இருள்வந்த விறல் நந்தன் மதலை
எந்தை இவன் என்று அமரர்
கந்தமலர் கொண்டு தொழநின்ற
நகர்தான்,
மந்த முழவு ஓசை மழையாக
எழுகார் மயில்கள் ஆடுபொழில் சூழ்
நந்தி பணி செய்த நகர்
நந்திபுர விண்ணகரம் நண்ணு
மனமே!

இனி, மற்றோரிடத்திலே அந்த ஆழ்வார் திருவாய் மலர்ந்திருப்பது இதுவாம்:-

பல்லவன் வில்லவன் என்று உலகில்
பலராய்ப் பலவேந்தர் வணங்கு கழல்
பல்லவன்! மல்லையர்கோன்! பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே!



உட் பிராகாரம்

நாதன் விஷயத்தில் அந்நந்தி வர்மன் ஈடுபட்டதும், திருப்பணி புரிந்தான்; தமிழக ஆட்சி தாங்கியதும் தனி நகர் அமைத்தான்; நாதனருகே தங்கி வாழவும் விரும்பி, அங்கே மாளிகை எழுப்பினான்; கோட்டை கட்டினான்; அலங்காரம் பலவும் புனைந்தான். அங்கேயே வதிந்து, தினம் நாதனைத் தொழுதேத்தி வந்தான்.

நாதன் உறைகின்ற நகர், நந்தி வர்மன் துதிக்கும் நகர், ஆதலின் "மண்ணில் இது போல் நகரில்லை" எனவும் அந்த ஆழ்வார் அருளியிருக்கிறார். நந்திபுரத்தைக் குறித்து அவரது திருமொழிகளிலுள்ள இருபது பாசுரங்களையும் ஊன்றிப் பார்த்தால், அங்கெங்கும் மாட மாளிகை, கூட கோபுரம், பூம்பொழில்கள், வளமிக்க வாவிகள், பக்தரின் உறைவிடங்கள் முதலியன நிரம்பிக் கிடந்தன என்றே நாம் கொள்ள வேண்டும்.

தான் மட்டும் நாதனைத் துதிப்பதில், அவன் திருப்தி கொள்ளவில்லை. தனது மகிஷியரையும் சுற்றத்தாரையும் அழைத்து வந்து, நாதனிடம் ஈடுபடுத்தினான். வசந்த கால வாசஸ்தலமாகக் கொண்டான்; விழாக்கள் பல நடத்திக் களிப்பு மிகுந்தான்; தமிழ்ப் புலவர்களைக் கூட்டி வைத்துத் தமிழின்பம் பருகி வந்தான். தமிழ் என்றால் அவனுக்கு உயிர். தமிழின்பமே அவனுக்குப் பேரின்பம். அதுவே அவனுக்குப் பரமானந்தம்.

"நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்" என்பர் "சோமேசர் முதுமொழி வெண்பா" என்னும் நூலின் ஆசிரியர். தமிழின்பத்தை உணர்ந்தனுபவிக்க விரும்பி, அவன் தனது உயிரையும் வழங்கிய கதை அதியற்புதமாகும். அதனை இங்குரைக்க இடமில்லை. "பாரத வெண்பாப் பாடிய" பெருந்தேவனார் என்னும் புலவர் அந்நந்தி வர்மனது குண நலங்களைக் குறித்து ஓதியிருக்கும் பாடல் இது:-

வண்மையால் கல்வியால்
மாபலத்தால் ஆள் வினையால்
உண்மையால் பார் ஆளும்
உரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வான் ஏறத்
தெள்ளாற்றில் வென்றானோடு
யார் வேந்தர்
ஏற்பார் எதிர்!

அத்தகைய ஆண்மை படைத்தவனது தாயாதிகளில் ஒருவனான சித்திரமாயன் என்பான் அவன்மீது அசூயை உற்றான். நாதன் கோயிலிலே தங்கியிருக்கும் சமயம், அவனை மாயமாக வதைக்க முயன்றான்; தூங்கும் சமயத்தில் சுவரிலே கன்னம் வைத்துப் படுக்கையறையில் புகப் பார்த்தான்.

அப்போது, நாதன் கோயிலைச் சார்ந்த கம்மியனொருவன் சமைத்துத் தந்த யந்திரக் கட்டிலொன்றிலே அந் நந்திவர்மன் படுத்திருந்தனன். படுத்துறங்கும் காலையில், அக்கட்டில் மெல்லிய சத்தம்செய்யும். அது கீதம்போல் இனிமையாக இருக்கும். உறக்கத்தை ஒரு நொடியில் அழைக்கும். அதனை இன்பமயமாகவும் ஆக்கும்.

கன்னம் வைத்து உள்ளே புகமுயன்ற சித்திர மாயன் அந்த அரவங் கேட்டுக் கன்ன வாசலில் விழித்து நிற்கலானான் தன் துணைவருடன். சிறிது நேரத்திற்கெல்லாம், நந்தி



கோயில் விமானம்

வர்மன் விழித் தெழுந்தான்: கன்ன வாசலை நோக்கினான்; உடனே கட்டிலை விட்டிறங்கி எட்ட நின்றான் கைதனில் கத்தியுடன்.

உள்ளே அரவம் அடங்கியது கண்டதும், கொலையாளரில் ஒருவன் அக்கன்ன வாசல் வழியே சிரத்தை நீட்டி, உள் புறம் நுழையப் பார்த்தான். பார்க்கவே, அக்கொலைஞன் தலை வெட்டுண்டு வீழ்ந்தது. அவ்வாறே பதின்மர் அந்நந்தியின் உடைவாளுக்கு இரை ஆயினர். உள்ளே புகுந்தவர்களில் ஒருவரும் திரும்பி வரவில்லை.

அது கண்டு சித்திர மாயன் சிந்தாகுலங் கொண்டான். யாது செய்வதெனத் தோன்றவில்லை. அத்தருணம், அருகேயிருந்த ஒரு குயக் குல மகன்-சித்திர மாயனது தோழன்–அந்நாதன் கோயில்வாசி—தனது நேசனுக்கு ஆறுதல் கூறினான்; கூறியதும், சம்பொன்றில் ஒரு சட்டியை மாட்டி, உள்ளே நீட்டினான். நள்ளிருளிலே அதனையும் தலையென மதித்து வெட்டிச் சாய்த்தான் நந்தி வர்மன்.

பின்னர் உண்மையுணர்ந்த சித்திரமாயன் ஓட்டம் எடுத்தான். என்றாலும் நந்தியைச் சிதைக்கும் ஆசை அவனை விட்டகலவில்லை. நண்பனாகிய குயக் குல மகனுடன் ஆலோசனை செய்தான். தக்க காவல் படையின்றி நாதன் கோயிலில் தங்கியிருக்குர் நந்தியைத் தமிழ் வேந்தரின் துணைகொண்டு மாய்க்கவேண்டும் என்றான் அக்குயவன்.

சுருங்கச் சொன்னால், சேர, சோழ, பாண்டியரின் துணைகொண்டு கிளம்பினான் சித்திர மாயன். தனியரசை இழந்தோமேயென அம் மூவேந்தருக்கும் நந்திமீது வர்மம் உண்டு. பகைப்படை திரண்டுவந்து, நாதன்கோயிலைச் சூழ்ந்து கொண்டது. கூண்டில் சிக்கிய சிங்கமே போல நாதன்கோயில் கோட்டைக்குள்ளே மாட்டிக்கொண்டான் நந்திவர்மப் பல்லவன்.

உயரிய படையுமில்லை, உற்ற துணையுமில்லை, என்னசெய்வான் நந்திவர்மன்! நாதனைத் துதித்து, நீயே கதி என்றான். அவ்வளவில், காஞ்சிபுரத்தையடுத்த வேகவதி நகரிலே உறங்கிக்கிடந்த உதயேந்திரன் என்பான்— நந்திவர்மனது உயிர்க்குயிரான தளவாய்— கனவுகண்டு விழித்தெழுந்தான்; தனது வேந்தனுக்குத் தீதுநேர்ந்த தெனக் கடுகி வந்தான் பெரும்படையுடன்.





அவ்விதம் வந்த படையோ பகைப் படையைப் பின்புற மிருந்து தாக்கியது. அதுகண்டு சேரனும் சோழனும் தளர்ந்து பின் வாங்கினர். பாண்டிய வரசனும் பின்வாங்கினானாயினும் தனது படையை மீண்டும் அணிவகுத்து, மண்ணைக் குறிச்சி என்னுமிடத்தில் மண்டமர் புரிந்தான்.

அங்குமட்டுமா? இன்னும் பல இடங்களிலும் சண்டை மூளுகிறது. எங்கும் பகைவரைப் புறங்கண்டு, நந்திவர்மனுக்கு வெற்றி தேடித் தந்தான் உதயேந்திரன். இது நாதன்கோயில் ஆண்

டவனது அருளேயென்று, அரசனும் தளபதியும் அம்மூர்த்தியை ஏத்தித்துதித்தனர்.

உலகுடை மன்னவன் தென்னவனைக்
கன்னிமா மதிள்சூழ் கருவூர் வெருவ
பலபடைசாய வென்றான் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே!

என்று அவ்வெற்றியைக் குறித்து ஆழ்வாரும் பாடிப்போற்றியிருக்கிறார். நாதன் கோயில் நாதனே, நந்திவர்மனை ஆபத்திலிருந்து காத்தளித்தான் என்பதே பாகவதர்களின் நம்பிகை.

அத்தகைய நாதன்கோயில் நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்றாம்; திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்திருப்பதினால், இன்றும் ஒரு குக்கிராமமாகவேனும் நிலைநிற்கிறது நாதன்கோயில். பத்தாம் நூற்றாண்டுவரையில் தனிச் சிறப்புடன் துலங்கிய திவ்ய நகரம் அது!

நந்திவர்மப் பல்லவனது காலத்திலும் சரி, அதற்குப் பின்னாளிலும் சரி, மேலே சொல்லிய அற்புத யந்திரக் கட்டிலும், பலவாறான சூஸ்திரப் புதுமைகளும் செய்யவல்ல கம்மியர் பலர் அந்நாதன் கோயிலையடுத்த சீமையில் சிறந்திருந்தனர்! எத்தகைய யந்திரமும் ஆக்க வல்லவர் அக் கம்மியர்!.

தமிழக மெங்கும் அக் கம்மியரின் யந்திர வேலையும் நுட்பமும் தலை சிறந்திருந்தன. இடைக்காலச் சோழவரசரின் நாளிலும் அக் கம்மியர், ஆடும் மயிலும், அசையும் மஞ்சமும், ஓடும் குதிரையும், உறுமும் சிங்கமும், செய்தமைத்துச் சம்மானம் பெற்றதாக அறியக் கிடக்கின்றது.

அத்தகைய சூஸ்திரத் தேர்ச்சிக்குப் பேர் போன நாதன்கோயிலையடுத்த இடங்களிலே, இப்போது பித்தளை, ஈயப் பாத்திர வேலை மட்டும் விழுமியதாக நிலவி வருகிறது! எல்லாம் கால சக்கரத்தின் சுழற்சிபோலும்!


இன்ஷ்யூர் செய்யவும், ஏஜன்ஸி எடுக்கவும்:

## ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

### கல்கத்தா

மிகுந்த முன்னேற்றமடைந்துள்ள இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனம்.

அபிவிருத்தியின் புள்ளி விபரங்கள்:

| | | |
|---|---|---|
| புது பாலிஸிகள் | — | ரூ. 13,18,57,258 |
| நடைமுதலில் இருக்கும் பாலிஸிகள் | — | ரூ. 63,42,26,959 |
| ப்ரீமிய வருமானம் | — | ரூ. 2,95,80,454 |
| ஆயுள் நிதி | — | ரூ. 12,07,20,461 |
| மொத்த ஆஸ்திகள் | — | ரூ. 13,41,51,007 |
| பாலிஸிகள் அறிவிக்கப்பட்டதும் பட்டுவாடா செய்யப்பட்டதும் (1948) | } | ரூ. 67,71,446 |

ஏஜன்ஸிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விபரங்களுக்கு: தி டிவிஷனல் மானேஜர்,
ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்,
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
107, அரமனைக்காரத்தெரு, ஜி. டி. மதராஸ்-1.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

# மதிப்பில்லா மாணிக்கம்

**வே. ரங்கராஜன்**

'ஏன் இன்னும் வரவில்லை?' என்ற வினா மீண்டும் மீண்டும் செந்திலகவல்லியின் மனதுள் எழுந்து ஆழ்ந்தது. அவளால் அதற்கான காரணத்தைக் கற்பனை செய்ய முடியவில்லை. வளர்ந்து மலரும் முழு நிலவன்று பொங்கிப் பெருகும் சாகரமென அவள் உள்ளம் அலமந்து குமுறிற்று. அவள் என்னவெல்லாமோ நினைத்தாள்; எல்லையின்றிச் சிந்தித்துச் சோர்வுற்றாள். 'ஏன் வரவில்லை?' என்ற வினாவே அவள் இதய அந்தரங்கத்தினின்றும் மீண்டும் எழுந்தது.

பிரிவால் பசலை போர்த்து வாடிய தன் மயல் இனிமையைக் காண விரைந்து கொண்டிருந்தான், பகலவன், அந்திச் செவ்வானத்தின் மலை முகடுகளுக்கு இடையில். பூ பவனியின் சோர்வு அகலவே போன்று, மந்தார விருட்சங்கள் தம் மலரை உதிர்த்து அவனை வழியனுப்பின, பிரிவின் அந்தியில் பிணைப்பின் வாயிலில் நின்ற கதிரவன் எவ்வளவு அவசரப்பட்டுத் துடித்தான்! செந்திலகவல்லி அதையும் பார்த்தாள். கமலங்கள் குவிந்து கூம்புவதையும் கண்டாள். பறவையினங்கள் கெக்கலித்துக் கூடு திரும்புவதையும் கேட்டாள். எங்கிருந்தோ எழுந்த ஒரு சந்தியா கால சங்கநாதமும் அவள் செவியுள் நுழைந்து இதயத்துள் ஒன்றியது. அத்துடன் அவளது கடைசி நம்பிக்கையும் இற்றுக் குலைந்தது. விடுபட்டோடும் கூண்டுக் கிளியைப்போல வெப்பம் மிகுந்த பெருமூச்சொன்று அவள் மார்பகத்தை நழுவி மறைந்தது.

செந்திலகவல்லி அதன்பிறகு தன் காதலனை மறந்தாள்; தன்னை மறந்தாள்; வந்து தங்கிய மலைச்சாரலை மறந்தாள். அந்தி மங்கிய அந்த வேளையில் சாதக பட்சியைப் போலத் தன் இல்லம் நோக்கி நடந்த அவள், இப்படி அப்படி திரும்பிப் பார்க்கவில்லை. அவள் நினைவெல்லாம் வாய்மொழி பிறழ்ந்த தலைவன் மீதே இருந்தது. இப்படியெல்லாம் ஏமாற்றப்படுவதற்குத்தான் தான் பெண்ணாய்ப் பிறந்தாளோ என்று அவள் தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

காதல் வசப்பட்ட அந்தக் குமரியின் மனம் எங்கெல்லாமோ சிந்தித்துத் திரிந்த போதிலும், அவள் கால்கள் எட்டி நடையிட்டன. நகர் எல்லையை வெகு விரைவில் அடைந்துவிட்டாள். அதற்குள், மயங்கிய அந்தி, கங்குலில் தோய்ந்துவிட்டது.

பசும் சாணம் தெளித்து, பிறைவட்டமாகப் பெருக்கிய தலைவாயில் மருங்கெங்கும் அழகழகான மாக்கோலம் இருண்டுவந்த கங்குலிலும் வெள்ளெனத் தோன்றியது. வெண் சங்கம் இடைவிட்டுக் கட்டிய முத்து வரிசை என வாயில் மருங்கெங்கும் துலங்கிய அகல் விளக்குகளைப் பார்த்த பிறகுதான் செந்திலகவல்லிக்கு அன்று கார்த்திகை என்ற நினைவு வந்தது. அந்த உற்சாகத்தில், 'ஆ! என்ன அசட்டுக் காரியம் செய்துவிட்டேன்?' என்று அவள் தன் செவ்விதழ்களைச் சற்றே பற்களால் நமுடிக் கொண்டாள். அதைத் தொடர்ந்து அவள் முகத்தில் ஒரு சோக ரேகையும் படர்ந்து மறைந்தது.

அவள் நினைத்தாள் : "ஆமாம்! மறதியும் ஒரு நன்மைக்குத்தான். இல்லாவிட்டால் மூத்தவள் நடமிடும் குடிசைக்குக் கோலமும் அகல் விளக்குகளும்தான் குறையோ! அகல் விளக்குகளுக்கு வார்க்க நெய்க்கு எங்கே போவது? அப்பா பெரிய புலவர்தான். இருந்தாலும் என்ன? அவரிடம் வேண்டுமானால் அடுக்கடுக்காகப் பனை ஓலைச் சுவடிகள்தான் இருக்கின்றன. அவைகளைக் குடிசையின் முன் அடுக்கி எரிந்தால்தான் மூத்தவளை ஓட்டினாலும் ஓட்டலாம்!

இந்த எண்ணத்தின் கசப்பு அவள் மனதை விட்டு அகலுமுன், ஒரு இனிய காட்சி அவள் கண்முன் தென்பட்டது. வெண்கலச் சலங்கைகளின் கிண்கிணி நாதத்தை ஒக்கும் இனிய பேச்சும் சிரிப்புமாக ஒரு இளம் தம்பதிகள் குமரக் கடவுளின் திருக் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தனர். கட்டுக் குலையாத உடல் வனப்பும் இளமை துள்ளும் அங்க நலங்களும் வசீகரத் தோற்றமும் பெற்றிருந்த தன் தலைவனின் பேச்சில் என்ன இனிமையைக் கண்டாள் அந்தப் பெண்! அவன் மட்டும் என்ன? அழகே உருவான தன் மனைவியின் சிரிப்பிலே சொக்கி மெய் மறந்தல்லவோ போனான்! தங்களையும் சூழ் நிலையையும் மறந்த அவர்கள் கந்தர்வ லோகத்தில் தேவ காதலர் சஞ்சரிப்பதைப்போலச் சென்றார்கள் என்று தான் சொல்லலாம். காதலர் செல்வதையும் அவர்கள் பின்னே பணிப் பெண் ஒருத்தி பூஜைக்கான மலர்



கனி வகை ஏந்திச் செல்வதையும் இமை கொட்டாது நோக்கிய செந்திலகவல்லி பிரமித்து நின்றே விட்டாள். சேர மன்னன் பெருஞ்சேரலிரும்பொறை பவனி வரும் அந்த ராஜ வீதியின் இரு மருங்கிலும் ஒளி வீசிய அகல் விளக்கின் கூட்டங்களிடையே அவள் மனத்துள் ஒரு அந்த காரம் குடி கொண்டது!

தன் முன் சென்ற காதலர் இருவரையும் அவளுக்குத் தெரியும். ஆமாம்!—அவர்களின் பெயர்கூட இப்போது செந்திலகவல்லியின் நினைவிற்கு வந்தன. கருமுத்து செட்டி என்னும் மிளகு வணிகரின் கடைசி மகள் அவள். அவளது தந்தை அரிசில் கிழாரிடம் பின்ன கணிதமும், தமிழ்ப் பாடமும் கற்றவன் அவன். அவள் பெயர் மலையவதி! சிறு வயதில் செந்திலகவல்லியுடன் மணல் வீடு கட்டி விளையாடிய பெண்!—இன்று அவள் எங்கே? ஏழைப் பெண்ணான தான் எங்கே? தன் காதல் எங்கே?

அவள் பெண் மனம் சென்ற காலத்தை எட்டிப் பிடித்தது. தனக்கும் பேரெழினிக்கும் காதல் உண்டான சம்பவம் நேற்று நடந்ததைப் போல் அவள் நினைவிற்கு வந்த்து. அதைத் தொடர்ந்து அவர்கள் பலமுறை சந்தித்ததும் அவர்கள் காதல் வளர்பிறை போல் பெருகியதும் கனவா என்ன? சொல்லும் இடமும் தவறிய காதலன் காதலையும் களவில் நடந்த நட்பையும் மறந்து விடுவானோ! வறுமை என்ற பாலை வெளியிலே நின்ற அவளுக்குத் தலைவனது நட்பு ஒரு சோலை நிழல் என ஜீவனளித்து வந்தது. வறுமையின் வெம்மை காரணமாக அதையும் அவள் இழக்க வேண்டியது தானா? தன் காதலன்மீது இருந்த கோபமெல்லாம் தன் தந்தையின் மீது மாறிற்று. அவள் தனக்குத் தானே பேசிக் கொண்டாள்: 'அப்பாவா அவர்? நல்ல அப்பா! புலமை, காப்பியம், கலையாக்கம் என்ற பெயர்களைச் சொல்லிக் கொண்டு என்னையும் அம்மாவையும் ஏழ்மைத் தீயிலே போட்டு வாட்டுகிறார். அகத்தியம் அறியாத மிளகு வாணிகரின் மாளிகை எங்கே! நன்னூல் கண்டிலா யவனரின் செல்வ வளமெங்கே! தன் தந்தையின் ஏழ்மையும் தரித்திரமுமெங்கே?'

அவள் கோபமெல்லாம் பெருகி எழுந்ததைப்போல அவள் கடையில் ஒரு மிடுக்கு ஏறிற்று. தன்னையும் சூழ்நிலையையும் கசந்து வெறுத்த அவள் குறியிட்டு எய்யப் பெற்ற அம்பெனத் தன் இல்லம் சேர்ந்தாள். அவள் வீட்டுள் நுழைந்த அந்த நேரத்திலே கலவைக் கீரை சுண்டும் மணம் எழுந்து வந்தது. குடிசையுள் நிலவிய அந்தகாரத்தை மிகைப் படுத்தி மின்னிட்ட அகல் விளக்கின் முன்

உட்கார்ந்து ஒரு புத்தோலைச் சுவடியில் எழுத்தாணியை ஓட்டிக் கொண்டிருந்தார்.

## 2

புலவர் அரிசில் கிழார் தம் வறுமையைச் சற்றே மறக்கமுடிந்தது என்றால் அது தம் மனைவி முத்தம்மையின் குண விசேஷத்தால் தான் என்று கூறலாம். புலவர் விரும்பிய ஆதர்ச மனைவி அவள். அத்துடன் அவர் செய்த பூர்வ புண்ணிய வசமாகத்தானோ என்னவோ செந்திலகவல்லி என்ற ஒரே மகளுடன் அவர்களது புத்திர சந்தானம் முழுமை பெற்றது. அரிசில் கிழார் தம் வறுமையைச் சகித்து வாழ ஊக்கியது அவரது கவிதா ஆர்வம் என்று கூறலாம். தம் இதய அந்தரங்கத்திலே அதற்குத் தனி இடம் அளித்துப் போற்றி வந்தார் அவர். அதற்கு அடுத்தபடியாக அவரை உலக பந்தத்தில் ஈடு படுத்தியவை புதல்வி செந்திலக வல்லியின்மீது இருந்த ஆசையும் மனைவி முத்தம்மையின்மீது இருந்த அன்பும் என்றே கூறலாம்.

கலவைக் கீரைச் சுண்டும் தினைக் களியும் தயாரித்து முடித்த முத்தம்மை அடுப்பங்கரையை விட்டு எழுந்தாள். சமையல் பாத்திரங்களை ஒழுங்கு படுத்திய பிறகு, புழக்கடைப் பக்கம் சென்று மூன்று வாழை இலைகளைக் கொய்து வந்தாள். அதன் பிறகுதான், 'நீராடி வருகிறேன்!' என்று சொல்லி, சோலைச் சுனைக்குச் சென்ற தன் மகள்மீது அவள் நினைவு ஓடியது.

ஏதோ ஒருவிதமாக உணவருந்தி உறங்கி அன்றைப் பொழுதைக் கழிப்போம் என்ற நிறைவுடன் சென்ற முத்தம்மை தன் மனம் துணுக்குறும் வணணம் அழுகுரல் கேட்டாள். பசியால் தளர்ந்த பெற்ற வயிறு பதைக்க அவள் செந்திலக வல்லியின் அருகே அமர்ந்தாள்.

அழுகை எழுந்து வந்தது. கற்பனையின் சிகரத்திலே சஞ்சரித்துக்கொண்டிருந்த புலவர் அரிசில் கிழாரின் மனம் ஸ்தம்பித்தது. ஓலைச் சுவடியையும் எழுத்தாணியையும் கீழே வைத்துவிட்டு எழுந்தார்.

தந்தையும் தாயும் எவ்வளவோ கேட்டுப் பார்த்தார்கள். செந்திலகவல்லி மேலும் விசித்து அழுதாளே தவிர வாய்திறந்து பேசவில்லை. நீண்ட நேரம் குமுறியழுது ஓய்ந்த அவள் அவ்விடத்தைவிட்டு எழுந்திருக்கவும் இல்லை; உணவருந்தவும் இல்லை.

தினைக் களியும் சுண்டிய கலவைக் கீரையும் ஆறி உலர்ந்தன. அகல் விளக்குத்தானே எரிந்து மங்கி அவிந்துவிட்



டது. கற்பனைக் கவி உலகிலே சஞ்சரித்த அரிசில் கிழார் அன்றுதான் உலகியலில் மனதை ஓட்டினார். தம் மகளின் அழுகைக்குரிய காரணம் அவருக்கு ஓரளவு விளங்கியது. தம்முடைய கடமையையும் தெள்ளத் தெளிய உணர்ந்தார். அதனால் அவரது பசியும் உறக்கமும் எங்கோ மறைந்தன. மோனம் நிலவிய இரவு முழுதும், துறை காணாது தவிக்கும் மாலுமியைப் போல, மகளின் குறை முடிக்கும் வழி காணாது மயங்கி உருக்குலைந்து போனார்.

நடுச்சாமக் கோழி பயங்கரமாகக் கூவியது. அதன்பிறகு நிலவிய ஒரு நாழிகை மயான அமைதியிலே மின்னல் என ஒரு எண்ணம் அவருள் எழுந்தது. அதன் பிறகுதான் அவர் அமைதி கண்டார். சோர்வினால் கண்ணயர்ந்துபோன முத்தம்மையையும் கண்ணீரின் சுவடு கலையாதிருந்தும் ஆழ்ந்து உறங்கிவிட்ட மகளையும் கண்டு ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்ட அரிசில் கிழார் குடிசையின் வாயில் கதவை மூடித் தாழிட்டார்.

பாயை விரித்துப் படுத்த பிறகும் அவருக்கு நித்திரை வரவில்லை. ஒரு அரிய கவிதையைச் சிருஷ்டிக்கும் சிந்தனையில் மனம் ஈடுபட்டு விட்டது.

## 3

தம்முள் கருவுற்ற கவிதைக் கருவூலத்திற்கு மணிமணியான வரி வடிவம் கொடுத்துச் சிருஷ்டி செய்துமுடிக்க ஒரு ஊழிக் காலம் கடந்துவிட்டதைப் போன்ற பிரமை உண்டாயிற்று அரிசில் கிழாருக்கு. கவிதையின் உயர்வை ஒப்பிடும்போது காலம் என்னவோ மிகச் சொற்பம் என்றுதான் சொல்லவேண்டும். சுக்கிலபக்ஷ துவாதசியன்று ஆரம்பமான கவிதை அமரபக்ஷ பஞ்சமியன்று முடிந்தது.

இந்தச் சிறுகால இடையீட்டிற்குள் தம்முள் விவரிக்க முடியாத சில மாறுதல்கள் உற்பவித்து விட்டதை அரிசில்கிழார் உணர்ந்தார். உடலில் ஒருவிதத் தளர்ச்சியும் மூப்பும் தொடங்கிவிட்டதாகப் பிரமை தட்டிற்று. ஒருகால் அந்தக் கவிதையேதான் தன் கடைசிப் பாட்டாக இருக்குமோ?

* * *

அன்று சோமவாரம். சூரியன் எழுமுன் எழுந்து நீராடி, கல்லுடையணிந்த புலவர், கவிதைத் தேவியை வணங்கி, அரசமாளிகையை நோக்கி நடந்தார்.

புலவரின் கையிலே இருந்த புத்தோலைச் சுவடியைக் கண்ட மன்னன் அவரது குறிப்பை உணர்ந்துகொண்டான். புவிப் பொறை வியவகாரங்களிலே ஈடுபட்டுக் களைத்திருந்த அவனது உள்ளம் கவிதை இன்பத்தில் திளைக்க விழைந்தது. அவையினரும் தானும் கோயிலாளும் கேட்டு மகிழும் வண்ணம் புலவர் தம் புதிய கவிதையைக் கூறும்படி கேட்டுக்கொண்டான்.

தேன்மடை விண்டதெனக் கவிதையைப் பொழிந்தார், அரிசில் கிழார். தம்முடைய ஒரே மகள் செந்திலக வல்லியின் சோகமுகத்தைக் கண்ணெதிரே நிறுத்திக் கவிதையைச் சிருஷ்டித்த அரிசில்கிழார் உளம் நெகிழ்ந்து நெக்குருகிப் பாடினார். ஆய்ந்து எடுத்துக் கோத்த நல்முத்துக்களைப் போன்ற அரிய இனிய சொற்கள் கவிதையை ஜீவனுடன் சோபிக்கச் செய்தன. யாழுக்கு அடங்கும் மத்த கஜத்தைப்போல், தகடூர் எறிந்த பெரும்சேரலிரும் பொறை கவிதைக்கு உருகி மெய்மறந்து போனான். கவிதைக் காட்சிகள் அவன் கண்முன் உருண்டு ஓடின.

கவிதையின் சிறப்பைச் சீர்தூக்கிய சேர மன்னன் அதை ஒப்பு உயர்வற்றதாக மதித்தான். 'மதிப்பில்லா மாணிக்கங்களைச் சரம் கோத்ததுபோலக் கவிதை புனைந்திருக்கிறார் அரிசில்கிழார்! அவருக்கு யான் அளிக்கும் பரிசு என்னவாகும்?' என்று சிந்தித்த மன்னர் பெருந்தகை வழியொன்று கண்டான். மகுடத்தைக் களைந்தான். உடைவாளையும் எடுத்து வைத்தான்.

''கவிச் சக்ரவர்த்தியே! யான் வேண்டுகிறேன். மதிப்பில்லா மாணிக்கங்கள் போன்ற தங்கள் கவிதைகளுக்குப் பரிசிலாக இவ்வரசுப் பீடத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்! நான் வேறு எப் பெரும்பொருள் கொடுக்க வல்லேன்?'' என்று சொல்லி, தன் கோயிலாளை அழைத்துக்கொண்டு சிம்மாசனப்படிகளைக் கடந்து நடந்தான்.

மன்னன் வதனத்திலே சந்தோஷம் சுடர் விட்டுப் பிரகாசித்தது.

மன்னன் அவையில் வீற்றிருந்த மூதூர்ப் பெருமக்கள் யாரும் மலைத்துப் போகவில்லை. போரில் சிங்கம் போன்ற மன்னன் கொடையில் குமணன் போன்றவன் என்பதை அவர்கள் அறிந்தே இருந்தார்கள். இருந்தாலும்......?...?...?

அவையினரின் கண்கள் எல்லாம் அரிசில் கிழாரின் பக்கம் திரும்பின. கற்பனையின் சிகரங்களை எல்லாம் எட்டிப் பிடித்த கவிதை மன்னன் அப்போது மலைத்து நின்று கிடந்தார். கலங்கிய கண்கள் நீர் மல்கிப் பார்வை இழந்தன. வாய் பேச்சற்றுப் பின்னியது.

## 4

மன்னன் அவையைக் கடந்து போய்க் கொண்டே இருந்தான். ஓடிச் சென்று மன்னனை வழி மறித்துக் கொண்டார் புலவர்.

"ஒரே ஒரு பிச்சை!" என்று கெஞ்சினார்.

அரசன் மலைத்து நின்றான். 'இது என்ன? இன்னும் யான் கொடுக்க வல்லது ஏதேனும் உண்டோ?' என்று மறுகிற்று அவன் உள்ளம். "புலவரே! கேளும்!" என்றான் அச்சத்துடன்.

"இந்த அரசை நீங்களே மீண்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும்! அதுவே என் பிச்சை!—நான் வேண்டுமானால் தங்கள் மந்திரியாக இருந்து அரசு செழிக்க உதவுகிறேன்!" என்றார் ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு.

மன்னன் பிரமித்துப் போனான். புலவர் இப்போது வெறும் கவிச் சக்ரவர்த்தியாகத் தோற்றவில்லை. புவிச் சக்ரவர்த்தியாகவும். கொடைச் சக்ரவர்த்தியாகவும் தோற்றினார். சால்பு மிக்க புலவரை மார்புறத் தழுவினான் பெருஞ்சேரலிரும் பொறை, வேல் எய்து தழும்பேறிய தன் கைகளால்.

* * *

பருவங்கள் மாறி மறைந்தன. செந்திலகவல்லி இப்போது செல்வத்தின் சுக போகத்திலே இருந்தாள். ஆனால்......? அன்னத்தின் அடிவயிற்றைவிட வழு வழுப்பான பட்டாடைகள் கூடப்பசலைபோர்த்த அவளது உடலிலே உறுத்துவதாகப்பட்டது. மாலையின் வரவும் சோலையின் இனிமையும் அவளைச் சித்திரவதைக்கு உள்ளாக்கின. கிளிகளின் பேச்சிலும் குயில்களின் கூவுதலிலும் "பேரெழினி!.........பேரெழினி!" என்ற பெயர் ஊடுருவி வருவதைப்போல் அவளுக்குப் பிரமை உண்டாயிற்று. பொருள் தேடி வந்து அவளை ஊர் அறிய மணம் முடித்துக் கொள்வதாகச் சென்ற தன் காதலனை எண்ணி எண்ணி அவள் உள்ளம் உடைந்து, உடல் உருக் குலைந்தது.

ஒரு இளவேனில் மாலைப் பொழுதிலே பேரெழினி திடீரென அவள் முன் தோன்றினான். சுருதி கலைந்த வீணையைப் போன்று உடைந்து நைந்துபோன அவளது சோக உருவத்தைக் கண்டு அவனால் பேச இயலவில்லை. வருவதாகச் சொன்ன அதே சூழலிலே, தான் தேடிவந்த பெருந்தனத்தின் சின்னங்களான முத்து மாலைகளையும் நவரத்தின ஆரங்களையும், செந்திலகவல்லியின் கழுத்திலே சூட்டி மகிழ்ந்தான் அவன்.

மழையைக் கண்ட பயிர்போலப் புத்துயிர் அடைந்த செந்திலகவல்லி தன் காதலனை இமை கொட்டாது நீண்ட நேரம் பார்த்தாள். கடல் கடந்து சென்று திரும்பிய அவன் முகத்தைப் பார்த்தபிறகு அவள் கோபமெல்லாம் எங்கோ மறைந்துபோயிற்று. ஆனால், மௌனமாக, பேரெழினி தனக்குச் சூட்டிய முத்தாரங்களையும் மணிமாலையையும் கழற்றி வீசி எறிந்தாள்!

அவன் துணுக்குற்றான்: சினமும் மேலிட்டது. "செந்திலகவல்லி, என்ன காரியம் செய்துவிட்டாய்? ஆமாம்! நீ இப்போது மந்திரியின் மகள்! இவ்வாரங்கள் வேண்டாதவைபோலவே யானும் வேண்டாதவன்! சென்றுவருகிறேன்!" என்று கோபத்துடன் எழுந்தான்.

துடித்து எழுந்த செந்திலகவல்லி தலைவனது கரத்தைப் பற்றிக் கொண்டாள். "அப்பா! என்ன கோபம்? செல்வத்தின் சின்னங்களான இம்முத்தாரங்களையும் மணிமாலைகளையும் தேடத்தானே என்னை இப்படித் தவிக்க விட்டுப் போயிருந்திர்கள்? அவைகளே என் துயரின் வித்துக்கள். போதும்!......இனி செல்வமும் வேண்டாம்! நீங்களே என் மதிப்பில்லா மாணிக்கம்!..."

பேரெழினியின் விசாலமான மார்பின் மீது சாய்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள் அவள். தியாகத்தின் சிகரத்தைத் தொட்டு மீண்ட இரு உள்ளங்களும் ஒன்றி நின்றன.

# முத்துக்களின் தந்தை

எம்.எஸ்.கமலா

'நல்முத்துக்கள் அணிந்தால் ஆரோக்கியமாயிருப்பார்கள்.' என்று வைத்திய சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறதாம். "முத்து ஆபரணங்களை அணிந்தால் பெண்களிடம் சௌந்தர்யம் வளருகிறது" என்கிறார்கள் சௌந்தர்ய உபாசிகள். செயற்கை முத்துக்களின் பிதா 'மிகிமோட்டோ' சொல்கிறார்: 'முத்தாரம் அணிந்தால் வியாதி நிவாரணமாகிறதென்ற நம்பிக்கை எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். ஒரு முத்தாரத்தைப் பரிசாய்ப் பெற்ற பெண்ணின் முகத்தில் தோன்றும் மந்தஹாஸம் விலையற்றது.'

அமூல்யமான நவரத்தினங்களில் ஒன்றான முத்தினுடைய ஜனன ரகசியத்தை அறிந்து, இயற்கையாய் உற்பத்தியாகும் இந்த அலங்காரப் பொருளுக்குச் சற்றும் குறையாது உலகம் முழுவதும் செயற்கை முத்துக்களை விளைத்தவர் மிகிமோட்டோ!

இவர் ஜப்பான் தேசத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். விஞ்ஞான மின்சார சக்கரவர்த்தி "தாமஸ் ஆல்வா எடிஸன்" தெருவில் பத்திரிகை விற்ற ஏழைச் சிறுவனென்றால், மிகிமோட்டோ தெருக்களில் மீன் விற்று வந்தவர். அவரது 33-ஆம் வயதில் கடல் பொருள்களின் கண் காட்சியைப் பார்க்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. அங்கே கடல் கர்ப்பத்தில் விளையும் எல்லாப் பொருள்களையும் வைத்திருந்தார்கள். அங்கே அவரைக் கவர்ந்தவை முத்துக்களும் முத்துச்சிப்பிகளும் அவற்றின் அபார விலையும்தான். அவைகள் விளையும் விதத்தைப் பார்த்தார். கடலிலிருக்கும் முத்துப் புழுவின் (Oyster) உடலுக்குள் ஒரு அணு மணலாயினும், அல்லது முத்துச் சிப்பியின் அணுவேனும் புகுந்துவிட்டால் அந்தப் புழுவிற்கு நோவு ஏற்படுகிறது. அந்த நோவைத் தடுத்துக்கொள்ள முத்துப் புழு 'கால்ஷியம் கார்பனேட்' (Calcium Carbenate) டை ஆயிரமாயிரம் மெல்லிய புரைகளாய் அந்தச் சூக்கும அணுவைச் சுற்றிச் சுற்றிப் படரவிடுகிறது. இயற்கையின் விசித்திரம்! ஒரு சின்ன சிப்பிப்புழு தன் வலியை அழகுள்ள முத்தாகச் செய்கிறது.

இயற்கையாக ஏற்படும் இந்த முத்துக்களுக்குத் தாயாகிய முத்துப் புழுக்களுக்கு மானிடன் சகாயமாய் நின்றால் ஏன் லாபம் ஏற்படாது என்று தோன்றியது மிகிமோட்டோவுக்கு. உடனே அவர் கடல் அடிக்குச்சென்று தம் ஆராய்ச்சியைத் தொடங்கினார். அதிக ஆழமில்லாத இடத்தில் கடல்அடியில் சுறாமீன் முதலிய கொடிய கடல் ஜந்துக்கள் இருக்கும். அவ்விடத்தில் சுமார் பத்தாயிரம் முத்துப் புழுக்களைப் பிடித்து, சிப்பிக்கும், புழுவுக்கும் நடுவில் ஒவ்வொரு மணல் அணுவை வைத்து அவைகளை நீருக்குள் விட்டார். சிலமாதங்களுக்குப் பின் அவைகளைப் பரிசோதித்ததில் முத்துக்கள் தோன்றும் அறிகுறியே தென்படவில்லை.

சாதனை செய்வோரும், தவம் செய்வோரும் நிராசையைக் கொன்றபின் தானே தம் கர்மயோகத்தில் லயிக்கிறார்கள். அப்படியேமிகிமோட்டோவும் தம்ஆராய்ச்சியைப் பொறுமையுடன் தொடங்கினார். மணலுக்குப்பதில் சிறிய கண்ணாடி அணுக்கள், முத்து அணுக்கள் முதலானவைகளைப் புழுவின் எல்லா உறுப்புகளிலும் வைத்து, பற்பல சீதோஷ்ண நிலையிலும், பற்பலவித ஜல கர்ப்பத்திலும் விட்டு, தம் பரீக்ஷையைத் தொடங்கினார்.

இரண்டு மூன்று வருடங்கள் விடாமுயற்சியுடன் பரீக்ஷை செய்ததில் விடை சூனியமாயினும் கடன் வளர்ந்தது. ஆனால் அவர் அதனால் இடிந்துபோகாமல் தம் முயற்சியை மேலும் மேலும் செய்யத் தொடங்கினார். மூன்றாவது வருடம் துரதிருஷ்டவசமாய் ஒரு கூட்டத்திலிருந்த புழுக்கள் தவிர மற்றெல்லாப் புழுக்களும் இறந்துபோயின. நிராசையுடன் மீந்த இந்தப் புழுக்களை மிகிமோட்டோவும் அவர் மனைவியும் பரிசோதனை செய்தார்கள். முத்துக்கள் தோன்றும் ஜாடைகூடத்

தென்படவில்லை. ஆறு நாட்களுக்குப்பின் 1893ஆம் வருடம் ஜுலை 11ஆம் தேதி (11-7-1893) அவர் கஷ்டத்திற்கேற்ற பலன் தென்பட்டது.

ஒரு முத்துப்புழுவைக் கொன்றுபார்த்ததில் அரை வர்த்துளாகாரத்தில் ஒரு முத்து தென்பட்டது. அத் தம்பதிகளின் ஆனந்தத்திற்களவேயில்லை. உடனே மீதமிருந்த புழுக்களையும் கொன்று பார்த்தனர். மற்றும் பூர்ணமடையாத முத்துக்கள் நான்கு கிடைத்தன.

உடனே மிகிமோட்டோ முத்துக்களைத் தயார்செய்யும் உரிமையைப் (Patent) பெற்று, "டடோகூ" என்ற தீவில் பெரிய தொகை போட்டு நான்கு வருடங்கள் தம் பரிசோதனைகளைச் செய்தார். முதல் வருடத்துப் பலன் அவ்வளவு திருப்தியில்லாவிடினும், அதற்கடுத்த வருடம் நல்ல பலன் கிடைத்தது.

1901ல் ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்தியின் பட்டாபிஷேகத்தின் போது ஜப்பான் தேசத்துப் பிரதிநிதி மிகிமோட்டோவின் முத்துக்களைச் சக்கரவர்த்திக்கு அளித்து, அங்கிருப்பவர்களனைவரிடையேயும் ஆச்சரியத்தை விளைவித்தார். மிகிமோட்டோவின் புகழ் எங்கும் பரவியது. ஜப்பான் அரசர் முத்துக்களை விளைவிக்கும் வழியை மிகிமோட்டோவின் வாயிலாகவே கேட்கவிரும்பி, அவரை வரவழைத்து உபசரித்துக் கௌரவப்படுத்தினர்.

ஆனால் மிகிமோட்டோ உருண்டையாய் முத்துக்களைப் பயிர்செய்வதில் தேருமல் அவஸ்தைப் பட்டார். திடீரென்று 1905ஆம் வருடம் நல்ல உயர்தர உருண்டை முத்துக்கள் கிடைத்தன. அதைக் கூர்ந்து பரிசோதித்ததில் முத்துப் புழுவின் மாமிசத்தில் மணல் அணு பொத்திக்கொண்டதால் அதன் சுற்றிலும் 'கால்ஷியம் கார்பநேட்' அடர்த்தியாய்ச் சேர்ந்துகொண்டு இந்த அழகிய முத்துக்கள் தயாராயின வென்றறிந்துகொண்டார். இதுவரை முத்துச் சிப்பிக்கும் மாமிசத்துக்கும் நடுவில் அணுக்களை வைத்ததால் கால்ஷியம் கார்பநேட் எல்லா இடங்களிலும் சமானமாய்த் தோய்ந்து முத்தாகத் திரண்டுவர முடியாமல் உருப்பெருமல் போய்விட்டன என்பதை அறிந்துகொண்டார்.

அடுத்தபடி மணல் அணுக்கள், முத்து அணுக்கள் இவைகளைப் புழுவின் மாமிசத்தில் வைத்து, தம் பரீக்ஷையைத் தொடங்கினர். இக் காரியத்திற்கு மிக்கதிறமை வேண்டும். அணு அதிகமாய் உள்ளே சென்றால் புழு



இறந்துபோகும். இல்லாவிடில் வெளியில் விழுந்துவிடும். இந்த வேலைக்குத் தனிப்படப் பயிற்சி பெற்றவர்கள் வேண்டும். இம்மாதிரி நூறு புழுக்களில் உயர்தரமான ஆறு முத்துக்கள் கிடைத்தன.

முத்துக்களை அதிகமாய் விளைவிப்பதில் வெற்றி பெற்றதும் மிகிமோட்டோ முத்துப் புழுக்களைக் கடல் ஜந்துகளின் வாய்க்கு இரையாகாமல் காப்பாற்ற வழி தேடினார். சமுத்திரத்தில் பெரிய பெரிய வலைக் கண்டுகளை நிர்மாணம் செய்து, அவைகளில் புழுக்கள் ஜாக்கிரதையாய் வளர்வதற்கு ஏற்பாடு செய்தார். நன்கு பயிராக்க வேண்டியதற்கேற்ற சீதோஷ்ண நிலை, ஜல பரிமாணம் முதலியவைகளை நிர்ணயித்துக் கொண்டார்.

*　　　　*　　　　*

நல் முத்துக்களின் விலையில் நான்கில் ஒரு பங்கு விலைக்குத் தம் முத்துக்களை யூரப்பில் மிகிமோட்டோ விற்கத் தொடங்கியதும் அவ்விடத்தில் கலவரம் அதிகரித்தது. நல் முத்துக்களுக்கும், குறைந்த விலைக்கு விற்கும் இந்த முத்திற்கும் இருக்கும் வித்தியாசத்தை அறிவது மிகவும் கஷ்டமாயிருந்தது வாங்குபவர்களுக்கு. இந்த வித்தியாசம் 'X' ரே கிரணங்களின் சகாயத்தால் தான் அறிய முடிகிறது. நல்முத்து வியாபாரிகளுக்கு மிகவும் நஷ்டம் ஏற்பட்டது.

அவர்களெல்லாரும் ஒன்றுகூடி, செயற்கை முத்துக்களையும் அதை விற்பவர்களையும் (பஹிஷ்கரித்தனர்) ஒதுக்கிவைத்தனர். இதனால் நியாய ஸ்தலத்தில் வழக்கிற்குச் சென்றனர். முத்து வியாபாரிகள் செயற்கை முத்துக்கள் நாணய மற்றவைகளென்று ருசுப்படுத்த முயன்று விஞ்ஞானிகளைச் சரணடைந்தனர்.

பிரசித்தி பெற்ற விஞ்ஞான நிபுணர்கள் வெகு ஆராய்ச்சிகள் செய்து, "இந்த முத்துக்கள் எல்லா விதத்திலும் சிறந்தவைகளே என்றனர், நல்முத்துக்கும், மிகிமோட்டோ முத்துக்கும் இருக்கும் வித்தியாசம் ஒன்றே ஒன்று தான். நல்முத்தில் 'கேந்திர கணம்' (Central Particle) சுபாவமாய் முத்துப் புழுவின் உடலில் பிரவேசிக்கிறது. மிகிமோட்டோவின் முத்தில் கேந்திர கணம் சாஸ்திரப் பிரகாரம் செயற்கையில் வைக்கப் படுகிறது. நியாய ஸ்தலத்திலும், ஆராய்ச்சியிலும் மிகிமோட்டோ வெற்றி பெற்றார்.

[அமெரிக்காவில் 'டெஸ்டிடியூப் பேபீஸ்' என்று எத்தனையோ சஞ்சிகைகளிலும் தினசரிகளிலும் படித்துள்ளோம். தற்சமயம் சென்னை சுதேசி பொருட்காட்சிச் சாலையிலும் காளை மாட்டின் வீரியத்தை எடுத்து மாட்டிற்கு இஞ்சக்ஷன் செய்து கன்று போடும் விதத்தைக் காட்டியுள்ளார்கள் சித்திரங்களில். அப்படிப் போட்ட இரண்டு கன்றுகளையும் வைத்திருந்தார்கள். படைக்கும் பொருளை வளரும் பாண்டத்தில் வைத்துப் போஷித்தால் அதன் விளைவு எவ்விதத்தில் தாழ்மையானது? விஞ்ஞான யுகத்தில் எதைத் தான் செய்ய முடியாது?]

பிறகு மிகிமோட்டோ உலகத்தில் எல்லா முக்கிய நகரங்களிலும் தம் முத்துக்களை விற்பனை செய்ய, கேந்திரங்களை ஏற்படுத்தினார். ஒரு சமயத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து சதம் முத்துக்களைப் பயிராக்கியது தம் புதிய முறையில் மிகிமோட்டோ தான். 1921ல் மிகிமோட்டோ வாங்கிய ஒப்பந்தக் காலம் முடிந்து விடவே வெகு ஜனங்கள் போட்டி போட்டுக் கொண்டு முத்துக்களை விளைவிக்கத் தொடங்கினர். இதில் அநேகர் அவரிடம் பயிற்சி பெற்றவர்கள். அவர்களும் குறைந்த விலைக்கு மட்டத்தரமான முத்துக்களை விற்கத் தொடங்கினர். இவர்களுக்குப் பாடம் கற்பிக்கவும் மிகிமோட்டோ தாம் உயர்தர முத்துக்களையே விற்கிறேன் என்பதைக் காட்டவும் 1-7-1933ல் 7,50,000 இரண்டாம் தர முத்துக்களைத் தீயிலிட்டுக் கொளுத்தினார்.

யுத்த காலத்தில் மிகிமோட்டோ வியாபாரம் இளைத்திருந்தது. இப்பொழுது செழிக்க ஆரம்பித்திருக்கிறது. அவருக்கு இப்பொழுது வயது 91. இந்தக் கிழ வயதிலும் அவர் சொல்வது இதுதான்: "முத்தாரம் அணிந்தால் வியாதி நிவாரணமாகிறதென்ற நம்பிக்கை எப்படி இருப்பினும் ஒரு முத்தாரம் கிடைத்த பெண் எல்லாவித சங்கடங்களையும் மறந்து மந்தஹாஸத்துடன் காட்சியளிக்கிறாள்" என்கிறார் "முத்துக்களின் தந்தை" மிகிமோட்டோ.

# நிலைபெற்ற சிலை

ஜெகசிற்பியன்

மாலைச் சூரியன் மறைந்து இருள் கவியும் நேரமாகி விட்டது. வேதநாதன் ஒரு பாறையின் மீது உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தான். அவனெதிரில் அமரநாதன் கைகட்டி நின்று கொண்டிருந்தான்.

ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய் வேதநாதன் சட்டெனத் தலை நிமிர்ந்தான்.

"அமரநாதா!"

"குரு தேவ்!"

"எனக்கு நீ ஒரு பெரிய உதவி செய்ய வேண்டும்!"

"தாங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. இந்தச் சிறுவன் தங்கள் கட்டளை எதுவாயிருந்தாலும் சிரமேற் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்!"

"இதோ இருக்கிறதே! இந்தச் சிலையை நாளை பொழுது விடியு முன்னர், காஞ்சியின் கண்காட்சிச் சாலையில், சோழ நாட்டின் பெயரால் இடம் பெறும்படி கொண்டு போய் வைத்து விட வேண்டும்!"

"சித்தம் குரு தேவா! ஆனல்......?"

"ஆனல் என்ன அமரா?"

"இந்தச் சிலை மன்னரால் புறக்கணிக்கப் பட்டது. அப்படியிருக்கும் போது அவருக்குத் தெரியாமல் இதை அக் கண்காட்சியில் வைத்தால்......!"

"வைத்தால் என்ன?"

"அது ராஜத்வேஷமான செய்கை! அதற்கு......!

"அதற்கு மரண தண்டனை கிடைத்தாலும் கிடைக்கும்! ஆனல் அதைக் குறித்து நான் அஞ்ச வில்லை. நான் ஒரு சுதந்திரக் கலைஞன். என்னை யாராலும் கட்டுப் படுத்த முடியாது. இதை அன்றே மன்னனிடம் கூறுமல் கோழையாகி விட்டேன். இருக்கட்டும். மன்னன் என் உயிரைப் பறிக்கக் கட்டளை யிட முடியுமே தவிர என் கலை உள்ளத்தைக் கட்டுப் படுத்த முடியாது! இந்தச் சிலைக்கு மன்னனின் தீர்ப்பு சரியல்ல வென்றே நான் இப்போது நினைக்கிறேன். உலகத்தின் தீர்ப்பு எனக்கு வேண்டும்! அதனல் இது கட்டாயம் அந்தக் கண்காட்சியில் இடம் பெற்றே ஆக வேண்டும். இப்போது என்ன சொல்லுகிருய் அமரநாதா?"

"தங்கள் ஆக்ஞையே என் ஆவி குருதேவ்!"

சற்று நேரத்திற் கெல்லாம் அமரநாதனின் தோளின் மீது ஏறிய அந்தச் சிலை இருளில் புகுந்து மறைந்தது!

* * *

பல நாட்டுப் பெரு நில மன்னர்களும், குறு நில மன்னர்களும் அவரவர்களுக்குரிய ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். சேர, சோழ, பாண்டிய மன்னர்களுக்குமட்டும் தனிக் கௌரவ சிம்மாசனங்கள் அமைக்கப் பட்டு இருந்ததில், அவர்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்கெதிரில் அவ்வந்நாட்டுச் சிற்ப வல்லுனர்கள் கம்பீரமாக அமர்ந்திருந்தனர். மற்றக் கலைஞர்களும், பொது மக்களும் மகிழ்ச்சி தாண்டவமாட அங்கே குழுமியிருந்தனர். இவர்கள் எல்லோரையும் வரவேற்று உபசரித்துக் கொண்டிருக்கிருன் வெற்றி வீரன் மாமல்லன். மகேந்திர பல்லவன் தனது பட்ட மகிஷியுடன் கொலு மண்டபத்தில் வீற்றிருக்கிருன்.

அங்கிருக்கும் எல்லா அரசர்களின் முகத்திலும் குதூகலம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தாலும், சோழ நாட்டின் பூபதியான பார்த்திபன் மட்டும் கவலையே உருவாய் உட்கார்ந்திருந்தான்! அவனுடைய நாட்டின் கலைச் சிற்பமொன்று அங்கே இல்லாதது, அவன் உயிரே உடலில் இல்லாதது போன்றிருந்தது!

ஆச்சு; சம்பிரதாயச் சடங்குகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன. பல நாட்டுச் சிற்பங்களில் பரிசுக்குரிய தொன்றைத் தேர்ந்தெடுக்கும் ஆய்வுக் குழுவினரும், அரசர்களும் எழுந்து சிற்பக் கண்காட்சி மண்டபத்துக்குச் சென்றனர். அங்கே சமைக்கப் பட்ட ஒவ்வொரு சிற்பங்களையும் அதி நுணுக்கத்துடன் கவனித்துப் பார்வையிட்டுக்

கொண்டு வந்தனர். எல்லாச் சிலைகளையும் பார்வையிட்டாகி விட்டது. கடைசி சிலை...

என்ன ஆச்சரியம்! சோழ நாட்டின் பெயர் பொறித்த ஒரு அற்புதச் சிலை அங்கே எல்லோருடைய கவனத்தையும் வெட்டியிழுத்து நிறுத்தி வைத்தது! ஒவ்வொருவரும் பிரமை தட்டியவர்களாய் அந்தச் சிலையையே பார்த்துக்கொண்டு மெய் மறந்து மரமாகி விட்டனர்!

கம்பீரத்தோடு நடந்து வந்த சோழ மன்னன் பார்த்திபனின் கண்களிலும் அந்தச்சிலை பட்டு விட்டது! அவ்வளவுதான். அவன்கண்கள் கோபாக்கினி ஜ்வாலை விட்டெரியத் துடித்துப் பதறி விட்டான். சோழ நாட்டின் மானமே அங்குப் பலியாக்கப் படுவதைப் போன்று அவன் உணர்ந்தான்!

உடனே கூட்டத்திலிருந்து சற்றே பின் தங்கித் தனது பக்கத்திலிருந்த மந்திரியை ரகசியமாக அழைத்தான்.

“மந்திரி! இந்தச் சிலை நமது ராஜாங்க சிற்பி வேதநாதன் செய்ததல்லவா? இதைநான் நேற்றே பார்வையிட்டுக் கண்காட்சிக்கு உதவாதெனப் புறக்கணித்திருந்தேனே! அப்படியிருக்கும் போது அச்சிலை இங்கு எப்படி வந்தது? அதோ பாரும்! அந்தச் சிலையை அங்குள்ளோர் அனைவரும் எவ்வளவு ஏளனத்தோடு பார்க்கிறார்கள்!” என்று படபடத்தான் மன்னன்.





"பிரபோ! எனக்கு இதைப் பற்றி ஒன்றுமே தெரியாதே!" — மந்திரி இவ்வாறு குழறினர்.

"சோழ நாட்டை அவமதிக்கச் செய்தது மல்லாமல், சோழ மன்னனின் கட்டளையையும் மீறிய அந்தக் கயவனை இன்றே இரு துண்டங்களாக்கிவிட்டதாக எனக்குச்செய்தி கிடைக்க வேண்டும். நான் சோழ நாட்டை மிதிப்பதற்குள் அந்தப்பதரின் உயிர் இவ்வுலகிலிருந்தே ஓடிப்போய் இருக்கவேண்டும்! இது சோழ நாட்டின் பூபதி பார்த்திபனின் ஆக்ஞை!"—மன்னனின் குரல் சூழ்நிலையையும் பொருட்படுத்தாமல் பலமாக எழுந்து எதிரொலித்தது.

அந்த நிமிஷமே ஒருவீரன் இக்கட்டளையைத் தாங்கிக்கொண்டு சோழநாட்டை நோக்கிப் பறந்தான்!

* * *

சிற்பக் கண் காட்சியைப் பார்வையிட்டு விட்டு அரசர்களும், மற்றையோரும்அவரவர்களின் ஆசனங்களில் வந்து அமர்ந்தனர். சிற்பப் பரிசீலனைக் குழுவின் தலைவரும், பல்லவநாட்டின் பெரும் சிற்பக் கலைஞருமான ஆயனர், பரிசுக்குரிய சிற்பத்தையும், அது எந்த நாட்டுச் சிற்பிசெய்தது என்பதையும் தெரிவிக்கச் சபையினர் முன்னே எழுந்து நின்றார். எல்லோரும் அவர் முகத்தையே ஆவலுடன் உற்று நோக்கிக்கொண்டிருந்தனர், ஒவ்வொரு நாட்டுச் சிற்பிகளின் மனமும் அப்போது கடகடவென ஆடிக்கொண்டிருந்தது. ஆயனர் பேச ஆரம்பித்தார்;

"பல்லவ நாட்டின் பெருந்தகை மன்னரே! சேர, சோழ, பாண்டியநாடுகளின் சிரம் வணங்காப் பூபதிகளே! மற்றநாட்டு மகா வேந்தர்களே! கலைஞர்களே! பொதுமக்களே!

சிற்பக்கலை என்பது ஒரு கரை காணாக்கடல். அதில் புகுந்த ஒவ்வொரு நாட்டுக் கலைஞர்களும் பற்பலவிதமான மாணிக்க, வைடூரிய, கோமேதங்களை வாரிவழங்கியிருக்கிறார்கள். ஆனால் அன்று முதல் இன்று வரை அந்தக் கலை ஒரே பாதையிலே தான் சென்று வந்திருக்கிறது. அதை மாற்றவோ, திருப்பவோ யாரும் முன் வரவில்லை. துணிந்ததுமில்லை--என்னைச்சேர்த்து! இந்தக் குறையைப் போக்கி உலகிற்கு உன்னதப் பாதையை வகுத்துக் கொடுத்து விட்டது சோழப் பெரும் நாடு.( எல்லோரும் ஆச்சரியத்துடன் அவரையே பார்த்துக்கொண்டிருக்கின்றனர்)உண்மைதான்! உலக ரக்ஷகனான கடவு

ளின் பலஉருவங்களைப் படைத்துப் படைத்து மகிழ்ந்துகொண்டு வந்தமது ரஸனையைத் தலைக்கிழாக மாற்றி, உலகின் அற்புதமான சிருஷ்டிகளின் மூலம்தான் அந்தப் பரம் பொருளின் திருவுருவைக் காண முடியும் என்பதைக் காட்டி விட்டது சோழநாட்டின் சிலை !! அந்தச் சிலையைச் செய்து உலகுக்கு ஒரு உண்மையையும், கலைஞர்களுக்குப் புதுப்பாதையையும், சோழநாட்டுக்குப் பெரும் புகழையும் அளித்த அந்த மகா மேதையை நான் என் கண் குளிரக் காண விழைகிறேன். அந்த மகானே இவ்வுலகின் முதன்மையான சிற்பி ! அவரது அந்தச் சிலைக்கே பரிசுதரவேண்டுமாய் இங்கே கூடியிருக்கும் அனைவரின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்!'' — இப்படிக் கூறிவிட்டு ஆசனத்தில் அமர்ந்தார் ஆயனர். உடனே பெருத்த ஆரவாரம் எழுந்து அக்கொலு மண்டபத்தையே கிடுகிடுக்க வைத்தது.

எல்லோரும் புத்துலகச் சிற்பியான வேதநாதனைக் காணத் துடிதுடித்தனர்! ஆனால்....? அவன் அங்கு இருந்தால் தானே! அவன் தான் இப்பரந்த உலகிலிருந்தே மன்னனின் ஆக்ஞையால் மறைந்து விட்டானே !......

சோழநாட்டு மன்னன் பார்த்திபன் மனமிடிந்து உடல் குன்றி விட்டான். அவனது அறியாமை அவனை அணுவணுவாகச் சித்திரவதை செய்தது.

தான் செய்த பெரும் பிழையை நினைத்து நினைத்து உள்ளம் உருகினான். அதற்குப் பிராயச்சித்தமாக, வேதநாதன் வாழ்ந்து வந்த இந்த இடத்தில் ஒரு அழகிய மண்டபத்தை நிர்மாணித்து, அதில் அவன் படைத்த அந்த நிலைபெற்ற சிலையையே வைத்து, ஆண்டு தோறும் அவன் பெயரால் திருவிழா நடத்தி வந்தான் பார்த்திபன். அந்த மண்டபமும் சிலையும் தான் இன்று இந்த நாட்டில் இக்கதிக்குள்ளாகியிருக்கிறது !''

கதையைக் கூறி முடித்தான் கிழவன்.

அவலத்தில் ஆழ்ந்து தோய்ந்து விட்டிருந்த உள்ளத்தோடு எழுந்து அந்தக் கிழவனிடம் விடை பெற்றுக்கொண்டு கிராமத்தை நோக்கி நடக்கலானேன்.




சௌந்தரியவதி டி. ஆர்.
ரஜினி தன் சருமத்தை வசீகர
மாக வைத்துக்கொள்ள
லக்ஸ் டாய்லட் சோப்
பை விரும்புகிறார்.
LUX
LUX TOILET SOAP
"நான் எப்பொழுதும் லக்ஸ் டாய்லட் சோப்பை உபயோகிக்கிறேன். இந்த சுலபமான முறையினால் தான் என் சருமத்தை மாசற்றதாகவும் மழமழப்பாகவும் வைத்துக்கொள்ளுகிறேன். மேலும் இந்த சோப் மனோரஞ்சகமான பரிமளமுடையது." என்று கூறுகிறார் இந்த அழகிய நட்சத்திரம்.
இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாக செய்யும்!
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 234-172 TM

# பெண்களுக்குப் பிரத்தியேகமானது

ஷிபாலி சௌத்ரி — சாரி

### காரியதரிசியின் கஷ்டங்கள்!

அக்கா, வீட்டுக்குள் அடைந்து கிடக்கும் பெண்களின் நன்மைக்காக ஏதோ செய்யலாமென்று இச்சிறிய ஊரில் ஒரு சங்கம் நிறுவினேம். அதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட என் கஷ்டங்களை என்ன வென்று சொல்வது? போரும் போருமென்று ஆகி விட்டது. ஆரம்பித்த இந்த ஒரு மாதத்திற்குள்ளேயே என் வேலையை விட்டு விட ஐந்து முறை நினைத்து விட்டேன்..................

இவ்வாறு விமலா விஸ்தரித்துள்ள கஷ்டங்களின் ஜாபிதாவை இங்கே கொடுக்கவில்லை. அவை தனிப்பட்டவை அல்ல; பொது வேலையில் ஈடுபடும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படக் கூடியதே; இவை தோன்றுவதற்கு முக்ய காரணம், பெண்களுக்கிடையேயுள்ள அறியாமையும், அற்பக் குறைகளைப் பெரிதாய்க் கருதும் குணமும் என்று ஒரு வகையிற் சொல்லலாம்.

பொது ஸ்தாபனம் ஒன்றில் ஈடுபட்டால் அதைக் கருத்துடனும், உழைப்புடனும் விருத்திக்குக் கொண்டு வருவது ஒன்றே நோக்கமாக இருக்க வேண்டும். எடுத்த காரியத்தில் நுட்பமான, சிறிதான, கணக்கு வகுக்க முடியாதவையான அனேக சங்கதிகள் இருக்கும். குறைந்தது ஒரு நாளுக்கு மூன்று மணி நேரமாவது அவற்றை நன்கு பார்த்துத் தெளிவது அவசியமாகும். "சரீர மாத்யம் கலு தர்ம ஸாதனம்" என்ற கவி வாக்கியம் போல் ஒரு ஸ்தாபனத்தின் ஒழுங்கும், பொருளாதாரமும், அங்கத்தினரின் உற்சாகமும் எப்படிச் சேமித்துப் பாதுகாக்கப் படுகின்றனவோ, அப்படியே அந்த ஸ்தாபனத்தின் நற்பயன்கள் விளையும்.

விமலாவின் சங்கம் நான்கு அல்லது ஐந்து சிறந்த, தளர்வு சோர்வில்லாத அன்பு நிறைந்த அங்கத்தினரின் ஆதிக்கத்தில் இருந்தால், சங்கம் சிறந்த மேம்பாட்டைப் பெற்று விளங்கும் என்றும் அவள் இவ்விதம் மனக் கஷ்டப்பட வேண்டிய அவசியம் இராதென்றும் நான் பணிவுடன் கூறுவேன். அதே கண்ணுகவும் வெறி பிடித்தது போலும் அவ் வேலையிலீடுபடுவது சில நண்பர்களுக்காவது சகஜமாயிருக்க வேண்டும். எண்ணித் துணிந்த பிறகு கருமத்தில் ஊக்கம் பிரதானமானது என்பதை விமலாவும் அவள் சகாக்களும் உணர்ந்து சங்கத்தின் நன்மைக்குப் பாடுபடுவார்களாக.

வெகு நாள் முன்பு, ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் கௌரவ—காரியதரிசியின் கஷ்டங்களை ஹாஸ்யமாக எடுத்துரைத்திருந்ததை நான் படித்த ஞாபகம் வருகிறது. விமலாவின் ஆறுதலுக்காக, எனக்கு நினைவு வந்த மட்டில், அந்த வரிகளைக் கீழே கொடுத்திருக்கிறேன்!

### காயதரிசிக்கு ஆறுதல்.

காரியதரிசி கடித மெழுதினுல், அதன் நீளம் அதிகம்; அவர் போஸ்டு கார்டு எழுதினுல், மிகவும் சுருக்கமானது. ஒரு அறிக்கை வெளியிட்டால், வீண் செலவு. அவர் கமிட்டிக்குச் சென்றுல், சம்பந்தமில்லாததில் தலை இடுவது. போகாமலிருந்தால் பயந்தாங்கொள்ளி, கழுப்பாணி. அவர் ஓர் யோசனை கூறி விட்டால், 'மகா பிராக்ஞர்' மௌனம் சாதித்தால், "உபயோக மில்லை" (useless). கூட்டத்திற்கு ஆள் சேரா விட்டால், அங்கத்தினர் 'போனில்' கூப்பிட்டிருக்க வேண்டும்.

அவர் 'போன்' செய்தால், இதென்னடா தொந்தரவு? (niusence) அங்கத்தினரைச் சந்தாப் பணம் கேட்டால், மரியாதைக் குறைவு. கேளா விட்டால், சோம்பேறி. கூட்டம் வெற்றிகரமானுல், பாராட்டு, புகழ், கமிட்டிக்கு—மீடிங்கு

நன்ருய் நடக்கா விட்டால், ஓ காரியதரிசியின் தப்பிதம் தான்.

அவர் யோசனை கேட்டால், திறமையற்றவர். கேளாவிட்டாலோ, கர்வம் பிடித்தவர். வேறெவரும் செய்ய முன் வராததையோ? சந்தேக மென்ன? காரியதரிசி செய்யத்தான் வேண்டும்!

## வீட்டு அலங்கரிப்பு.

(1) ஒரு மூலையில் இந்தப் பளிச்சென்ற திண்டைத் தைத்துப் போடுங்கள்;



அறையின் அழகை நிச்சயமாக அதிகரிக்கும்!

இதை உங்கள் பழைய புடவைக் கரைகளில் இருந்தே தைக்கலாம். சிகப்பு,



பச்சை, ஆரஞ்சு, கருநீலம் என்று இணைத்தால் இந்தக் குஷனைத் தைத்து விடலாம். ஒரு பூப்போட்ட கரையும், மற்ருென்று சாதாக் கரையுமாக மாறிமாறி இணைத்தாலும் குஷன் அழகாக இருக்கும்.

2

வீடுகளில் குளிர் காலத்தில் கணப்புப் போட்டு உஷ்ணம் உண்டாக்கிக்கொள்ள ஏற்படுத்தியிருக்கும் இடத்தை Fire-Place என்பது. டில்லி போன்ற ஊர்களில், வெயில் பொசுக்கும் கோடை நாட்களில் மார்கழி மாதத்திய கடுங் குளிருக்காக கட்டிய இந்த Fire Place க்கு அவசியமே இராது. அந்த நாட்களில் ஒரு சிறிய Fire-Screen செய்து அதன் முன்னுல் அலங்காரமாகவைப்பது வழக்கம். அதற்குப் பதில், இம்மாதிரி செய்யவும்:—

சில கட்டைத் துண்டுகளை ஒழுங்காக நறுக்கி அடுக்கி, இடுக்குகளில் படத்தில் உள்ளது போல், மறைவாகச் சிறு தொட்டிகளில் 'பர்ன்' போன்ற செடிகளை வைக்கவும். வெயில் காலத்தில், கண்ணுக்கு இனிய பச்சென்ற குளிர்ச்சிதரும்; அடிக்கடி தண்ணீர் விட வேண்டிய அவசியம் இல்லை.

வெயில் காலத்துக்கு உகந்த யோசனையை இந்தக் கடுங்குளிர் நாளில், உங்களுக்குச் சொல்ல முன் வந்ததைத் தயைசெய்து மன்னிக்கவும்!

## சமையல் பகுதி

பொரி கொள்ளு:— முற்றிலும் தானிய வகைகளினுல்செய்த இந்தப் பக்ஷணத்தைத்தயாரித்துக் கண்ணுடிஜாடி அல்லது தகர டப்பாக்களில் போட்டு வைத்தால், ஆறு மாதத்திற்கு மேலேயே நன்ருயிருக்கும். குளிர் காலத்தில் குழந்தைகள் பிரியமாய்ச் சாப்பிடுவார்கள். ஏன்? பெரியவர்க்கு மட்டும் பிடிக்காதா என்ன?

### தேவையான பண்டங்கள்.

கொத்துக் கடலை—கால் படி

நிலக்கடலைப் பருப்பு—அரைப் படி

அவல்—கால் படி

காராமணி—கால் படி

பயறு—அரைக்கால் படி

கொள்ளு—அரைக்கால் படி

உளுந்து—அரைக்கால் படி
மொச்சைக்கொட்டை — அரைக்கால் படி
எள்ளு—வீசம் படி
கொப்பறைத் தேங்காய்—2



மிளகாய்வற்றல்—வீசம்வீசை (சுமார்)
உப்பு—திட்டமாக
பெருங்காயம்—அரைக்கால் பலம்
மஞ்சள்—2 குச்சி

தயாரிக்கும் விதம்:— முதலில் நிலக்கடலையை வறுத்து, தோல் நீக்கி வைத்துக் கொள்ளவும். கொப்பறைத் தேங்காயைச் சிறு துண்டுகளாகக் கீறி வைத்துக் கொள்ளவும். கற்கள் இல்லாமல் சுத்தம் செய்த தானியங்களை (கொத்துக் கடலை, எள்ளு தவிர) முதல் நாள் இரவு தனிப் பாத்திரங்களில் ஜலத்தில் ஊறப் போட வேண்டும்.

மறுநாட் காலையில் கடலையையும் ஜலத்தில் போட்டு, சுமார் 8 மேணிக்கு, ஒவ்வொன்றையும் தனித் தனியாக அரித்து, சுத்தமான தரை மீது தனித் தனியாக உலர்த்தவேண்டும். நனைத்த எள்ளையும் ஒரு முறத்தில் உலர்த்தி, தேய்த்துத் தோல் போக்கி வைக்கவும். அவலைச் சுத்தம் செய்தால் போதுமானது.

பிற்பகல் 12 மணிக்கு மேல் இந்தத் தானியங்களை வறுக்கலாம். மிளகாய், மஞ்சள், உப்பு, பெருங்காயம் இவைகளை அம்மியில் வைத்து விழுதாக அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அடுப்பை நிழல் போல் எரிய விட்டு ஒரு இரும்புச் சட்டி அல்லது மண் வாணயில் வறுக்க வேண்டும். முதலில் தேங்காய்த் துண்டங்களைப் போட்டு, பாதி வறுபட்டதும் ஒரு சிறிய கரண்டியினால் அளவாகக் கார விழுது அதில் சேர்த்து, சிறு தென்னங்குச்சிகளினால், தேங்காய் முழுவதும் காரம் ஒட்டிக் கொள்ளும்படி புரட்ட வேண்டும்.

பிறகு, அவல், எள்ளு முதலியவற்றையும் நிலக்கடலையையும் பிற்பாடு எல்லாத் தானியங்களையும் இதே போல் வறுக்கவும். ஒவ்வொன்றையும், தனித் தனியாகவும் கொஞ்சங் கொஞ்சமாகவும் வறுப்பது நல்லது. அரைக்கால்படி தானியத்தை இரண்டு, மூன்று முறையாக வறுத்தால் நன்ருக இருக்கும். நனைத்த தானியங்களை ஈரம் போகும் வரை சட்டியில் புரட்டிய பின் காரம் தடவ வேண்டும்.

ஒரு பெரிய தட்டில் வறுத்த சாமான்களைப் போட்டு வெயிலில் வைத்து, சுத்தமான முறத்தினால் புடைத்துத் தோல் கறுகல் முதலியவற்றை நீக்கி, காற்றுப் புகாத பாத்திரத்தில் எடுத்து வைக்கவும்.




## இந்த பிரபலமான மூன்று சோப்புகளும் ஜனங்களின் விசேஷ நன்மதிப்பைப் பெற்றுள்ளன...

இந்த பெயர்களையும் டிசைன்களையும் கொண்ட சோப்புகளின் விசேஷகுணங்களில் பொதுஜனங்கள் நம்பிக்கைவைத்திருக்கிறார்கள். வேறுசோப்புகளைத் தயாரிக்கும் நம்பிக்கை வைக்கக்கூடாத சிலர் தங்களுடைய சோப்புகளின் குறிகளுக்கும், பெயர்களுக்கும், டிசைன்களுக்கும் 'ஸன்லைட்', 'லக்ஸ் டாய்லட்', 'லைப்பாய்' சோப் இவைகளுடைய குறிகளையும், பெயர்களையும், டிசைன்களையும் போலுள்ள இதர வணிகக்குறிகளை சட்டத்திற்கு மீறி உபயோகித்துவந்தும், உபயோகித்து வருவதும் காணப்படுகிறது. இது மாதிரி குறிகளையும், பெயர்களையும், டிசைன்களையும் உபயோகிப்பது, பொதுஜனங்களை ஏமாற்றுவதற்கென்றே வேண்டுமெனச் செய்வதாகக் கருதப்படுகிறது.

# எச்சரிக்கை!

## வணிகக்குறிகளின் துஷ்பிரயோகம்

லீவர் ப்ரதர்ஸ் (இந்தியா) லிமிடெட்—'ஸன்லைட் சோப்', 'லக்ஸ் டாய்லட் சோப்', லைப்பாய் சோப்' இவைகளை தயாரிப்பவர்கள்—இதன் மூலம் எச்சரிப்பது என்னவென்றால்: லீவர் ப்ரதர்ஸ் (இந்தியா) லிமிடெட் தயாரிக்கும் சோப்புகளைத்தவிர மற்ற ஏதேனுமொரு நபர், வர்த்தகக்கூட்டம், கம்பெனி, சோப்புகளிலோ, கார்டன்களிலோ, உறைகளிலோ, அட்டைப் பெட்டிகளிலோ, 'ஸன்லைட்', 'லக்ஸ் டாய்லட்' அல்லது 'லைப்பாய்' சோப் இவைகளுடைய பெயர்களையோ, குறிகளையோ அல்லது டிசைன்களையோ கொண்ட சாமான்களை, சட்டத்தை மீறி, தயாரிப்பதில் ஈடுபடவோ, விற்கவோ, விற்பனைக்கு கொடுக்கவோ, விவரிக்கவோ, விற்பனைக்கு அனுப்பவோ, அல்லது பிரசுரப்படுத்தவோ, அல்லது மேற்கூறியவைகளில் ஏதேனுமொன்றைச் செய்ய உதவுவார்களேயானால் அவர்களின்மேல் சிவில் மூலமோ கிரிமினல் மூலமோ அல்லது இரண்டின் மூலமோ லீவர் ப்ரதர்ஸ் (இந்தியா) லிமிடெட் தங்களாலான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்வார்கள்.

இந்த வணிகக்குறிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

லீவர் ப்ரதர்ஸ் (இந்தியா) லிமிடெட் பொது ஜன நன்மையைக்கருதி இந்தப் பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

L COM. 71-111 TM

# பொங்கல் பிரார்த்தனை

வாரன்

**800** வருஷங்களுக்கு முன் ஒரு சந்நியாசி ஸ்ரீரங்கத்தின் வீதி வழியாகப் பிக்ஷைக்குச் சென்று கொண்டிருந்தார். மிக்க கம்பீரமான குரலில் சில தமிழ்ப்பாடல்களைப் பாடிய வண்ணமாயிருந்தார். சந்நியாசியின் முகத்தைப் பார்த்தால் அவர் மனம் பிறரால் எட்ட முடியாத ஒரு உலகில் லயித்திருந்தது போலவே தோன்றும். உள்ளத்தில் பொங்கிய ஆனந்த வெள்ளம் அங்கு அடங்கப் பெறாமல் அவர் முகத்திலே ஜோதியாக விளங்கிற்று.

பாடிக்கொண்டே வீதியில் சென்றவர் ஒவ்வொரு வீட்டு வாசலாக நிற்கவில்லை. தமக்குரிய அளவிற்கு மேல் பிக்ஷை வாங்குவது அவருக்கு வழக்கமும் இல்லை. ஆதலால் குறிப்பிட்டது போல் மூன்றிடங்களில் மட்டும் தான் நிற்பார். அன்றைய தினம் நின்ற போது அவ்வீட்டு வாயிற் கதவு அடைத்திருந்தது. நல்ல பனிக்காலமாதலால் அதிகாலை நேரத்தில் வீட்டிலுள்ளோர் எழுந்திருந்து கதவைத்திறந்து வைக்கவில்லை. சந்நியாசியின் மனமோ அவர் நின்றுகொண்டிருந்த இடத்தையும் அப்பொழுது நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தையும் கடந்து பாவனையுலகில் பதிந்துவிட்டது. அற்புத அநுபவத்தில் மூழ்கிக்கிடந்தது. வாயினால் பாடிக்கொண்டே சிறிது நேரம் மெய் மறந்து நின்றார்.

திடீரென்று அடைத்திருந்த கதவு திறந்த சப்தம் கேட்டது. அவ்வீட்டிற்குள்ளிருந்து 'சித்திர உருவமோ' என்று அதிசயிக்கத்தக்க அழகு வாய்ந்த இளம் பெண் ஒருத்தி வெளியே வந்தாள். கை வளையல்களும் காலில் அணிந்திருந்த பாதசரங்களும் அன்னம் போன்ற அவள் மென்மை நடைக்குத்தாளம் போல் ஒலித்தன. கையில் எடுத்துவந்த பிக்ஷையை இடுவதற்காகச் சந்நியாசியை நோக்கிச் சென்றாள்.

அடைத்த கதவு திறந்ததிலிருந்து நடந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் விடாமல் கவனித்த சந்நியாசி அப்பெண் தன்னருகே வந்ததும் பூமியில் ஸாஷ்டாங்கமாக விழுந்து அவளை நமஸ்காரம் செய்தார். தான் எதிர்பாராத அச்செயலைச் சந்நியாசியிடம் கண்டு அப்பெண் திடுக்கிட்டாள். பனி நேரமாயிருந்த போதிலும் பயத்தால் அவள் உடல் நடுங்கி வியர்க்க ஆரம்பித்தது. 'தன்னைச் சந்நியாசி வணங்கிவிட்டாரே; தன் கதி என்னவாகுமோ?' என்று கலங்கினாள். கீழே விழுந்து வணங்கியவர் எழுந்திருப்பதற்குமுன் கையில் பிக்ஷையோடு ஓடிப் போய் உடல் நடுங்கத் தன் தந்தையிடம் நின்றாள்.

நடந்ததைத்தெரிவித்து விட்டு, 'சந்நியாசி சுமங்கலிப்பெண்ணை வணங்கலாமா? வணங்கினால் அவளுக்கு ஏதாவது ஆபத்து வருமோ?' என்று பதட்டத்துடன் தந்தையைக்கேட்டாள். அவள் தந்தை சிறிதும் கலங்காமல் சிரித்துக்கொண்டே, 'அவர் என்ன பாடலைச் சொல்லிக்கொண்டிருந்தார்? அது உனக்கு ஞாபகத்திற்கு வருகிறதா பார்' என்றார். பெண் சற்று யோசித்து, 'உந்து மத களிற்றன்' என்றுவரும் திருப்பாவைப் பாடலைச் சொல்லிக்கொண்டிருந்தார்'' என்று பதில் கூறினாள்.

'குழந்தாய்! அப்படியானால் நீ கொஞ்சங்கூடப் பயப்பட வேண்டாம். கோபிகைப் பெண்கள் கண்ணன் பத்தினியாகிய நப்பின்னைப்பிராட்டியைத் தங்களுக்கு அருள் செய்யும்படியாக வேண்டிக்கொள்ளும் பிரார்த்தனையே இப்பாடலில் அடங்கிய பொருள். அவர்இதைச் சொல்லும்போது பாவனையினால் கோபிகைகளில் ஒருத்தியாகி, பிருந்தாவனத்தில் (மானஸிகமாக) சஞ்சரித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது கதவைத்திறந்து வெளியேசென்ற நீ அவருக்கு நப்பின்னைப் பிராட்டியாகவே காட்சியளித்தாய். அவர் நப்பின்னையாகவே உன்னை வணங்கினார். உன்னை வணங்கியதாகக் கொள்ளவேண்டாம்' என்று தந்தை சமாதானம் சொன்னதாகவும் அச்சந்நியாசியை விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைப் பிரகாசப் படுத்திய ராமாநுஜர் என்றும் வைணவ குருபரம்பரைக் கதை கூறுகிறது.

ராமாநுஜர் வாழ்க்கையைப் பண்படுத்திய நூல்கள் இரண்டு. ஒன்று ஆண்டாள் இயற்றிய திருப்பாவை; மற்றொன்று நம்மாழ்வார் செய்த திருவாய் மொழி. தன்னையே பிறர் நன்மைக்காகத் தியாகம் செய்யும் பண்பு திருவாய் மொழியால் ராமாநுஜருக்கு உண்டாயிற்று. அப்

பண்பிற்கு அடிப்படையாக வேண்டியது பாவனுசக்தி. பிறர்படும் துயரத்தையும் பிறர் அநுபவிக்கும் இன்பத்தையும் அவர்கள் நெஞ்சோடு (மனத்தோடு) தன் நெஞ்சை வைத்து அவர்களைப் போலவே தானும் அனுபவித்துணர்தல் பாவனுசக்தி. அப்பாவனுசக்தியை ராமாநுஜர் ஆண்டாள் இயற்றிய திருப்பாவையால் அடைந்தார். குருவினிடம் தாம் அரிதில் பெற்ற உபதேசத்தைக் குருவின் கட்டளையை மீறிப் பலர்அறிய உபதேசித்தார். 'தம் கட்டளையை மீறலாமா?' என்று குரு கேட்டபோது, 'பலஉயிர்கள் மோக்ஷசாம்ராஜ்யத்தைப் பெறுவதற்கு நான் ஒருவன் மாத்திரம் தங்கள் கட்டளையை மீறி நரகத்திற்குப்போனல் என்ன?' என்று பதில் கூறித் தம் குருவையே தம் தியாகப் பண்பில் ஈடுபடுத்திப் பிரமிக்கச் செய்தார். உயிர்கள் யாவும் முக்திபெறவேண்டுமென்று பகவானைச் சரணுகதி அடைந்தார்.

பிறர் நன்மைக்காக இவ்வாறு எல்லா வகைகளிலும் தம் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்த ராமாநுஜர் முப்பதுபாடல்கள் அடங்கிய திருப்பாவையை அடிக்கடி சொல்லி அநுபவித்து வந்தார். அப்பாடல்களுள் விசேஷமாக அவர் ஈடுபட்டு அநுபவித்தது மேலே சொல்லிய 'உந்து மதகளிற்றன்' என்ற ஒன்றே என்று உரையாசிரியர் கூறுகின்ருர்.

ஆண்டாளுக்குக் கண்ணனிடம் முதிர்ந்த பக்தியினுல், தான்வசித்த ஊரே கண்ணனிருந்த பிருந்தாவனமாகத் தோன்றியது. அங்கிருந்த பெண்கள் அனைவரும் கோபிகைப் பெண்களாகவே காட்சியளித்தனர். அவ்வூர்க் கோயிலும் கோயிலிலிருந்த கடவுளும் கண்ணன் மாளிகையாகவும் கண்ணனுகவும் தெரிந்தன. பாவனை முதிர்ச்சியால் அவளும் கோபிகைகளில் ஒருத்தியாகி அவர்கள் போலவே நினைக்கவும் பேசவும் தொடங்கினுள். மார்கழிமாதத்தில் ஒருநாள் விடியற் காலத்தில் பலகோபிகைகள் நிறைந்த கூட்டத்தில் தானும் ஒருத்தியாகக் கண்ணன்மாளிகைவாசலில் நின்று நப்பின்னைப் பிராட்டியைத் தங்களைக் கண்ணனிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக எழுந்துவந்து கதவைத் திறக்கும்படியாகப் பிரார்த்தனை செய்தாள். பக்தர்கள் மனதைப் பரவசப் படுத்தும் அப்பிரார்த்தனையில் அமைந்த ஒவ்வொரு சொல்லையும் படித்துத் தான் அனுபவிக்க வேண்டும்.

உந்து மதகளிற்றன் ஓடாததோள் வலியன்
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னுய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தன காண்: மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவின காண்
பந்தார்விரலி! உன்மைத்துனன் பேர்பாட
செந்தாமரைக்கையால் சீரார்வளையொலிப்ப
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

[மதம் உந்து களிற்றன்— மதம்பெருகும் யானைப் படைகளையுடையவன், நந்தகோபாலன் — கண்ணனின் வளர்ப்புத் தந்தை, கந்தம் கமழும் குழலீ— வாசனை வீசும் கூந்தலையுடையவளே, கடை திறவாய்— வாயிற் கதவைத் திறப்பாயாக, மாதவிப் பந்தல்மேல்— (கூட்டில்) குருக்கத்திக் கொடியாலும் பூவாலும் செய்த படுக்கையிலிருந்து, பல்கால் — அடிக்கடி, பந்து ஆர்விரலி — பந்துபொருந்திய விரல்களை யுடையவளே, மைத்துனன்— கண்ணன், பேர்—நாமமும் புகழும், சீர் ஆர் வளை— சிறப்புப் பொருந்திய வளை, மகிழ்ந்து திறவாய்— சந்தோஷத்தோடு திறப்பாயாக.]

கண்ணனிடம் அளவுகடந்த பக்தி கொண்டிருந்த கோபிகைகளுக்குக்கண்ணனுக்குக் கம்ஸனுலும் அசுரர்களாலும் வந்துகொண்டிருந்த ஆபத்துக்களை நினைக்கும்போதெல்லாம், பயம் உண்டாகிறது. தங்களைப்போலவே கண்ணனை அபிமானிக்கும் தந்தை நந்தகோபனின் பலத்தையும் வீரத்தையும் நினைக்கும் போது தான் அவர்களுக்கு ஆறுதல் உண்டாகிறது. தோன்றிய பயமும் நீங்குகிறது. ஆகவே நப்பின்னையின் உதவியால் கண்ணனைப் பெற விரும்பும் கோபிகைகள் மாளிகைக்கு வெளியே வாசலில் நின்றுகொண்டு'யானையை ஒத்த வலிமையும் போரில் பின்வாங்காத வீரமும் நிறைந்த நந்தகோபரின் மருமகளே' என்று அழைக்கிருர்கள்.

பெயர் சொல்லாமல் தன்னை 'நந்தகோபாலன் மருமகளே!' என்றழைத்ததைக் கேட்டு உள்ளிருந்த நப்பின்னை 'கண்ணனுக்குக் கோபியர் அனைவரும் மனைவிமாராயும் அதனுல் நந்த கோபால

னுக்கு மருமகள்களாகவுமிருக்க, எனக்கு மாத்திரம் கண்ணன் அபிமானம் அதிகமிருப்பதாகப் பொருமை கொண்டு இவ்வாறு அழைக்கிருர்கள். பதில் சொல்லக் கூடாதென்று பேசாமலிருந்தாள். அதற்காக வெளியேயிருந்தவர்கள் 'நப்பின்னுய்' என்று மறுபடி பெயர்சொல்லி அழைக்கிருர்கள்.

அதைக் கேட்ட பின்னும் நப்பின்னை பதில் சொல்லவில்லை. 'கிருஷ்ணனும் தானும் உள்ளிருப்பதை அறிந்தால் ஆத்திர மடைவார்கள். தன்னிருப்பைக் காட்டிக் கொள்ளக்கூடாது' என்று எண்ணி மௌனமாகவேயிருந்தாள்.

இதைக் குறிப்பாக அறிந்து கொண்ட கோபியர்கள் 'உன்னிருப்பை நீ மறைக்கப் பார்க்கலாம். பூச்சூடித் தைலம் பூசிய உன் கூந்தலின் வாசனை உன்னிருப்பை எங்களுக்கு வெளிப்படுத்துகிறது. காட்டில் வீசும் நிலவுபோல் வீணுகாமல் உன் கூந்தலில் தேங்கியிருக்கும் பரிமள (வாசனை) வெள்ளத்தை நாங்கள் எல்லோரும் அனுபவித்து விடாய் தீரும் பொருட்டுக் கதவைத்திற' என்றுகதவின் துவாரத்தின் வழியாகப் பார்த்துச் சொல்லுகிருர்கள்.

மௌனமாயிருந்து இவர்களுக்குத் தப்பமுடியாதென்று அறிந்துகொண்ட நப்பின்னை' நள்ளிருளில் வந்து ஏன் எழுப்புகிறீர்கள்?' என்று கேட்டாள்.

கோபிகைகள்:- பொழுது விடிவதற்கடையாளமாகத் தூங்குபவரை எழுப்புவது போல் எல்லாத் திசைகளிலும் வந்து கோழிகள் கூவுகின்றன. அது உன் செவியில் விழவில்லையா?

நப்பின்னை:- இரவிலும் பகலிலும் சாமந்தோறும் கோழி கூவும். நீங்கள் கேட்பது சாமக் கோழியின் குரல். அது பொழுது விடிவதற்கு அடையாளமாகாது. வேறு அடையாளமிருந்தால்தெரிவியுங்கள்.

கோபிகைகள்:- மாதவிக் கொடிகொண்டு மென்மையாகச் செய்த பூம்படுக்கை தூக்கத்தை உண்டுபண்ணும். அப்படுக்கையில் உறங்கிய குயில் இனங்கள் விடிவை உணர்ந்து பல தடவை கூவி விட்டன. அதை நீ இப்பொழுதும் கேட்டுப் பார்.

நப்பின்னை:- விடிந்ததாகவே இருக்கட்டும். நீங்கள் வந்த காரியம் யாது?

கோபிகை:- கண்ணனேடு விளையாடி அவனை வெற்றிகொண்ட பந்தை நெகிழவிடாமல் எப்பொழுதும் விரலில் வைத்து அழுத்திக்கொண்டிருக்கும் உன்னைக் காணவேண்டும். கண்டபின் உன்னேடு சேர்த்து உன் மைத்துனனுகிய கண்ணனின் பிரதாபங்களைப் பாடவேண்டும்.

நப்பின்னை:- அப்படியானல் கதவை நீங்களே திறந்துகொண்டு உள்ளே வாருங்கள்.

கோபிகைகள்:- உயிர்கள் தாம்செய்த பாவத்தையும் ஈசுவரனின் சுதந்திரத்தையும் நினைத்து அஞ்சவேண்டாம் என்று அருள் செய்யும் உனது சிறந்த தாமரைக் கையால் நீயே திறக்கவேணும். கண்ணனைப் பிரிந்திருக்கமாட்டாமல் நாங்கள் எல்லோரும் உடல் மெலிந்து கைவளையல்களை இழந்திருக்கிறேம். நீயோ கண்ணனைப்பிரியாது கூடவே இருக்கும் மகிழ்ச்சியால் உடல் பூரித்து, கழலாத வளையல்களைப்பெற்றிருக்கிருய். மேன்மையான அவ்வளையல்களின் ஓசையை நாங்கள் கேட்கும்படி திறக்கவேணும். உன்நடையழகை நாங்கள் கண்டநுபவிக்கும்படி நீ வந்து திறக்கவேணும். தாய், தந்தை, கணவன் எல்லாவித உறவுகளும் நமக்குக் கண்ணனே என்று உணர்ந்து ஆர்த்தியோடு கோபிகைகள்வந்தார்கள். அவர்களுக்கு அருள் செய்தேயாகவேண்டும் என்று மகிழ்ந்து கதவைத் திறப்பாயாக. [பாடலையொட்டி முன்னேர் எழுதிய வியாக்கியான சாரம் இது.]

இப் பிரார்த்தனைப்பாடலை ராமாநுஜர் சொல்லிவந்தபோது ஆண்டாளைப் போலவே கோபிகையாகி விட்டார். 'செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்' என்று அவர் சொன்னபோது கதவைத்திறந்து கைவளைகள் ஒலிப்பப் பிக்ஷையிட நடந்துவந்த பெண் அவருக்கு நப்பின்னையாகவே தோன்றினுள். அதனுல் பக்தியோடு அவளை வணங்கினுர்.

'இப்படிப் படிப்போரைப் பாவனையுலகில் இழுத்துச் செல்லும் திருப்பாவை முப்பது பாடல்களையும் தினம் ஒருருவா

வது சொல்லவேண்டும். அதுவும் முடியாவிட்டால் கோபிகைகள் அனைவரும் கண்ணன் எதிரே நின்று முடிவாகச் செய்யும் பிரார்த்தனைப் பாடலையாவது ஒரு முறை சொல்லட்டும்' என்று ஒருபக்தர் 800 வருஷங்களுக்கு முன் உபதேசம் செய்தார். அப்பொழுது உபதேசம் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவர், 'கோபிமார் கண்ணனிடம் கொண்டிருந்த பக்தியினால் உய்ந்தார்கள்; ஆண்டாள் பாவனை மிகுதியினால் கோபிகையாகிப் பிரார்த்தனை செய்து கண்ணன் அருளைப் பெற்றாள். பக்தி, பாவனை இரண்டுமில்லாத என் போன்றவர்கள் இப் பிரபந்தத்தை வாயால் சொல்லுவதால் என்ன பயன் உண்டாகப்போகிறது?' என்று கேட்டுவிட்டார்.

உபதேசம்செய்த பக்தர் அங்கிருந்தோர்களுக்கு அப்பொழுதே அழகான வார்த்தைகளால் பதில் சொன்னார். 'தன் கன்றை இழந்த கறவைப் பசு, தன் மடுவிலே தோல் கன்றின் வாயை வைத்துப் போலியாக ஊட்ட விட்டாலும் பால் சுரக்கும். அவ்வாறே பக்தியும் பாவனையுமில்லாமல் இப் பாடல்களைச் சொன்னால்கூடப் பகவான் மனமிரங்கி அருள் சுரப்பார்' என்ற பதிலைக்கேட்டு அனைவரும் ஆச்சரியமடைந்தனர்.

அப்பொழுதிருந்தே திருப்பாவைப் பிரபந்தத்தைத் தேவாலயங்களில் பலர் சேர்ந்து தினம் ஒருமுறை சொல்லவும் தெய்வங்களுக்கு விசேஷ காலமான மார்கழி மாதத்தில் தினம் ஒரு பாட்டு வீதம் சொல்லி மகர சங்ராந்தி புண்ய கால மான பொங்கல் தினத்தில் கண்ணனிடம் தெரிவிக்கும் முடிவுப் பிரார்த்தனைப் பாடலை (சாத்துமுறையாகச்) சொல்லவும் ஏற்பாடாகி நடந்துவருகிறது. பல்வேறு கொள்கைகளும் நாகரிகங்களும் கலந்துவிட்ட இக்காலத்திலும் கூடச் சென்னைமாநகரில் ஒவ்வொரு ஆண்டிலும் மார்கழி மாதத்தில் தினம் பல இடங்களில் திருப்பாவைப் பிரசங்கங்கள் நடக்க, ஆயிரக்கணக்கான ஜனங்கள் கேட்டநுபவிப்பது சகஜமாயிருக்கிறது.

பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

**குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து**

**சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்**

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

**போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்**

**டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,**

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

கண்ணன் மாளிகைக்குள் சென்ற கோபியர் அனைவரும் கண்ணனை வேண்டும் கடைசிப் பிரார்த்தனையைக் கீதா சாரம் என்று சொல்லலாம். உபநிஷதச் சுருக்கு என்றாலும் மிகையாகாது. சுயநலங்கருதித் தங்களுக்காக எதையும் வேண்டவில்லை. அனவரதமும் பகவானுக்காகவே தாங்கள் தொண்டுசெய்து வரவும், எல்லாவித உறவுகளும் தங்களுக்குப் பகவானாகவேயிருக்கும் உண்மையைத் தாங்கள் மறவாதிருக்கவும் பகவானுக்கே தொண்டுசெய்வதில் தங்களுக்கு அகங்கார (யான்) மமகார (எனது) உணர்ச்சி உண்டாகாதிருக்கவும் வேண்டுவது மேலான பிரார்த்தனையாகும்.

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்த நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறை கொள்வானன்றுகாண்; கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நங்காமங்கள் மாற்று ஏலோ ரெம்பாவாய்

[சிற்றஞ்சிறுகாலே-அதி காலையிலே, பொன்தாமரை அடி-அழகிய தாமரை போன்ற பாதங்களை, போற்றும்-தோத்திரம் செய்யும், கேளாய்-கேட்டருள வேணும், பெற்றம்-பசுக்களை, குலம்-ஆயர்குலம், எங்களைக் குற்றேவல் கொள்ளாமல் போகாது-எங்கள் தொண்டை நீ பெற்றுக்கொள்ளாமல் தள்ளிவிடலாகாது, இற்றைப் பறை கொள்வான் அன்று-இப்பொழுது உன்னிடம் பிரயோசனம் பெற்றுப்போக நாங்கள் வந்தவர்களல்ல, எற்றைக்கும்-எல்லாக் காலங்களிலும், ஏழேழ்பிறவிக்கும்-எல்லாப் பிறப்புக்களிலும், உற்றோமே யாவோம்-உறவினராயிருக்கவேணும், ஆட்செய்வோம்-தொண்டு செய்வோம், காமங்கள்-(தொண்டுசெய்யும்போது யான், எனது என்று வரும்) அகப் பற்று புறப் பற்றுக்களை, மாற்று-போக்கித்தந்தருள். ஏல் ஓர் எம் பாவாய்-அசை]

எனக்கு 'இதைக்கொடு அதைக் கொடு' என்று சுயநலந்தோன்றப் பிரார்த்திக்காமல் மேல்கூறிய முறையில் புண்ணிய மாதமாகிய தையில் கடவுள் தொண்டையே வேண்டுவோம். நமக்கென்று ஆசை வையாமல் அவனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் என்று பிறருக்காகவே உழைப்போம். சுயநலம் தோன்றாதிருக்க அவனைப் பிரார்த்திப்போம். சுபிக்ஷம் எல்லாத் துறைகளிலும் தானே வரும். அதைப்பற்றிய கவலையோ சந்தேகமோ கண்ணனிருக்க நாம் ஏன் கொள்ள வேண்டும்?


# காவேரி சந்தா விகிதம்

| | இலங்கை, பர்மா & உள் நாடு | | | மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | ரு. | அ. | பை. | ரு. | அ. | பை. |
| ஒரு வருஷம் | 6 | 0 | 0 | 7 | 8 | 0 |
| அரை வருஷம் | 3 | 0 | 0 | 3 | 12 | 0 |
| தனிப் பிரதி ஒன்றுக்கு | 0 | 8 | 0 | 0 | 10 | 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், "காவேரி,"
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

# இந்த முறைப்படி டால்டா



## உபயோகித்து ருசிமிக்க பலூஷாகிகளை தயாரியுங்கள்

மூன்று பலூஷாகிகளை தயாரிக்க: 1 கப் மைதா மாவில் 2 பெரிய ஸ்பூன் டால்டாவை நன்குக கலந்து பிசைந்தமா தயாரிக்கவும். மாவை சிறிய வட்டங்களாக தட்டி நடுநடுவே சிறிது பள்ளம் செய்துகொள்ளவும். டால்டாவை வாணலியில் பொரிக்குமளவு சூடாக்கி, அடுப்பிலிருந்து இறக்கவும். அதில் வட்டங்களை மெதுவாகப் போடவும். வட்டங்கள் நன்குக உப்பி ஒரே மாதிரியாக சிவப்பதுவரை வாணலியை அடுப்பில் ஏற்றவும் இறக்கவும் செய்யவேண்டும். பிறகு, வட்டங்களை துவாரங்கள் உள்ளதட்டில் வைத்துசூடான கெட்டி சர்க்கரைப்பாகை தடவிஆறவைக்கவும்.

டால்டா ஒரு சுத்தமான தாவர கொழுப்பாகையால் அது அதிக நேரம் சூட்டைத்தாங்குகிறது—எனவே, உணவுகள் ஒழுங்காக முழுவதும் பக்குவமாவதற்கு போதுமான சாவகாசம் அளிக்கிறது.




எந்த உணவுகள் உங்கள் இரத்தத்தை புஷ்டியாக்குகின்றன?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

**தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்**

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 119-172 TM

# பிரிட்டிஷ் மாதரும் யுத்தமும்

*லீலா கோபாலன்*

எந்தத் தேசத்திலும் எந்தக் காலத்திலும் ஒவ்வொரு யுத்தமும் சமூகத்தில் பலவித மாறுதல்களை உண்டு பண்ணுகிறது. மஹா பாரத யுத்தத்திலிருந்து சென்று கடந்த இரண்டாவது உலகச் சண்டை உள்பட அவ்வக் காலங்களில் ஏற்பட்ட குழப்பங்கள் ஒவ்வொரு இடத்திலும் பொது ஜன வாழ்க்கையில் மட்டும் அல்ல, ஆண் பெண் ஒவ்வொருவருடைய பிரத்யேக வாழ்க்கையிலும் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தி இருக்கின்றன.

மேல் நாட்டில் போன நூற்றாண்டு இறுதியில் ஏற்பட்ட யந்திரப் புரட்சி காரணமாகவே மாதர் முன்னேற்றம் வெகு துரிதமாக ஏற்பட்டதெனச் சொல்லலாம். குடும்பத்தில் முதன்மை ஸ்தானம் பெற்று வந்த பெண்மணிகள் அரசாங்கத்திலும், தொழிற்சாலைகளிலும் இதர துறைகளிலும் பணிசெய்ய ஆரம்பித்தனர். மாதர் இயக்கங்கள் பலம் பெற்று அரசாங்க விஷயங்களிலும் வாக்குரிமை ஏற்பட்டு ஆண்களுடன் பெண்களுக்குச் சம அந்தஸ்து ஏற்படலாயிற்று.

1914-18ல் நடந்த முதல் மஹா யுத்தத்திற்குப் பிறகு மேல் நாடுகளில் பெண்கள் சமூகத்தில் மற்றும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. சட்டவாயிலாகப் பெண்கள் உரிமை பல முறைகளிலும் ஸ்தாபிக்கப்பட்டது. விவாக ரத்து, சொத்துரிமை, தொழில் முறைகளில் பேதமற்ற சம்பள விகிதங்கள் முதலியவற்றிற்காகப் பெண்கள் போட்டியிட்டனர். ஆயினும் யுத்த முடிவில் ஆயிரக்கணக்கான ஆண்கள் சண்டையினின்றும் திரும்பி வரப் பொருளாதார வழிகளில் ஆண் பெண்களுக்குள் வேலைப் போட்டி ஏற்பட்டு, பொதுவாகப்பெண்கள் மறுபடி தங்களுக்குரிய அடுப்பங்கரையிலேயே சரண் புகும்படியான நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டன.

ஆனால் இரண்டாவது மஹா யுத்தமோ முன்னணியில் சண்டை இடும் ஆண்களோடு அல்லாமல், பெண்கள், கிழவர்கள், பாலர்கள் உள்பட எல்லோரும் யுத்த காரியங்களில் ஈடுபடும்படியான அகோர முறையில் நடந்தது. லக்ஷக்கணக்கான ஆண்கள் யுத்த முஸ்தீப்புகளுடன் வெளி நாடு செல்லவே, உள் நாட்டில் மேலும் மேலும் பெண்கள் பல துறைகளிலும் முன்பு ஆண்கள் செய்துவந்த வேலைகளில் ஈடுபடலானார்கள். விசேஷமாகப் பிரிட்டனில் விரோதியின் யுத்த குண்டுகள் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் புகுந்து ஆயுதம் தரித்தவர்கள் தரிக்காதவர்கள் என்ற வேற்றுமையையே அகற்றிவிட்டன. யுத்தத்தை நடத்துவதிலும் வெற்றிக்காகப் பாடுபடுவதிலும் ஒவ்வொருவருக்கும் பங்குகொள்ள இடம் ஏற்பட்டது.

யுத்தத்திற்கு வேண்டிய சாதனங்களைச் சேகரிக்கும் பலவித தொழிற்சாலைகளிலும் ஆண்கள் வேலையைப் பெண்கள் செய்யலாயினர். கொஞ்சம் கொஞ்சமாக உள் நாட்டுப் பாதுகாப்பு வசதிகளில் ஆண்கள் குறைவு ஏற்பட ஏற்பட, பெண்களே ஆயுதபாணிகளாக முன் வரவேண்டியிருந்தது. தொழிற்சாலைகளில் பெண்கள் துப்பாக்கிகளையும், வெடிகுண்டுகளையும், பீரங்கிப்பாகங்களையும் சகஜமாகக் கையாள ஆரம்பித்தனர். யுத்த இலாக்காக்களில் மோட்டார் ஓட்டிகளாக வேலையில் அமர்ந்தனர். வீட்டுக் கூரைகளில் ஏறி, கிழவர்களுடனும் சிறுவர்களுடனும் விரோதி விமானங்கள் வருவதையும் தீ மூள்வதையும் கவனித்து, பாதுகாப்புகளை எச்சரிக்கும் கடமையை ஏற்றனர். ஆயிரக்கணக்கான ஜனங்கள் போர் முனைகளிலிருந்தும் உள்நாட்டுக் குண்டுவீழ்ச்சிகளிலிருந்தும் காயமடைந்து ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் வந்து சூழ, பெண்களே அங்கும் பெரும்பாலான வேலைகளில் உதவிசெய்ய ஏற்பட்டது.

இதுமட்டுமல்ல, கிராமப் புறங்களில் ஆண்கள் போர்முனை செல்வதால் விவசாயப் பணிகள் கவனிப்பாரற்று, சீர் கெடாமல் பார்ப்பது ஜனங்களுக்கு ஒரு பெரும் பாரம் ஆயிற்று. இம் முறைகளிலும் பெண்கள் நிலச் சேனைகளில் கலந்து ஏர்பிடித்து உழ ஆரம்பித்தனர். பலவிதகாரியாலயங்களிலும் இவ்விதமே குமாஸ்தா முதல் அதிகாரவர்க்கம்வரை ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர்.

யுத்தமும் முடிந்தது. போர் முனையிலிருந்து ஆண்களும் திரும்பினர். ஆயினும் ஆண்கள் செய்த பலவித தொழில்களிலும் ஈடுபட்ட பெண்கள் மறுபடி தத்தம் குடும்ப அலுவல்களில் முன்போல்

கவனம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? இந்த யுத்தகால மாறுபாடுகளின் சின்னங்கள் தற்போது சமூகத்தில் இல்லாமலா இருக்கும். முதலாவது, ஆண்களுடன் சரிசமானமாக வெற்றிக்காகப்பாடுபட்ட பெண்களுக்கு, சுயேச்சையான மனோபாவமே பெருகி இருக்கிறது என்பதில் ஆச்சரியமென்ன? உதாரணமாக, இங்குள்ளவர்கள் அபிப்ராயத்தில் யுத்தப் புரட்சி காரணமாக மாதர் கோஷ்டிகளில் சுருட்டு, குடி முதலிய லாகிரி வஸ்துக்கள் உபயோகம் முன்பு ஆண்கள் மத்தியில் எவ்வளவு இருந்ததோ கிட்டத்தட்ட அவ்வளவே ஏற்பட்டிருப்பதாய்ச் சொல்லப்படுகிறது. தொழிலில் ஈடுபட்ட பெண்மணிகள் பலருக்குத் தொழில் முறைகளிலேயே ஒரு ஊக்கமும் ஏற்பட்டிருக்கிறது. யுத்தத்திற்கு முன்பு விவாகமாகி, குடும்ப பாரத்தை வகித்து வந்த பல பெண்களும் கணவர்கள் திரும்பி வந்தபோதிலும் தம் தொழில்களிலேயே இன்னமும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஏதேச்சையாகத் தொழில்புரிந்து ஊதியம் பெற்று ஜீவனம் நடத்திவந்த பலருக்கு மறுபடி இல்லற அடிமையாக வாழ இஷ்டமில்லை. இது காரணமாகப் பல விவாக ரத்துக்களும் ஏற்படுகின்றன. பல குடும்பங்களும் சிதறுகின்றன. தவிர, கணவர்கள் வருஷக் கணக்கில் வெளிநாடுகளில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் சமயம் இங்குள்ள மனைவிமார்கள் வேறு பல ஆடவர்களுடன் கலந்துறவாடி, புதிய சிநேகங்கள் ஏற்பட்டதாலும் பல குடும்பங்கள் பிளவுபட்டன. மறு நிமிடம் தன் தலையில் குண்டு விழுமோ மறுதினம் உயிர் இருக்குமோ என்று ஒவ்வொருவரும் பீதி அடைந்து திரியும் காலங்களில் ஜனங்களிடையே கற்பு, நாணம், குடும்ப ஒழுக்கம் முதலிய உயரிய நோக்கங்கள் சற்றே குறைவது சகஜம்தானே?

விசேஷமாக யுத்தத்திற்கு முன்பு சொற்ப ஊதியத்திற்கே வீடுகளிலும் ஹோட்டல் முதலிய போஜன சாலைகளிலும் ஊழியம் செய்துவந்த பலரும் மறுபடி அதே கஷ்டமான வேலைகளில் ஈடுபட முன் வருகிறதில்லை. அதுவுமன்றி அவர்களுக்குள்ளும் தொழிற் சங்கங்கள் ஏற்பட்டு, வேலை நேரங்கள், சம்பள விகிதங்கள் யாவும் நியமிக்கப் பட்டிருக்கின்றன. உதாரணமாக, இப்பொழுது இத்தேசத்தில் சாதாரண வீட்டு வேலைகள் செய்யக் குறைந்தது பெண்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு 2½ ஷில்லிங் அதாவது சுமார் 1¾ ரூ கொடுக்க வேண்டும். கொடுத்தாலும் முன்போல எளிதாக வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் அவர்களை அதிகார தோரணையில் நடத்த முடியாது. தற்போது தொழிற் கட்சி அரசாங்கம் இருப்பதாலும், ஏற்றுமதிக்காகப் பல விதப் பொருள்களும் அதிகம் உற்பத்தி செய்வதாலும் தொழிற் சங்க இயக்கங்களினால் வாரத்திற்கு 40 மணி நேரமே வேலைக் கட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாலும் இது வரை வேலை இல்லாத் திண்டாட்டமும், போட்டியும் ஏற்படவில்லை. அதனாலேயே பெண்களும் இம்மாதிரி வேலைகளில் ஈடுபட முடிகிறது.

இக்காரணங்களால் ஏழை மாதர்களுக்கும் சுயமரியாதை அதிகம் ஏற்பட்டிருப்பது எனக்கு மிகவும் சந்தோஷத்தைத் தான் கொடுக்கிறது. அதுவுமன்றி, பல சீமாட்டிகள் முன் போல் எண்ணற்ற வேலை ஆட்களை ஏவிக் கொண்டு உல்லாசப் பொழுது போக்குவது நின்று, பலரும் தத்தம் வீட்டு வேலைகளை ஒருவாறு கவனிக்கத்தான் வேண்டி இருக்கிறது. இதுவும் நல்லது தான் என்று எனக்குத் தோன்றுகிறது.

மற்றொரு புறத்தில் யுத்தத்தில் பல வீடுகள் அழிந்ததால் இங்கு இப்பொழுது சாதாரண மக்களுக்குக் குடி இருப்புவசதி அதிக கஷ்டமாக இருக்கிறது. இது காரணமாகவும் வாழ்க்கைச் செலவு மிகவும் அதிகரித்திருப்பதாலும் பல பெண்களும் ஆண்களும் தற்சமயம் மணம் முடிக்கத் தயங்குகிறார்கள். அப்படிச் செய்துகொண்டாலும் குழந்தைகள் பெற்று வளர்க்கச் சற்று யோசிக்கிறார்கள். தவிரவும் சண்டையில் மரித்தவர்கள் காரணமாகத் தற்பொழுது இங்கு ஆண்களைவிடப் பெண்கள் தொகை அதிகமாகவும் இருக்கிறது.

ஆனால் பல கஷ்டங்களையும் நிவர்த்திக்கத் தொழிற் கட்சி அரசாங்கம் பாடுபட்டு வருகிறது. இலவச வைத்தியம் இலவசப் படிப்பு, குழந்தை பராமரிப்பு, தாய்மார்களுக்கு உதவி முதலிய பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் பொதுவில் இங்குள்ள சீமாட்டிகளுக்குச் சற்றே திண்டாட்டமாக இருந்தாலும். வேலைசெய்யும் பெண்களுக்குக் கொண்டாட்டம்தான்.

தொடர்கதை

# லக்ஷியக் கனவு

கே. சுந்தரம்மாள்

“பெண் புத்தியால் வீண் கனவு கண்டேன்” என்று மெல்லிய குரலில் பாடிய வண்ணம் இடைவேளை நேரத்தின் அமைதியாகத் தனது அறையில் ஈஸிச்சேரில் சாய்ந்து கொண்டிருந்த லீலாவை, “அம்மா தந்தி” என்ற வேலைக்காரியின் குரல் திடுக்கிட்டு எழுந்திருக்கச் செய்தது. தந்தியைப் பிரித்தாள்.

“அவசரமான விஷயம்; உடனே புறப்பட்டுவா. காதம்பரி” என்றிருந்தது. அதை எடுத்துக்கொண்டு நிலையத்தின் தலைவியின் அறைக்குச் சென்றாள்.

“வா லீலா. உனக்கும் தந்தி வந்திருக்கிறதா?” என்றாள்.

“அப்படியானால் உங்களுக்கும் வந்திருக்கின்றதா? என்னவென்று?”

“உன்னை உடன் அனுப்புமாறு. என்ன விசேஷம்? கல்யாணமாகி ஏழெட்டு மாதங்களாகின்றனவல்லவா? குடும்ப வாழ்க்கையை மேற்கொண்ட பின் இதர விஷயங்களில் அதிக கவனம் செலுத்தவில்லையென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இப்பொழுது சொந்த விஷயமாகவே உன்னை அழைத்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்”

“எப்படியோ? போனால் எல்லாம் தெரிந்துவிட்டுப்போகிறது.”

“சரி, ஒருவார ரஜா போதுமல்லவா?”

“ஒருவாரம் எதற்கு? மூன்று நாட்களே அதிகம்”

“சரி, போய்வா. ஒரு வேளை உனக்கும் தன்னைப்போல் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறார்களோ என்னவோ. அப்படி ஏதாவதிருந்தால் மெத்தச்சந்தோஷம். பெண்கள் குடும்ப வாழ்க்கையிலீடுபடுவதே உத்தமம் என்பது என் கொள்கை. அந்த வசதியில்லாதவர்களாக விதி சதிசெய்து விட்டால் மட்டுமே இப்பணிகளில் ஈடுபடுவது உத்தமம். உனக்கு அவ்வாழ்வு கிடைக்குமாறு கடவுளை வேண்டுகிறேன்”

“அப்படியெல்லாம் நினைக்காதீர்கள். விதி தான் என்னைத் தடை செய்திருக்கிறது. நானாகத் தடை செய்யவில்லை. நான் எப்பொழுதும் இப்பணியிலே இருக்க அனுமதியுங்கள். நான் சென்றுவரவா?” எனப் பேச்சை வேறு திக்கில் திருப்பினாள்.

“சரி. போய்வா. பகவான் உனக்கு என்றும் நன்மையைக் கொடுக்கட்டும்” என்றாள்.

தலைவியினிடம் தைரியமாகப் பேசினாளே தவிர அவள் மனம் மிக்க கலவரமடைந்தது. பிரயாண முழுவதும் ஹேஷ்யங்களான பலவித சிந்தனைகளிலேயே கழிந்து வந்தது. “இதுவரை ஆச்ரம விஷயமாக மூன்றுமுறை காதம்பரியின் வீட்டிற்குச் சென்று வந்திருக்கிறோம். தந்திரமாகத் தேவி மாதங்கினி வீட்டில் தங்கிக்கொண்டு காதம்பரி தேவியைப் பார்த்து வந்ததினால் அவரைச் சந்திக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஏன் ஏற்படாமல் செய்துகொண்டேன். விதி தான் என்ன விசித்ரங்களைச் செய்கிறது. ஆச்ரமத்தின் கிளை ஸ்தாபனமிருக்கும் பெஜவாடாவிலா அவர்கள் தாம்பத்ய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்.? அதுவும் இன்னும் ஐந்து வருஷத்திற்கு அவ்வூரிலேயே இருக்க உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். உத்யோக விஷயத்தில் எனக்கும் சுற்றுப் பிரயாணப் பதவி ஐந்து வருஷம் நீடிக்கும். இதுவரை சந்திக்காமல் இருந்ததுபோல் இனி எப்பொழுதும் இருக்க முடியுமா? சந்தித்து விட்டால் என்ன செய்ய முடியும்? இதுவரை நான் வரும் நாள் அவர்களுக்குத் தெரியாது. இன்று அவர்களுக்காகவே செல்லுவதினால் ஸ்டேஷனுக்கே ஆள்வந்து வீட்டிலேயே தங்கும்படியாகி விடுமோ” என்றெல்லாம் எண்ணங்கள் ஓடிக்கொண்டேயிருந்தன.

ஸ்டேஷனுக்குள் வண்டி வரும்பொழுதே சிரித்த முகத்துடன் நிற்கும் காதம்பரியைத் தான் முதலில் பார்த்தாள்.

“ஹல்லோ லீலா!” என்று கைபிடித்துக் கீழே இறக்கினாள் காதம்பரி.

“நமஸ்காரம் அக்கா!” என்று கைகுவித்தாள் லீலா.

வண்டியில் உட்கார்ந்த பிறகு “என்னக்கா விசேஷம்?” என்றாள் லீலா.

“அற்புதமான விசேஷமாதலால் தான் உன்னை வரவழைத்தேன்” என்றாள். லீலாவின் மார்பு படபடவென அடித்துக்கொண்டது. “ஒருவேளை நாம் இன்னாரெனத் தெரிந்துகொண்டு நம் மீது உள்ள அன்பினால் நம்மையும் கல்யாணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்து அழைத்திருப்பாளோ காதம்பரி. அப்படியிருந்தால் நாம் செய்வது என்ன? அப்படிப்பட்ட வாழ்க்கையை மேற்கொள்வதைக் காட்டிலும் சாவேமேல். அவரால் என் வாழ்வு பாழடைந்தது. என்று அவர் மனம் உறுத்திக்கொண்டே இருக்கவேண்டும். அந்த



மாதிரி விவகாரம் ஏற்பட்டால் தயங்காமல் பழிவாங்க வேண்டும்'' என்றெல்லாம் சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது. என்றாலும், "என்ன அற்புதம்?'' என்ற வார்த்தை அவளையறியாமலேயே அவள் வாயில் வந்தது.

"எனக்கு முதன் முதலாகக் கன்னிப் பருவத்தில் தயவுடன் தாலி கட்டினாரே அந்தப் புண்ய புருஷனின் இரண்டாவதுதாரம் என உலகோரால் சொல்லப்படும், மனைவி இரு குழந்தைகளுடன் என்னிடம் வந்திருக்கிறாள்''

"இதென்ன ஆச்சர்யம்? எப்படி உங்களிருப்பிடம் கண்டு வந்தாள்'' என்றாள் அப்பாட என்ற நீண்ட மூச்சுடன் கவலையற்றதுபோல்.

"மூந்தா நாள் சந்தியா காலம் நானும் அவரும் சினிமாவிற்குப் போய் வரலாமென்று புறப்பட்டு வாசற்பக்கம் வரும் சமயம் இரண்டு குழந்தைகளுடன் வண்டியில் வந்து இறங்கினாள் அப்பெண்.

"நீ யாரம்மா? எங்கே வந்தாய்?'' என்றேன்.

"நீங்கள் தானே காதம்பரி தேவி?'' என்றாளவள்.

"ஆமாம். உனக்கு என்ன வேண்டும்?''

"சட்டென இரு குழந்தைகளையும் என் காலடியில் உட்காரவைத்துத் தானும் என் காலில் விழுந்து நமஸ்கரித்துப் பிடித்துக்கொண்டு, என்னைக் காப்பாற்றுவதாகச் சொல்லுங்கள். அப்பொழுது தான் உங்கள் கால்களை விடுவேனென்றாள்.

"மனிதனை மனிதனா காப்பாற்ற முடியும்? பகவான்தானே காப்பாற்றுவார். ஆனாலும் என்னாலான உதவியைச்செய்யப் பின்வாங்கேன். என் காலை விட்டு விட்டு நீங்கள் யார் என்ற விபரங்களைச்சொல்லுங்கள், என்னால் செய்யக்கூடிய உதவியைச்செய்கிறேன்.''

"என்னூர்...... இது'' உங்கள் ஆரம்ப வாழ்க்கையைப் பாழ்படுத்திய அதே ஆசாமியின் வாழ்க்கையின் பங்காளியாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இருக்கும் பொழுதும் பட்டசுகம் அனந்தம், இவ்விரட்டைக் குழந்தைகள் ஆறுமாதக்குழந்தைகளாக இருக்கும்போழுதே அவர் ஈசனடி சேர்ந்து விட்டார். பிறகு அவரால் விட்டுச்சென்ற பணத்தை வைத்துக்கொண்டு காலத்தைக் கழிப்போமென்று நினைத்துத் தேறும் சமயம், என்பிறந்தவீட்டாருக்கும், புருஷன் வீட்டாருக்கும் பணவிஷயமாகப் பெரியயுத்தம் நடந்ததென்றே சொல்லவேண்டும். தடைசியில் இருவரும் போட்டி போட்டு இந்த ஏழு வருஷத்திற்குள் எல்லாம்போய் நானும் குழந்தைகளுமே மீதம். புருஷன் வீட்டுப்பக்கமே தலைகாட்டக் கூடாது என்றுசொல்லி விட்டார்கள். பிறந்தவீட்டில் சம்சாரம் அதிகம். வருவாய் சொல்பம். ஆக ஒருவருஷமாக நான் பட்ட கஷ்டம் சொல்லில் அடங்காது. அந்தநாளிலிருந்து உங்களைப்பற்றிச் சொல்வார்கள். பிறகு நீங்கள் செய்துவரும் சேவைகளைப்பற்றிப் பத்திரிகையில் படித்துத் தெரிந்துகொண்டிருந்தேன். ஆரம்பகாலத்தில் உங்களைத் தூஷித்தவர்களெல்லாம்கூடச் சிலசமயம் உங்களின் சேவைகளைப்பற்றிப் புகழ்ந்து பேசுவார்கள், சமீபத்தில் உங்களின் மறுவிவாகம் பற்றிப் பத்திரிகையில் படிக்கும்பொழுது ஊரே இதேபேச்சில் மூழ்கியிருந்தது. அவர் இறந்ததிலிருந்து உங்களிடம் வந்துவிட வேண்டுமென்ற அவா எனக்கு இருந்தது. ஆனால் தைரியம் வரவில்லை. கஷ்டம் மிஞ்சவே தைரியம் பிறந்தது. யாரையும் சட்டை செய்யாமல், குழந்தையின் கைவளையொன்றே மிஞ்ச அதை விற்றுப் பணத்தை எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன்.''

"என் இருப்பிடம் எப்படியறிந்தாய்?''

"எங்கள் ஊர்ப்பள்ளிகூடத்திற்குப் புதிதாக ஒரு வாத்தியாரம்மா வந்தாள். அவள் கஸ்தூரி நிலையத்தில் படித்தவளாம். எங்கள் எதிர்வீட்டில் குடியிருக்கிறாள். என் கஷ்டத்தைப் பார்த்துவிட்டு, உங்கள் விஷயங்களை எடுத்துச்சொல்லி, 'நீ அவ்விடம் போனால்தான் உன் குழந்தைகள் முன்னுக்கு வர முடியும்' என்றாள். 'என்னை ஏற்பாளோ' என்றேன். உங்களின் உதார குணங்களை எடுத்துச்சொல்லிப் போகும்படி சொன்னாள்'' என்றாள்.

"அவளைக் கஸ்தூரி நிலையத்திற்கு அழைத்துச் செல்லவே உனக்குத் தந்தி கொடுத்தேன். தந்தி கொடுப்பானேன் என்று கேட்பாயானால் மாதம் இரண்டு மூன்றுபேர்கள் இவ்விதம் என்னிடம் அடைக்கலமாக வருகிறார்கள். அவர்களை ஓர்வழிசெய்து அனுப்பும்வரை வீட்டில்தானே வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

"என்ன பொதுச்சேவையை நீ விட்டாலும் அது உன்னைவிடாதுபோலிருக்கிறதே, அந்தச் சேவையில் என்னை மறந்துவிடாதே'' என்று கேலிசெய்கிறார் ஒருசமயம். அவர் மனதிற்கு இவை பிடிக்கவில்லையென்றால் வீண் மனஸ்தாபத்திற்கு இடமேற்பட்டு விடுமல்லவா? அதற்காகவேதான் தந்தி கொடுத்தேன்''

"உங்கள் ஊர்க்காரர்கள் உங்களைப் பற்றி விசாரித்துக்கொண்டுதானிருப்பார்கள் போலும்''

"ஊரில் என்ன? இவ்விடமே எங்கள் ஊர்க்காரர்கள் எவ்வளவு பெயர்கள் இருக்கிறார்கள் தெரியுமா? இருபது முப்பதுவீடுகளில் ஒரே ஒரு வீட்டார்மட்டும் என்னிடம் உண்மையான அன்பு, அதாவது எனது உள்நோக்கத்தைப் புரிந்து கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்காக நானும்! எனக்காக அவர்களும் எதுவேண்டுமானாலும் செய்வோம். முதல் முதலில் அவர்கள்தான் பரிச்சயமானார்கள். அவர்கள் வரப்போக இருப்பதைப் பார்த்து மற்றவர்களும் முதலில் வேடிக்கை பார்க்கலாம் என்பதுபோல் அவர்களுடன் வருவார்கள். பிறகு என் கையால் காப்பி சாப்பிட்டால் பரவாயில்லையென்ற நிலைமைக்கு வந்தார்கள். தற்சமயம் ஓரிருவர் தயங்காமல் என் வீட்டில் சாப்பிட்டேவிட்டார்கள். உலகத்தின் விசித்ரங்களைப் பார்த்தாயா?"

"இப்படிப்பட்ட விசித்ரங்கள் யுக யுகமாக இதே ரீதியில் நடந்துகொண்டுதானிருக்க வேண்டும் போலும்" என்று முடிக்குமுன் வண்டி வீட்டு வாசலில் வந்து நின்றது.

வண்டியை விட்டிறங்கி, முன்னுகைக் காதம்பரியும் பின்னுக லீலாவும் நடந்தார்கள். முன் ஹாலில் பேப்பர் படித்துக்கொண்டிருந்த சங்கரைப் பார்த்து, "இவ்வளவு நாட்களாக லீலா வந்தாலும் உங்களுக்கு அறிமுகப் படுத்தும் சந்தர்ப்பம் நேராமலேயே இருந்து விட்டது. இன்றுதான் நேர்ந்தது. இதோ பாருங்கள் என் தோழி லீலாவை" என்றாள். முகத்திற்குநேராகப் பிடித்திருந்தபேப்பரைக் கீழே போட்டுவிட்டு நிமிர்ந்தான். அவ்வளவே சிலைபோல் விழித்தவிழி விழித்தபடி நின்று விட்டன.

"லீலா, இவர்தான் என் கணவர் சங்கர்" என்றாள்.

"சந்தோஷம். நமஸ்காரம் மிஸ்டர் சங்கர்" என்று புன் சிரிப்புடனேயே கைகுவித்தாள்.

"என்ன மரியாதைக்குப் பதில் பேசாமல் எங்கோ சிந்தனையாக உட்கார்ந்திருக்கிறீர்களே" என்ற காதம்பரியின் சொற்கள் அவனைத் தட்டியெழுப்பின.

"ஒன்றுமில்லை மன்னிக்கவும்; நமஸ்காரம் மிஸ் லீலா" என்று கைகுவித்த வண்ணம் "எங்கள் ஊரில் இவளைப்போல் ஒருபெண்ணை பார்த்ததாக இவளைப் பார்த்ததும் நினைவு வந்தது; அதனால் சற்றே திக்பிரமை தோன்றினது"

"அதனால் மரியாதைகூட மறந்து ஒருமையில் பேசுகிறீர்கள் போலும்." என்றாள் காதம்பரி.

"ஓ. எஸ்க்யூஸ் மி, லீலா! ஐ ஆம் வெரி ஸாரி" என்றான் தட்டித் தடுமாறும் குரலில்.

"எனக்கா அவரை இப்படி..........நான் சிறியவள்தானே. அப்படி அழைப்பதில்தான் எனக்கு விருப்பம்" என்றாள் லீலா.

"அப்படியல்ல லீலா, என் அன்பார்ந்த தோழிக்கு அவமரியாதை, என் கணவராலேயே வரலாமா? என்பதுதான்"

"லீலாவதிதேவி யவர்களே, இரவிலும் பகலிலும் செயலிலும் லீலா என்ற பேச்சை மறக்க மாட்டாள் காதம்பரி. அப்படிப்பட்ட பக்த சிகாமணி தன் தெய்வத்திற்கு மதிப்புக் கொடுக்க விரும்புவது அதிசயமல்ல" வென்றான் சங்கர்.

பதில் பேசாமல் அவனை முறைத்துப் பார்த்த லீலாவைக் கவனியாதகாதம்பரி "வா லீலா, காப்பி சாப்பிடலாம்" என்று அவள் கையைப் பற்றி நடந்தாள்.

"நீங்கள் குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டும் தனிக் குடித்தனமாக இல்லையே. உங்கள் அண்ணு பெண், சித்தி பெண் எல்லோரும் இருந்து கொண்டு தானேயிருக்கிறார்கள்" என்றாள் டவலால் முகத்தைத் துடைத்தவாறே லீலா.

"ஒன்று போனால் ஒன்று வருகிறது. அந்த நாளில் என்னைத் திட்டி விபசாரிப் பட்டம் கொடுத்ததில் அக்ர தாம்பூலம் சித்திக்குத்தான். இப்பொழுது 'காமாக்ஷி நீதான் இவர்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும்' என்கிறாள். பணம் ஓர் தம்படி கூட அனுப்ப மாட்டார்கள். மூன்று உருப்படிகளை ஏதோ கூடிய மட்டும் உத்யோகத்திலிருப்பவனுகப் பார்த்துத் தள்ளி விட்டேன். ஒன்று லவ் மாரேஜாகப் பஞ்சாபியை மணந்தது. இப்பொழுது மூன்று வந்திருக்கிறது."

"அவர்-உங்கள் கணவர்-இவைகளுக்கெல்லாம் சம்மதிக்கிறாரா?"

"ஒன்றும் சொல்வதற்கில்லை என்றாலும் 'உனது சோஷியல் ஒர்க் உன்னை விடாது போலிருக்கிறதே' என்று பரிகாசம் செய்கிறார். நல்ல குணம். அதனால் நிர்வாகம் செய்ய முடிகிறது. கூடிய சீக்கிரம் இவர்களுக்கும் ஓர் வழி ஏற்படுத்தி விட்டு இனி இந்த மாதிரி வருபவர்களை ஆசிரமங்களுக்கு அனுப்பி விடுவது என்று தீர்மானம் செய்து விட்டேன்."

"அது தான் சரி. உங்கள் கணவர் பரந்த நோக்கமுள்ளவர் என்று தெரிகிறது இல்லாவிடில் இவ்வளவிற்கு இடமேற்படுமா? அவர் அன்பு போற்றத்தக்க முறையில் அமைந்

திருப்பதினுல் தான் உங்களுக்குச் சுதந்திர மாகச் செய்ய முடிகிறது" என்ருள் புன்சிரிப் புடன்.

"அக்கா! லீலா தூங்கிக் கொண்டிருக் கிருள். பாவம் ரயிலில் வந்த அலுப்பு. நான் சுதர்மயி வீடுவரை போய் வருகிறேன். அவள் எழுந்திருந்ததும் டிபன் சாப்பிட்டு விட்டு உடுத்துக் கொண்டு தயாராக இருக்கச் சொல்லு. நான் வந்து அவளையும் கூட அழைத்துச் சென்று பாலாம்பாளுக்கும் குழந் தைகளுக்கும் வேண்டிய துணிமணிகளை வாங்கி வரலாம்" என்ருள் காதம்பரி.

"நீ எத்தனை மணிக்குத் திரும்புவாய். மாப்பிள்ளை வந்தால்?"

"அவர் இன்று ஆறு மணிக்குத்தான் வரு வார். நான் வந்தபின்பு தான் வண்டி அனுப் புவதாகச் சொல்லியிருக்கிறேன். இன் றைக்கு அவ்விடமே டிபன் சாப்பிட்டுக் கொள்ளுவதாகச் சொல்லி விட்டார். நான் நாலு மணிக்கு வந்து விடுவேன் தப்பினுல் ஐந்து மணிக்குள் நிச்சயம் வந்து விடுவேன்."

"அழகுள்ள மணமிகுமலரே உன் ஆயுள் காலம் சில நாளே" என்று மெல்லிய குரலில் பாடிய வண்ணம், கொத்தாகப் பூத்திருந்த ரோஜா மலர்களைத் தலையில் வைத்துக் கொண்ட லீலா கொல்லென அரும்பு கட்டி யிருக்கும் மல்லிகைப் பந்தலை நோக்கி நடந் தாள்.

கையிலிருந்த நாரில் செடியிலிருந்து மொக்கை ஒவ்வொன்ருகப் பறித்து தொடுத் துக்கொண்டிருந்தவள் வருகலாமோநான் அவ் விடம்" என்ற பாட்டடியின் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். பத்தடி தூரத்தில் கைகளைக் கட்டியவண்ணம் நின்ருன் சங்கர்.

சட்டென முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டு, "வரக்கூடாது இவ்விடம்" என் ருள்.

"ஏன்? லீலாவின் சங்கருக்குக் கூடவா அவ்வுத்தரவு?',

"சட். வாயை அலம்புங்கள். லீலாவின் சங்கர் இப்பொழுது இல்லை. காதம்பரியின் கணவருக்கு லீலா இருப்பிடம் வர என்ன உரிமை இருக்கிறது? சென்றுவிடுங்கள். காதம்பரிதேவி கண்டால் வீண்மனஸ்தாபம் ஏற்படலாம்"

"காதம்பரி வந்தாலும் என்ன? ஒன்றும் தவருகஎண்ணமாட்டாள், உன்னைக்கண்டது முதல் என் மனம் படும்பாடு ஈசன் அறிவார். இவ்விதம் சந்திப்போமென்று எதிர்பார்க்க வில்லை. உன்னிடம் தனிமையில் பேசவேண்டு மென்பதற்காகவே அவளிடம் ஆறுமணிக்கு வருவதாகச் சொன்னவன் நான்கு மணிக்கே வந்து விட்டேன்."

"என்னிடம் பேச என்ன இருக்கிறது?"

"இருக்கிறது லீலா, என்னை மன்னித்து என்செய்கையைக் கண்டிக்க உனக்கு உரிமை யுண்டு!"

"அப்படியானுல் உடனே இவ்விடம் விட் டுச் செல்லுங்கள்"

"ஏன்? காரணம்?"

"காரணமா. ஓர் லக்ஷியத்தைக் கடைப் பிடித்தால் அதன் எல்லா அம்சங்களையும் ஊன்றிக் கவனித்து நடக்க வேண்டும்"

"நான் உன்னுடன் பேசுவதற்கும் நீசொல் லுவதற்கும் சம்பந்தம்?"

"சம்பந்தமா? வயது சென்றவர்கள் தங் கள் இள மனைவிகள் இள வாலிபர்களுடன் தனித்து நின்று பேசுவதைக்கண்டால் அவர் களின் மனம் எந்தவித உணர்ச்சியை அடை யுமோ அதே போல் வயதுசென்ற ஸ்திரீகள் தங்களின் வாலிபக்கணவன், யௌவன மங் கையுடன் தனித்துப் பேசுவதைக்கண்டால் தோன்றும். என் அன்பார்ந்த தோழியின் சந் தேக இலக்கிற்கு நான் லக்ஷியமாக விரும்ப வில்லை. அவ்வளவு தான்."

'காதம்பரி அப்படி நினைக்கமாட்டாள். அதுவும் உன் விஷயத்தில்."

"ஓ, அதுதான் தெரிகிறதே. வீட்டிலுள்ள பெண்வேலைக்காரர்களெல்லோரும் ஐம்பத் தைந்து வயதிற்கு குறைந்தவர்களல்ல. ஐந்து வருஷகாலமாக, காதம்பரியின் உயிரினுமினி யவளாக விளங்கியவளாகிய, சாலாக்ஷியைத் தனியாகக்குடித்தனம் செய்ய ஏற்பாடு செய் ததுமன்றி அடிக்கடி இவ்விடம் வந்து போ னுல் கூட ஆபத்து என்று அவள் உத்தியோ கத்தை, பக்கத்துக் கிராமத்தில் மாற்றிவைத் தது எதனுல்? தாங்கள் மனப்பூர்வமாகக் காதம்பரிக்குத் துரோகம் செய்யமாட்டீர் களென்பது உங்கள் ஹிருதயத்திற்கும் சர் வேசுவரனுக்கும் வேணுமானுல் தெரியலாம். காதம்பரியைச் சிரமப்படுத்தக்கூடாது என்ற நல்லெண்ணத்துடனேயே, சாலாக்ஷியைக் கூப்பிட்டு வேலை ஏவினீர்கள், அதாவது ஸ்னு னத்திற்கு ஜலம் எடுத்துவைக்க, சாப்பாடு போட, மற்றும் பல பணிவிடைகளைச் செய்யு மாறு. உங்கள் ஹிருதயத்திற்குள் புகுந்து பார்க்கமுடியுமா? காதம்பரியின் கண்களுக் கும், மனதிற்கும் அது விஷயம் தவருகத் தோன்றினதில் ஆச்சரியமில்லை"

"உனக்கு யார் இப்படிச் சொன்னது? சாலாக்ஷி இவ்விடமே இருந்துகொண்டிருந்தால் அவளின் சுய நலனைக் கவனித்துக் கொள்ள முடியாமல் போய்விடும் என்பதற்காக இவ்வித ஏற்பாடு செய்தாள்"

"பின் அந்தரங்கத்தைப் பஹிரங்கமாகக் முடியுமா? சென்றதடவை நான் வந்திருந்த பொழுதே சில விஷயங்களை நானே கவனித்தேன். பிறகு சாலாக்ஷியே சகல விஷயங்களும் சொன்னாள். 'லீலா! அழகில் நானும் காதம்பரியும் ஒரே அம்சம். ஆனால் அவளைவிடப் பத்து வயதிற்கிளையவள் நான். அந்த இளமைக்காகவே காதம்பரி பயப்படுகிறாள்' என்றாள் சாலாக்ஷி. இதில் வியப்பு என்ன இருக்கிறது? காதம்பரி தேவியும் இரத்தம், நரம்பு, மாமிசங்களாலான மனுஷி தானே. பெண்ணுள்ளத்தின் உணர்ச்சியும் அவருக்கு, விலக்காகுமா? அவர் செய்தது சரியான காரியம்."

"சரி. அப்படியே இருக்கட்டும். உன்னிடம் அவ்வித மனப்பான்மை ஏற்படாது. உன்னைப்பற்றிய உண்மையை அவளிடம் சொன்னேனானால் அவள் ஸ்தானத்தைப் பகிர்ந்தளிப்பாள் உள்ளன்புடன் உனக்கு"

"என்ன? அவள் பகிர்ந்தளிப்பதா? என் ஸ்தானத்தைத்தானே அவள் ஏற்றுக்கொண்டிருக்கிறாள்? பகிர்வதற்கு அவளுக்கு என்ன உரிமை இருக்கிறது?"

"உண்மை லீலா, தவறிச் சொல்லிவிட்டேன், மன்னித்துவிடு.உன் ஸ்தானத்தை உனக்கே அளித்துவிடுவாள்"

"எதற்காக?"

"உன்னை என்னால் மறக்கமுடியவில்லையே, அதற்காக"

"என்ன சாகஸம்? 'ஏதாவதொருசமயம் என்ன செய்கிறாளோ என்று தோன்றும். மற்ற விஷயங்களில் மனதைச் செலுத்தி மறக்கச் செய்துவிடுவேன். நாம் ஒன்றுகூடி வாழ்க்கை நடத்தத் தொடங்கினால் அந்த நினைவுகூடத் தோன்றாது' என்று காதம்பரியிடத்தில் இந்த நாக்குத்தான் சொல்லிற்று என்பது எனக்கும் தெரியும் என்பதைத் தெரியப்படுத்துகிறேன்!"

"லீலா ஆயிரம் பொய்யைச் சொல்லியாகிலும் ஒரு கல்யாணம் நடக்கவேண்டுமென்று சொல்லுவார்களல்லவா? என் லக்ஷியம் நிறைவேற நான் அப்படி மனமறிந்த பொய் சொன்னதில் தப்பென்ன?"

"லக்ஷியப் பாதையில் நடப்பவர்கள் அதில் குறுக்கிடும் மேடுபள்ளங்களைக் கண்டு அஞ்சாமல் அதற்குத் தகுந்தபடி சாவதானமாக நடந்து செல்லவேண்டும். தங்கள் வாழ்க்கை ஆனந்தமாகத்தானே இருக்கிறது? இவளைப் பார்த்துவிட்டோமே? இப்படி நமது வாழ்க்கைப் பூங்காவில் புல்லுருவிபோல தோன்றிவிட்டாளே. நாம் விளையாடிவிட்ட பொம்மை தானே? உறுதி குன்றாமல் தனிவாழ்க்கை நடத்துகிறாளே. சில சமயம் அவளால் தணிக்கமுடியாத பசியை இவளிடம் தணித்துக்கொண்டுவிடலாம் என்ற மமதையா, தைரியமா, இப்படிப் பேசச்சொல்லுகிறது? உங்கள் ஜால வித்தையெல்லாம் என்னிடம் சாயாது. என்னுடைய லக்ஷியப்பாதையானது கரடு முரடில்லாமல், மேடுபள்ளமில்லாமல் சமமாக, நிரந்தரமாக நடந்துசெல்லக்கூடிய விதம் அமைந்துவிட்டது. தவறி ஏதாவது ஏற்பட்டாலும் அஞ்சமாட்டேன். போதும் விவாதம் சென்றுவாருங்கள்."

"லீலா, நீ எதுசொன்னாலும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனே. விதிச் சுழலில் அகப்பட்டுக்கொண்டேன். திக்குமுக்காடித் திணறினாலும் என் ஹிருதயத்தை விட்டு நீ அகலமாட்டாய் என்பதை எவ்விதம் உனக்குக் காண்பிப்பேன்? இயற்கைக்குப் புறம்பான எனது லக்ஷியத்திற்கு என் சுக வாழ்வு பலியாகிவிட்டது. அது போகட்டும். உண்மையாகச் சொல்லு. உன் மனதில் எனக்குள்ள இடம் காலியாக இருக்கவில்லையே?"

"அதைப்பற்றிக்கேட்க உங்களுக்கு உரிமையில்லை."

"உரிமையில்லாவிடில் போகட்டும், வரமாக யாசிக்கிறேன்; சொல்லமாட்டாயா?"

"லீலாவின் சங்கர் காதம்பரியின் கணவர் என்று எப்பொழுது என்காதில் விழுந்ததோ அந்த நிமிஷமுதல் அந்த இடம் காலி."

"உண்மையாகவா?"

"நிச்சயமாக"

"நான் நம்பமாட்டேன்"

"அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. காதம்பரி வரும் நேரமாகி விட்டது. ஒன்று நீங்கள் இவ்விடம் விட்டுச்சென்று விடுங்கள். அல்லது நான் போவதற்கு வழிவிடுங்கள்"

"நான் கேட்பதற்குச் சரியானபதில் வரும் வரை இரண்டும் செய்யப் போவதில்லை."

"சரியானபதில் சொல்லியாகி விட்டது. அதைத் தவிர வேறு எதையும் என்னிடம் எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. தயவு செய்து வழிவிடுங்கள், யாராவது பார்த்து விட்டால் விரசமாகப் போய்விடும்."




SHOCK-PROOF!
WATER-PROOF & STAIN-PROOF!
வெஸ்ட் எண்ட்
"ஸோவர் பிரிமா"
சாதாரண அதிர்ச்சி, தாக்குதல்,
கீழே விழுதல் முதலியவைகளால்
அழிக்கப்படாததும், தண்ணீர்,
பனி, வியர்வை, தூசி முதலியவற்
றால் துளிக்கூட பாதிக்கப்படாத
தும், மங்காத 'எவர்பிரைட்' ஸ்டீல்
கேஸில் செய்யப்பட்ட ஒரு வாட்ச்
நீங்கள் அணிவதென்றால் அதன்
பெருமையைப் பற்றி அளவிட முடி
யுமோ? இத்தகைய எல்லா நன்மை
களும் வெஸ்ட் எண்ட் 'ஸோவர்
பிரிமா' மாடல்களில் அமைந்திருக்
கிறது. (ஷாக-புரூப், வாடர்-புரூப்
& ஸ்டெயின் புரூப்)
10½" ஸைஸ 'ஸோவர் பிரிமா
ஸெண்டர்-ஸெகண்ட்ஸ்
பேடண்ட் எவர்பிரைட் ஸ்டீல்
ரூ. 165/-
WEST END WATCH Co.
BOMBAY
CALCUTTA
வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.
பம்பாய் & கல்கத்தா.

"இந்த இடம் பங்களாவின் பார்வையி லிருந்து மறைந்து நிற்கிறது. இவ்விடம் ஒருவரும் இவ்வேளையில் வரமாட்டார்கள்?"

"இதென்ன தர்மசங்கடம்; இந்த இந்திர ஜாலவித்தைகளெல்லாம் என்னிடம் சாயாது; தயவு செய்து வழிவிடுங்கள்."

"சரி, நீ ஒன்றுமே சொல்ல வேண்டாம். உன்னிடமிருக்கும் லாக்கெட்டைத் திறந்து காண்பி; போதும்."

"எதற்காக? காண்பிக்க முடியாது. அதில் ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லை யல்லவா? அப்பொழுது காண்பிப்பதற் கென்ன?"

"அது என்னிஷ்டம். வற்புறுத்தத் தாங்கள் யார்?"

"உன்னிடம் உத்தரவு கேட்டால் தானே. நானே பார்த்துக்கொள்ள எனக்கு உரிமையுண்டு" என்று சட்டென அவள் எதிர்பாரா வண்ணம் கழுத்தில் கிடக்கும் செயின் மீது கையை வைத்தான். அவ்வளவே,

"என்ன? என்னைத் தொடுவதற்கு அவ்வளவு தைரியமா?" என்று இடது கையினால் அவன் கையைப் பிடித்து உதறித் தள்ளி விட்டு, வலது கையினால் அவன் கன்னத்தில் பளார் என்று ஓர் அறை வைத்து விட்டுத் திரும்பிப் பாராமல் நடந்தாள்.

அந்த அடியானது அவளது மனதின் தன்மையை நன்கு எடுத்துக் காட்டிற்று. கையினால் கன்னத்தைத் தடவியபடியே "லீலா' நீ செய்தது மிகவும் சரி, எனக்கு வேண்டியதே. இந்தா, இந்தக் கன்னத்திலும் ஒன்று கொடுத்துவிடு. அப்பொழுதுதான் என் மனம் சாந்தி யடையும்."

"ஓ காந்தி பக்தரே! அந்த யோக்கியதை உம்மிடத்தில் கிடையாது என்பதை நினைப்பூட்டுகிறேன்" என்று சொல்லியவாறு ஓடிச் சென்று மறைந்து விட்டாள்.

"நீங்கள் வந்து வெகு நேரமாகி விட்டதோ? ஏன் ஒரு மாதிரியாகப் படுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று ஈசிச்சேரில் சாய்ந்து கொண்டிருக்கும் கணவன் அருகில் வந்து நின்ற வண்ணம் கேட்டாள் காதம்பரி.

"இல்லை, சற்று முன்பு தான் வந்தேன். லேசாகத் தலை வலிக்கிறது. அவ்வளவு தான்" என்றான் பதில்.

நெற்றியை வருடியவாறு, "கொஞ்சம் சூடாகக் காப்பி போட்டுக் கொண்டு வரட்டுமா?" என்றவள் கன்னத்தைக் கவனித்து விட்டாள். "இது என்ன? கன்னத்தில் விரல் பதிந்தாப்போல் தடித்திருக்கிறதே?" என்றாள் பதறியவளாக.

"ஒன்றுமில்லை. கையில் கன்னத்தைத் தாங்கியவாறு படுத்திருந்தேன். விரல் பதிந்து விட்டது. உன் கையினால் சற்றே தடவிக் கொடுத்தால் சரியாகப் போய் விடுகிறது" என்றான் ஜீவனில்லாத புன்சிரிப்புடன். 'அடித்த கை அணைத்தாலல்லவோ வலி யாறும்' என்றது அவன் உள்ளம்.

சற்று நேரம் கன்னத்தைத் தடவி விட்டு விட்டு, "நான் போய்க் காப்பி கொண்டு வரட்டுமா?" என்றாள் காதம்பரி.

"உம்" என்றான் பதில்.

சங்கர் அந்த அறைக்குள் வரும் பொழுதே பக்கத்து அறையில் நின்று கொண்டிருந்த லீலா ஜன்னலின் கதவிலுள்ள சிறு துவாரத்தின் வழியாக உள்ளே கவனிக்கலானாள். கன்னத்தைத் தடவியவாறு படுத்திருந்த சங்கரைப் பார்க்கும் பொழுது அவள் மனம் மிக்க வேதனை யடைந்தது. 'அப்பா, என் கை விறுவிறுப்பே இன்னும் அடங்கவில்லை. அவர் கன்னம்? ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பது போல் செய்து விட்டேனே. ஜன்னல் கதவைத் திறந்து மன்னிப்புக் கேட்கலாமா" என்று நினைக்கும் பொழுது காதம்பரி அவ்விடம் வந்தாள். மேல் நடந்த காட்சிகளைக் காணவே பெண்ணுள்ளம் சஞ்சலத்திலாழ்ந்தது. "வேண்டும். நன்றாக வேண்டும்" என்று முணுமுணுத்தது வாய். காதம்பரி காப்பி கொண்டு வரச் சென்றதும், ஜன்னல் கதவை நாலு விரலளவு திறந்து கொண்டு "சங்கர்!" என்றாள்.

"என்ன?" என்று எழுந்து ஜன்னலண்டை வந்து நின்று கொண்டான்.

"நான் இவ்விதம் செய்ய நேர்ந்தது பற்றி வருந்துகிறேன். என் கை விறுவிறுப்பே இன்னும் அடங்கவில்லை. தங்கள் கன்னம்? ஆனாலும் உங்களுக்கு அவ்விதத்துணிச்சல் உதவாது; என்னை மன்னித்து விடுங்கள்."

"மன்னிப்பு எதற்கு? அடித்த கையினால் ஒரு தடவை தடவிக்கொடுத்துவிட்டாயானால் அந்த உதவியை ஒருநாளும் மறக்கமாட்டேன்."

"சங்கர்! ஏன் இந்தப் பைத்தியம். ஒழுக்கமுள்ள ஸ்திரீகள் பரபுருஷனைத் தீண்டுவார்களா? ஆபத்தான சமயம் தவிர."

"நான் உனக்குப் பரபுருஷனா?"

"இல்லையா? லீலாவின் சங்கர் காதம்பரியின் கணவரானபின் பரபுருஷரில்லாமல் வேறு யார்?"

“நீ வேறு ஒருவனுக்குச் சொந்தமாகியிருந்தால் என் மனதில் இவ்வெண்ணமே தோன்றாது. லீலா, என் மனதைத் திறந்து குமுறும் எண்ணங்களை உன்னிடம் கொட்டவேண்டும் என்றுவந்தேன். நினைத்தது ஒன்று நடந்தது ஒன்றாகிவிட்டது. போகட்டும், எங்கே உன் விறுவிறுக்கிற கையை என் கன்னத்தில் சற்று வை. என் மனம் நிம்மதி பெற்று விடும்.”

‘முடியாது’ என்பதாக மண்டையை ஆட்டியவண்ணம் “இவ்வளவு நேரம் காதலி தடவிவிட்டாளே, சாந்தி பெறவில்லையா? உன் கைபட்டாலே போரும் என்று அவளிடமும் தான் சொன்னீர்கள்.”

“வேறு வழி, உள்ளம் உன்னை நினைந்து உருக, வெளிக்கு நடிக்க வேண்டியதாகி விட்டது.”

“வேண்டும். நன்றாக வேண்டும். அலறினேன். கதறினேன். கெஞ்சி மன்றாடினேன். ‘வயது சென்றவருடன் இளம்பெண் வாழ்க்கை நடத்தும்பொழுது மற்றொரு வாலிபருடன் சரசமாடுவதை உலகம் அனுமதிக்குமா? அதேபோல் நானும் வாழ்க்கை நடத்துவேன்’ என்று வீறாப்புப்பேசிய நாவு இதுதானே? லக்ஷியம் பாதியில் சிதறுவது கூடாது. முழுவதும் நிறைவேற்றினால்தான் லக்ஷியவாதியாகமுடியும்.”

“நான் லக்ஷியவாதியல்ல என்று நிச்சயமாகக் கூறுகிறேன்.”

“எந்த வாதியாக வேண்டுமானாலும் இருங்கள்; எனக்கு அக்கரையில்லை. உங்களிடம் மன்னிப்புக் கேட்கவே கூப்பிட்டேன். கடமையை மறப்பது என் வழக்கமல்ல. என் பிரிய தோழிக்குத் துரோகம் செய்வதை நான் அனுமதிக்க மாட்டேன். குட் பை” என்று கதவைச் சாத்திவிட்டு அப்பால் சென்று விட்டாள்.

“விதி” என்று நீண்ட மூச்சுடன் பழைய படி ஈஸிச்சேரில் சாய்ந்து கொண்டான். அடுத்த க்ஷணம் காப்பியுடன் அருகில் வந்து நின்றாள் காதம்பரி. அவளையே வெறிக்கப் பார்த்தவண்ணம் காப்பியை உறிஞ்சினாலும் “அப்பா என்ன உறுதி? எவ்வளவு திடச்சித்தம்? பிரியும் சமயம் விரும்பிப்பெற்றாள் என் ஆலிங்கனத்தை. அந்த உணர்ச்சி வேகம் எப்படி மறைந்தது. என்னைத்தீண்டுவது மஹா பாபமென்று கருதுகிறாளே? என் உறுதியெல்லாம் அவளைக்கண்ட தக்ஷணமே ஆடிக்காற்றின் பஞ்சு நிலைமையை அடைந்துவிட்டது. அவளின் உறுதி என்னைக் காணக் காண உரம் பெற்றதாகிறது. என்னே விதியின் விளையாட்டு” என்றது மனம்.

“ஏன் ஒருமாதிரியாக இருக்கிறீர்கள்? உடம்பிற்கென்ன?” என்று கேட்டவண்ணம் பக்கத்திலிருந்த ஸ்டூலின்மீது உட்கார்ந்தாள் காதம்பரி.

“ஒன்றுமில்லையே. தலைவலிகூட இப்பொழுது குறைந்துவிட்டது.”

“இல்லை; பிரகாசவதனம் இருண்டதோற்றமளிக்கின்றது. காரணம் சொல்லமாட்டீர்களா” என்று கொஞ்சியவண்ணம் அவன் முகத்துடன் தன் முகத்தைச்சேர்த்து அணைத்தவண்ணம் கேட்டாள்.

“ஒன்றுமில்லாததற்கு நீ வீணாகச் சஞ்சலமடைகிறாய்! நான் வந்தவுடன் வழக்கப்படி நீ கொடுக்கும் மருந்து கொடுக்க நீ இல்லாததினால் சற்றே சுணக்கம். இப்பொழுது கொடுத்துவிட்டாய்; சரியாகப்போய்விட்டது.”

“தவறுதான்” என்றாலும் தாங்கள் ஆறு மணிக்குத்தானே வருவதாகச்சொன்னீர்கள்; அதனால்தான் சென்றேன். இப்பொழுது வட்டிசேர்த்துக்கொடுக்கிறேன்” என்று பன்முறை முத்............விட்டு, “சரியாகப்போய்விட்டதல்லவா? பதில் கொடுங்கள்.”

“இந்தா வாங்கிக்கொள்” என்று மு...............மிட்டான்,

“சரி, எங்கேயோ போகவேண்டும் என்று சொன்னாயே உன் அந்தரங்கத் தோழியுடன்”

“போகவேண்டும். அதிருக்கட்டும். இப்படி பிரும்மஹத்தி பிடித்ததுபோல் உட்கார்ந்திருப்பதேன், லீலாவைக் கூப்பிட்டுப் பேசிக்கொண்டிருக்கக்கூடாதா?”

“உன் தோழி படித்த பெண்ணாகத் தோன்றவில்லையே. நான் வரும்பொழுது முன் ஹாலில் நின்றுகொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் காட்டு மிராண்டிபோல் மிரண்டு உள்ளே ஓடிவிட்டாள். நான் காலிப்பயல் என்ற எண்ணமோ என்னவோ? உன் தோழியை நீதான் மெச்சிக்கொள்ள வேண்டும்” என்றான்.

“லீலாவை அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். தங்கமானபெண். முன்பின் அறியாதவருடன் என்ன பேசுவது என்று போயிருப்பாள். நீங்கள் கூப்பிட்டிருந்தால் கட்டாயம் வந்து உட்கார்ந்து பேசியிருப்பாள்”

“நான்கூட நினைத்தேன். பிறகு நீ ஏதாவது வித்யாசமாக நினைத்துவிட்டால் என்ற நினைப்பும் உடனேயே தோன்றினது.”

“என்னையறிந்தது இவ்வளவுதானா? வேறு யாராகிலுமானால் ஒரு சமயம் உசிதமாகத் தோன்றாதிருக்கலாம். லீலா விஷயத்தில்

# போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்களை

## உபயோகப்படுத்தி உணவைப் பெருக்குங்கள் !!!




**Use Fordson MAJOR TRACTORS**

நேரப் போக்கைச் சமாளிக்க உழைத்து வரும் இந்நெருக்கடியான வருடத்தில், வேலையைத் துரிதப்படுத்தவும் போதிய வேலையாட்களில்லாமையைச் சமாளிக்கவும் போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் விவசாயிகளுக்கு மிகவும் உதவியுள்ளது. சுலபமாகக் கையாளக்கூடிய இந்த மேஜர் சிக்கன முறையில் பெரிய அல்லது சிறிய நிலப்பரப்பை உழுவதற்கு உதவுவதோடு போரடிக்கும் கருவியை இழுக்கவும் போதிய சக்தி பெற்றிருக்கிறது. ஹைடிராலிக் முதலிய பிரத்தியேக சாதனங்களோடு கூடிய இந்த மேஜர் உழவுத்தொழிலுக்குத் தேவையாயுள்ள ஒவ்வொரு வேலைக்கும் விசையளிக்க வல்லது.

# ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

**போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்**

**202 - 203 மவுண்ட் ரோடு சென்னை—2**

கிளைகள்: பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (டெக்கான்)

டெப்போ:— கோயம்புத்தூர்.

என் மனம் எதையும் ஏற்றுக்கொள்ளும். சகல அம்சங்களும் பொருந்தியவளுக்குத் தாம்பத்திய வாழ்க்கை இல்லாது போனதுபற்றி என் மனம் எவ்வளவு தடவை வேதனையுற்றிருக்கும் அவளை நினைக்கும்பொழுது''

''ஏன் அவள் கணவன் இறந்துவிட்டானா?''

''அத்தகைய கொடுமையான பாவம் அவள் செய்யவில்லை. ஆனால் காதலில் ஏமாற்றம். உள்ளன்புடன் நேசித்திருக்கிறாள். அவனும் நேசித்திருக்கிறான் என்றே நம்பியிருக்கிறாள். அவன் ஏதோ பொய்க் காரணம் சொல்லி இவளை ஏமாற்றிவிட்டு எவளையோ தேடிச் சென்றுவிட்டான் போலும். அவளுடைய அன்பின் உயர்வைப் பற்றி எப்படி எடுத்துச் சொல்லுவது? அப்படி விட்ட பாதகனைப்பற்றி அவன் சொன்ன காரணத்தை வெளியிடுவதில்லை யென்று வாக்களித்தாளாம். அதிக அந்தரங்கமான என்னிடத்தில் சொல்லக்கூட மறுத்துவிட்டாள். அவன் யார்? எந்த ஊர்? பெயர் என்ன? என்று சொன்னாளானால் எப்படியாவது கண்டுபிடித்துவிடலாம் என்று கெஞ்சிக்கேட்டேன். சொல்ல மறுத்துவிட்டாள். என்றாவது அவனைக் கண்டால் என் கால் செருப்பினாலேயே அடித்துவிடுவேன்'' என்றாள் ஆத்திரத்துடன்.

அவள் வார்த்தையை முடிக்கும் சமயம் சங்கரின் உடம்பு ஒருதரம் குலுங்கிற்று.

''ஏன் இப்படித் தூக்கிப்போட்டது?'' என்றாள்.

''ஒன்றுமில்லை. நீ செருப்பாலடிப்பேன் என்றாயே. ஆண் பிள்ளை பெண் கையின்கீழ் செருப்பாலடிபட்டால் என்று நினைக்கும் பொழுது புல்லரித்தது. அவ்வளவுதான்''

''ஓ, நீங்கள் ஆண்பிள்ளை என்பதை நினைப்பூட்டுகிறீர்களோ? ஆத்திரத்தில் அப்படிச் சொன்னேன். செய்வேனா? லீலாவின் வாழ்க்கையில் என் மனம் அவ்வளவு ஆவல் கொள்ளுகிறது. அவள் ஒத்துக்கொள்ளுவாளானால் உங்களையே அவளையும் ஏற்கும்படி செய்துவிடுவேன். நாங்கள் இருவரும் ஒற்றுமையுடன் உங்கள் வாழ்க்கை வனத்தில் கைகோத்து உலாவுவோம்.''

''சரிதான், மெள்ள மெள்ள அடிமடியில் கைவைக்கிறாயே. என் லக்ஷியவாழ்க்கையினின்றும் நான் தவறமாட்டேன். தோழிக்கு வேறு ஆளைப்பாரு.''

''அடேயப்பா, உங்கள் லக்ஷியமோ நீங்களோ? லீலாவின் அழகு சாமான்யமானதா? அவள் கிடைக்க நீங்கள் ஒற்றைக் காலால் தவம் செய்தால்கூடப் போதாது. அவள் காதலின் உறுதியைக் குலைக்கத் திரிநேத்ரதாரியினால்கூட முடியாது. உங்களைத்தான் சிந்தப் போகிறாளாக்கும். ஏதோ என் மனக் கிளர்ச்சியில் சொன்னேன்.''

''சரி, உன் தோழி மனிதப்பிறவியல்ல. தேவ கன்னிகை, தவறிப் பூமியில் வந்துவிட்டாள். போகட்டும். நீங்கள் கடைக்குச் செல்லும்பொழுது உங்கள்கூட நானும் வரலாமோ? சற்றே காற்று வாங்கலாம்.''

''ஓ தாராளமாக வாருங்கள்.''

''உன் தோழி வர மறுத்துவிட்டால்?''

''அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். சரி, நீங்கள் உடுத்துக்கொள்ளுங்கள். நாங்களும் புறப்படத் தயாராகிறோம்'' என்று எழுந்து சென்றாள்.

கடையில் சாமான் வாங்கும்பொழுதும் வண்டியில் செல்லும் பொழுதும் வெளிக்கு முன்பின் தெரியாதவர்கள்போல் பேசி நடந்துகொண்டாலும் லீலாவின் கண்களினால் எறியப்படும் வசையம்புகளைத் தன் கண்களினால் ஏற்றுக்கொண்டு, பொறுமையுடன் அவர்கள்பின் சென்றான் சங்கர்.

(தொடரும்.)


# திருச்சியில்

காவேரி பிரதிகள் விற்பனையாளர்கள்:-

## செயின் புக்ஸ் லிமிடெட்

சைனா பஜார் ரோடு - திருச்சிராப்பள்ளி

# ஒளியின் வண்ணம்



வி. ஜி. ஸ்ரீநிவாஸன்

இடம் : கவிஞனின் தனியறை.

நேரம் : அந்தி மயங்கிய போது.

பாத்திரங்கள் : கவிஞன், விட்டில் பூச்சி, கவிஞன் மனைவி, எரி சுடர்.

(கவி சிந்தனையில் லயித்திருக்கிறான். கவியின் மனைவி அறையுள் நுழைந்து விளக்கினுக்குச் சுடர் பொருத்துகிறாள்)

கவி : ஆஹா ! அற்புதம்! அற்புதம்! சற்று நேரத்திற்கு முன்பு வறிதே நின்ற குத்து விளக்கு சுடர் பொருந்தவும் எவ்வளவு நேர்த்தியாய் விளங்குகின்றது. கலையம்சம் பொருந்திய விளக்கு சுடர் பெற்று அழகுப் பொருளாகத்தான் துலங்குகின்றது. கலைமகளும், திருமகளும் ஒருசேரக் காட்சி கொடுப்பதுபோலல்லவா தோன்றுகிறது............மங்கல மங்கையின் திருக் கரத்திற்குத்தான் எவ்வளவு விசேஷம்.........‘ தீபம் லக்ஷ்மீ கரம்” என்பது எவ்வளவு உண்மையான வாக்கு !

கவியின் மனைவி: (விளக்குக்கு வணங்கிப் பாடுகிறாள்)

ராகம் : இந்தோளம் தாளம் : ஆதி

பல்லவி

திருமகளே உந்தன் திருவடி பணிந்தேன்
திருவருள் புரிந்திடவே தருண மிதே (திரு)

அனுபல்லவி

அருளுடன் அழகையும் பொருளுடன் புகழையும்
உருவுடன் திருவையும் உவந்தெனக் களிப்பாயே (திரு)

சரணம்

மரகத மேனிகொண்ட மாலவன் மனமெனும்
மரைமலர் மணம்பெற மங்கலமாகி நின்றாய்!
திருவிளக் கின்சுடரில் திருநடம் புரிகின்றாய் !
அருளொளி காட்டிஎந்தன் அகவிருள் நீக்கிடுவாய் ! (திரு

கவி: (மனைவியை நோக்கி)

“திருமகளே உந்தன் திருவடி பணிந்தேன்” (பாட்டைப் புலம்புகிறான்) பாட்டு அழகாயிருக்கிறது. நீ நன்றாகத் தான் பாடுகிறாய். இசையின் இயல் எளிதாகவும் அழகாகவும் பொருள் பொதிந்ததாகவும் இருக்கிறது.........உம்.........இது யார் இயற்றிய இன்பப் பாடலோ ?

கவியின் மனைவி : வெகு அழகுதான். அதற்குள் மறந்துவிட்டீர்களா? சென்ற திருமகள் பூசனை நாளன்று எனக்கென நீங்கள் இசைத்துக் கொடுத்ததுதானே இது !

கவி : ஆம் ; அருள், அழகு, பொருள், புகழ், உரு, திரு எல்லாவற்றையும் லக்ஷ்மி தேவிதான் அருள வேண்டும்.

(கவியின் மனைவி சென்று விடுகிறாள். கவி சுடரையே பார்த்துக் கொண்டிருக்கிறான். விட்டில் பூச்சி யொன்று எங்கிருந்தோ வந்து “விர்.........விர்” என்ற சத்தத்துடன் விளக்கைச் சுற்றிச் சுற்றி வட்ட மிடுகின்றது. விளைவை நினைந்த கவி மனம் கலங்கியது.)

கவி: (விட்டிலை நோக்கி) "ஆக்கமுள்ள விளக்கை நோக்கி விழும் வண்டுபோல்" என்று பெரியவர்கள் சொன்னது சரியாகத்தான் இருக்கிறது! ஏ, விட்டிலே! விளக்கைச் சுற்றி வட்டமிடும் உனக்கென்ன மதி மயக்கமா? உனக்குக் கொஞ்சமாவது கவனம் ஜாக்கிரதை உள்ளதா?

விட்டில்: கவிஞரே! வணக்கம். நான் மதிமயங்கவில்லை; கவனம், ஜாக்கிரதை எல்லாம் இருக்கிறது. ஆனால்...

கவி: நன்று! நன்று! உனக்கு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லையே!

விட்டில்: ஏனோ?

கவி: இல்லாவிட்டால் இப்படிக் கண் மூடித்தனமாக எரிசுடரை நோக்கி ஆத்திரத்துடன் விழுவாயா? காமப்பித்து உனக்குத் தலைக்கேறிவிட்டது போலும். காமம் மிகுந்தால் கண் தெரியாது என்பார்கள். அது உன் விஷயத்தில் மிகவும் உண்மையாய் இருக்கிறது. பாவம்...... நீ அறியாத சிறுவன்தானே! விளக்கை வேசை யென்று எப்படி நீ தெரிந்து கொண்டிருப்பாய்? மதி மயங்கி விட்டால் ......அப்புறம் நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

விட்டில்: ஐயோ! இதென்ன? உண்மைக் கவிஞன் கூற்று இது? எனக்குக் கண் வெகு நன்றாகத் தெரிகிறது. காமம் மிகுதிப் பட்டுவிடவில்லை. விவரம் தெரிந்துதான் எரியில் விழவிருக்கிறேன்.

கவி: அட பாவமே! கண் தெரிந்துதானா இவ்வாறு செய்யத் துணிந்தாய்? வெகு அழகு! பட்டுப்போன்ற உனது வண்ணச் சிறகு—மெல்லிய மலர் இதழ் போன்ற உனது மென்சிறகு—சாம்பலாகிவிடுமே. உனது எழிற்சிறு மேனி உருவிழந்து கரிந்து சிதைந்து சாம்பல் தூளாகி விடுமே...... எனக்குக் கழிவிரக்கம்...... ஏதோ சொல்கிறேன்...... நான் சொல்வதைக் கேள்...... உனக்கு இந்தப் பிடிவாதம் வேண்டாம்......சுடரினின்று விலகிச் செல்...... வெகு தொலைவில் சென்றுவிடு. நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். யான்......யான் சொல்வதைக் கேளேன்.

விட்டில்: (பாடுகிறது)

ராகம்—கானடா

கவியின் உள்ளமும் கற்பனைத் திறமையும்
கவினுறக் கொண்ட கலைவல் லோனே!
எந்தன் உள்ளம் எடுத்துக் காட்டுவேன்
உந்தனுக் கேயொரு உண்மை உரைப்பேன்



கவி: (பாடுகிருன்)

உள்ளம் உரைத்திடும் உண்மையும்
எதுவோ
ஆவலாய் உள்ளேன் அறிவித் திடுவாய்.

விட்டில்: அன்பமர் கவிஞ! விளக்கினை வேசைப்பெண் என நினைத்து ஆசை கொள்ளவுமில்லை; மோசம் போகவும் இல்லை. உண்மையை விளக்கமாகச் செப்புவேன் கேள்.

கவி: கவனம். விளம்புவாய் விட்டிலே.

விட்டில்: விளக்கம் செய்து துலங்கி நின்றிடும் குத்து விளக்கின் சுடரை மாத்திரமே நான் காண்கிறேன். கவனத்துடன், சிரத்தையுடன், பக்தியுடன் நோக்குகின்றேன். சுடரிலே ஜரிகை வேலையின் அற்புத ஜாலத்தையே காண்கின்றேன். புகையும், புரியும் நீங்கி நாயகமாக நிற்கும் சுடர் ஒளியை எவ்விதம் போற்றிப் பரவுவது. அதன் தன்மையை எவ்வாறு வருணிப்பது? ஆஹா! சுடரை நோக்க நோக்க மனத்திடையே எவ்வளவோ விதவிதமான, நவநவமான எண்ணங்கள் கனன்று எழுகின்றன. கற்பனை ஊற்றெடுத்துப் பெருகுகிறது.

(பாடுகிறது)

ராகம்—சாரங்கா

சிந்தா மணியின் சிறந்த ஒளியோ!
எந்தாய் திருவின் எழிலின் சாயலோ?
பொன்னின் பொலிவோ! மின்னின்
பொறியோ!

ஒளியின் வண்ணம் உரைத்தல் அரிதே!

கவிஞனே! அந்த ஒளிச் சுடரை நோக்கினேன். மோகம் கொண்டேன், தாகம் கொண்டேன்.

கவி: ஆம்! உனது மோகம்தான் உனது மனதைக் குலைத்தது; உனது உருவையும் குலைக்கப்போகிறது.

விட்டில்: உண்மைதான். மாணிக்கச் செம்மணிச் சுடர்தான் மோகனம் காட்டி என்னை மயக்குகின்றது. அதனுடைய சொக்கழகிலே மயங்கித்தான் நான் இப்போது.........

கவி: என்ன? அழகு மயக்கத்தான் செய்யும். அதற்காக நிதானத்தை இழந்து விடுவதா? அழகுகொண்ட பொருள்கள் எல்லாமே அருள்கொண்ட பொருளாகி விடுமா, என்ன? எரியின் எழிலிலே பயங்கரம், நாசம் அல்லவா இருக்கின்றன. நீ எரிந்து, கரிந்து.........

விட்டில்: சரி, சரி. நிறுத்து; கவிஞ! நீ புரிந்துகொண்டது அவ்வளவுதான். மயக்கும் அழகிலே நான் பயங்கரத்தையோ நாசத்தையோ தெரிந்துகொள்ள வில்லை. அதன் அழகினிலே நான் இன்பமே தெரிந்தேன்.

கவி: என்ன பிதற்றுகிருய்? எரித்துச் சாம்பராக்கும் தன்மைகொண்ட தீப் பொருளை இன்பம் தருவது என்கிருயே! உனது கொள்கை விந்தையிலும் விந்தை தான்.

விட்டில்: நன்று! அழகு! நானு பிதற்றுகிறேன்? நான் உண்மையே உரைக்கின்றேன். இதில் விந்தை என்ன இருக்கிறது? "தீ இனிது" என்று சொன்னவனும் உன்னைப்போன்ற ஒரு தமிழ்க் கவிஞன் தானே!

(பாடுகிறது) ராகம்—செஞ்சுருட்டி

"தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா—
உன்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதையே
நந்தலாலா"

எனத் தீயின் இனிமை குறித்து இசைத்து முழங்கியவனும் அவன்தானே. எரிக்கும் தீயைத்தழுவுவதில் இறைவன் அணைப்பைத் தேரவில்லையா கவி! அழகே இறைவன்! இறைவனே அழகு. அழகின் தொண்டன் ஆண்டவன் தொண்டனல்லவா? நான் அழகை உபாசிப்பவன். அழகு, இன்பம், அன்பு, அருள் எல்லாம் சேர்ந்த பெரும் பொருள்தானே இறைவன்!

(பாடுகிறது) ராகம்—அடாணு

எரிதரு சுடரில் எழிலினைக் கண்டேன்!
அழகின் தன்மையில் அழகனைக் கண்டேன்!
பரிதியின் புனிதப் பேராளி தேர்ந்தேன்
பரமனின் பரவொளி பொருந்திட
விழைந்தேன்

கவி: (பதறியவண்ணம்) ஆதலால்?

விட்டில்: ஆதலால், கவிஞ!

(பாடுகிறது) ராகம்—தேவ காந்தாரி

கண்டேன் சோதி! கொண்டேன் ஆசை!
விண்டேன் மனத்தை; விரைவேன்
விளக்கிடம்

(சோதியில் புகுந்துகொண்டே)

இன்பக் கடலினில் இனியநீர் ஆடுறேன்
இன்பச் சோதியில் இரண்டறக் கலந்தேன்!

(சற்றே மௌனம். "சர், சர்"—"பட் பட்" விட்டில் எரிந்து மடியும் ஒலி)

கவி : ஆஹா! என்ன கோரம்! என்ன கொடுமை! அழகின் உபாசகன் அழகினுக்கே தன்னைப் பலியிட்டுக் கொள்ள வேண்டுமா? விசித்திரமான கொள்கை தான் இது!

(சுடரை நோக்கி) ஏ, சுடரே! நீ செய்தது சரிதானா? ஒரு சின்னஞ்சிறு விட்டிலை விழுங்கி ஏப்பம் விட்டு விட்டாயே!...... தவிர ஒன்றுமே தெரியாதது போல, நிச்சலமாக நின்று நடிக்கின்றாயே! மினுக்கிச் சிரிக்கின்றாயே! இது சரியோ? முறையோ? இது உனக்கு அடுக்குமா?

(பேய்க் காற்று வீசுகிறது. சுடர் அணைகிறது)

சுடர் அவிந்ததே!.........எங்கும் அந்தகாரம். அதன் செய்தியைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையே என்ற கோபமா அதற்கு? புரிந்துகொள்ள முயல்வேன்.

(பாடுகிறான்) ராகம்—செஞ்சுருட்டி

"தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா—
உன்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதையே
நந்தலாலா"

உம்! (பெருமூச்சு விடுகிறான்).


கோத்ரெஜ் வத்னி டாயிலெட் சோப்

Godrej ரிஜிஸ்டர்டு Vatni

இத்துடன்
சிறிய ('பேபி') சைஸ்

(தாய்நாட்டைச் சார்ந்தது)

மற்றவர்கள் வாக்களிக்கும் எல்லா நன்மைகளையும் அது வழங்குகிறது. இந்தச் சுத்தமான பச்சை நிறச் சோப்பை இன்றே வாங்குங்கள். இதனால் நீங்கள்-கடைசி தேசல் வரையிலும்-அதனுடைய தூய்மையான மணம் கமழும் நுரையினால் அதிக குதூகலமடைவீர்கள். இத்துடன் குழந்தைகளின் சருமத்திற்கும் ஒரு போஷாக்குப் போன்றது—இதத்தையும், தூய்மையையும், அழகையுமளிக்கிறது.



6 அணா

ஒப்புயர்வற்ற சுதேசி ஸோப்பாண

100 சதம் தூய்மைக்கும்,
மிருகக் கொழுப்பற்றதென்பதற்கும் உத்தரவாதமானது

கோத்ரெஜ் சோப்ஸ், லிமிடெட்
மதராஸ்: 134, பிராட்வே;
கொச்சின்: 6/36, கல்வத்தி.

# நளினியின் கவலை

கௌரி

அன்று காலையிலிருந்து ராகிணி அம்மாளுக்கு ஓழியாத வேலை. வேண்டிய பண்டம் கடையில் உடனே கிடைத்து விடுகிறதா? விடிந்தால் தீபாவளி. தவம் கிடந்தும் இப்பொழுது தான் சர்க்கரை வந்து சேர்ந்தது. பக்ஷணத்தில் மூழ்ந்திருந்தாள்.

தையற்காரன் கொண்டு வந்த துணிப் பொட்டலம் கூடத்தில் ஊஞ்சல் பலகையின் மேல் கிடந்தது.

"இது தான் எனக்கு" என்று பைஜாமாவைத் தூக்கினாள் நளினி.



"ஆசையைப் பாருடீம்மா.........ஆசையை! பாவாடை தான் உனக்கு" என்று எடுத்துப் போட்டாள் சரோஜீ. நளினி கையிலிருந்து பைஜாமாவைப் பிடுங்க வந்தாள்.

"பாரேம்மா, இந்த சரோஜீயை!"

"நன்னா சொல்லேண்டி. ரொம்ப பயமோ?"

"அதைக் குடுக்கறயா இல்லையாடி இப்போ?"

"முடியாதுடீ! அம்மா எனக்குத் தான் தைக்கச் சொல்லி இருக்கா. போய்க் கேட்டுப் பாரு."

"அம்......மா...சரோஜீ குடுக்க மாட்டேங்குளம்மா......"

"ஆரம்பிச்சுட்டேளா சண்டைக்கு இப்பவே?"

"நான் ஒண்ணையும் தொடலேம்மா. இந்த நளினி தான்"

"பாரும்மா அவளை. பைஜாமா எனக்கு இல்லேங்கறு"

"வாண்டாட்டா போ! ரொம்ப மோசம் யாருக்கோ" என்று எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போய் விட்டாள் சரோஜீ.

சரோஜிக்கு எட்டு வயது இருக்கும். படிப் படியான தலை மயிரும், வாட்டசாட்டமான தந்தம் போன்ற தேகமும், பரந்த அழகிய முகமும் நன்றாக இருப்பாள். எதிலும் சங்கோசம். தயக்கம் கிடையாது. பேச்சும் சாமர்த்தியமும் அசாத்தியம். தனக்கு வேண்டியதை எப்படி நடத்திக் கொள்ள வேண்டுமென்ற வழியுடன் எதையும் செய்து கொண்டு விடுவாள்.

நளினிக்கு ஆறு இருக்கும் வயது. சரோஜீயுடன் பிறந்தவள் என்றாலும் அவளுடைய முகவெட்டோ, அழகோ, திறமோ எல்லாம் வேறு. மிகவும் சாது. தாக்ஷிண்யமுள்ள சுபாவம். பாபம், புண்ணியம் என்பதோ, நியாயம், அநியாயம் என்பதோ அவள் சிறு உள்ளத்தில் நிரம்பி இருந்தது. யாரிடமும் சங்கோசம். தாட்டியாகப் பேசப் பயப்படுவாள். போட்டிக்கும் பொறுமைக்கும் எதிர்த்துப் போராடும் சக்தி அவளிடம் இல்லை. ஆசை எல்லாம் உண்டு. போட்டிக்குப் போகப் பிடிக்காது. இப்பொழுது அவளுக்கு இருந்த ஆசை ஒன்றே ஒன்று தான். தைத்து வந்த பைஜாமாவையும் ஜிப்பாவையும் எப்படி

யாவது தனக்கு வாங்கிக் கொள்ள வேண்டுமென்பது. முதல் சந்தேகம் சரோஜீ கொடுக்க மாட்டாளே, எப்படிப் பிடுங்கிக் கொள்வதென்பது. அதற்காகத்தான் முதலிலேயே பீடிகை போட்டது. அப்பாவிடமும் சொல்லி விட்டாள். ஆனல் அவர் பதில் தான் திருப்தி யளிக்கவில்லை. வேதனை இன்னும் அதிகரித்தது. "அவள் மட்டில் என்ன என்ன அவ்வளவு ஒசத்தி!" என்ற கேள்வி அவளுடைய சிறு உள்ளத்திலிருந்து பொத்துக் கொண்டு வராமல் இருக்க முடியவில்லை. தனக்குள்ளேயே வேதனைப் பட்டுக் கொண்டிருக்கும் சமயம்.

"என்டீ, இப்படி உம்மணா மூஞ்சி மாதிரி நிக்கறே? மத்தாப்பூவை எடுத்துண்டு வாயேன். கொளுத்தலாம்" என்று அழைத்தாள் சரோஜீ.

நளினிக்குப் பிடிக்க வில்லை.

"போடி! நான் ஒண்ணும் வரலே" என்று உள்ளே ஓடினள்.

"அம்மா............"

"என்ன வந்துடுத்து?"

"யாருக்குப் பாவாடை? யாருக்குப்பை ஜாமா தரப்போறேம்மா காலேக்கி? எனக்கு இல்லே பைஜாமாங்கரும்மா சரோஜீ"

நளினியின் குரலில் எவ்வளவு ஆசையும் நயமும் இருந்ததென்பதை ராகிணி அம்மாள் ஏனே கவனிக்கவில்லை. மைசூர்பாகுத் துண்டுகள் பதமாக விழுந்த பெருமையோ அல்லது எண்ணி வைக்கும் மும்முரமோ தெரியவில்லை.

"நச்சுப் பிச்சுன்னு பிடுங்கிணுயாக்கும் தெரியுமா? சரோஜியைப் பார். எந்த வம்புக்காவது வருளான்னு; போ, பேசாதே!" என்று போய்விட்டாள்.

"ஆமாம்! எதற்கு எடுத்தாலும் சரோஜீ!" நளினிக்குக் கேட்கவே பிடிக்கவில்லை.

ஏன் இப்படிச் சஞ்சலப்படவேண்டும்? என்ருல் குழந்தை நளினி வருத்தப்படுவதற்கும் காரணம் இருந்தது, நினைவு தெரிந்தது முதல் நடக்கும் ஒவ்வொரு விஷயமும் அவளுடைய இளம் உள்ளத்தை இடித்துக்கொண்டே வந்தது. 'சரோஜீதான் சமத்து; அவள்தான் அழகு; அவளுக்குத்தான் எதுவும்' என்று நாளுக்கு நாள் ஒன்றல்ல, இரண்டல்ல—மாதக் கணக்கில் வருஷக் கணக்கில்தான் யோசித்துப் பார்த்தாள்; பொறுத்து வந்தாள். சரோஜீயைப்போல் இவளுக்கு மட்டில் நடந்துகொள்ளத் தெரியாதா? அவள் என்ன அசடா? அலங்காரம் செய்து கொண்டு அவளைப்போல் காசுக்காக நடக்கத் தெரியாதா? அப்படியே செய்யவேண்



டும், எல்லோரும் கொண்டாடவேண்டும் என்று ஆசைதான் இருக்காதா? செய்தும் தான் காட்டினாள். அப்பொழுதுதான் அவள் சிறு உள்ளம் விம்மி வெடித்தது. ம்........ ......ஹூம்............ஒருவரும்! அப்பாவோ அம்மாவோகூட சரோஜியைப் போல் தன்னைக் கொண்டாடுவதுபோல் படவே இல்லை. அப்பாவிடம்தான் எவ்வளவு சலுகை சரோஜீக்கு! அம்மாவுக்குத்தான் அவளைப்பற்றி எவ்வவு பெருமை! ஏன் ஊராருக்குத்தான் எவ்வளவு மதிப்பு! எதற்கு எடுத்தாலும் சரோஜீ! சரோஜீ! சரோஜீ! ஆனால் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தன்னிடம் பிரியமில்லையா? இல்லையென்று ஒப்புக்கொள்ளவும் அவள் தயாராக இல்லை. சரோஜீ வாயாடுகிறாள்; எதிர்த்துப் பேசுகிறாள்; வேண்டியதைப் பிடுங்குகிறாள்; நளினீ ஒன்றும் செய்வதில்லை; பொறுமையுடன் மரியாதையாக நடந்துகொள்ளுகிறாள்; வம்புச் சண்டைக்குப் போவதே இல்லை; ஆனாலும் இதையெல்லாம் பாராட்ட ஒருவருக்கும் பிடிக்கவில்லை. சரோஜீயிடம் தனி அன்பு! மரியாதை! ஏன்? எவ்வளவோ யோசித்துப் பார்த்தாள். தவம் கிடந்து பார்த்தாலும் அவள் புத்திக்குப் புலப்படவில்லை; இப்பொழுதும் சரோஜீ தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளுவாள் என்பதில் துளிக்கூடச் சந்தேகம் தட்டவில்லை. அவள் அப்படி இருந்தாலும் அம்மாவும் அப்பாவும் அவளுக்குப் பரிந்துவருவது அவளால் தாங்கவே முடியவில்லை. முந்தாநாள்கூடச் சரோஜீ ஒரு பொய் சொன்னாள்.

“அம்மா, சரோஜீ பட்டுவை அடித்து விட்டாம்மா” என்று நளினீ வந்து சொன்னபொழுதுகூட, “பொய்யும் புளுகுமாய்ச் சொல்லாதே வந்து; அப்படியெல்லாம் பண்ணமாட்டாளே அவள்.” எப்படி இருக்கும் நளினீயின் உள்ளம்? துக்கம் பொங்கி வந்தது. உணர்ச்சி ததும்பும் கண்களோடு சரோஜீயைப் பார்த்தாள். திரும்பியாவது பார்த்தாளா சரோஜீ இவளை? நன்றாய் வேண்டும் என்று விரலைக் காட்டிவிட்டு ஓடினாள். அப்போது நளினீ சரோஜீயைக் கட்டோடு வெறுத்தாள். இனிமேல் இவள் என்னுடைய அக்காவே இல்லை என்று கூட நினைத்துக்கொண்டு விட்டாள். அதெல்லாம் கிடக்கட்டும். நாளைக்கு அவள் மனம்போல் பைஜாமாவும் ஜிப்பாவும் கிடைத்துவிட்டால் இவை எல்லாவற்றையும் மறந்துவிடவே தயார் அவள். பட்டாசும் சுடவில்லை. மத்தாப்பூவும் விடவில்லை. சாப்பிட்டவள் நேரே படுக்கைக்குப் போய்விட்டாள். இரவெல்லாம் இதே கனவு கண்டிருப்பாள் பாவம்!

காலை நளினீ விழித்துக் கொள்ளும் சமயம் எங்கும் ஒரே பட்டாசுச் சத்தம். கண்ணைப் பிசைந்து கொண்டு பார்த்தாள். அவள் எதிர்பார்த்தபடியே தான். அப்பா! என்ன பளபளப்பு! பைஜாமாவும் ஜுப்பாவுமாக எதிரில் சரோஜீ! அவள் பேசாமல் இருந்து இருந்தாலும் நளினீ சமாளித்துக் கொண்டிருப்பாளோ என்னவோ?

“அய்யே! தூங்கு மூஞ்சி டோய்” என்றதும் நளினீயின் உள்ளம் கட்டுக்கடங்கவில்லை. துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்து விட்டது. “பொத்” என்று படுக்கையில் விழுந்தவள் சுரம் வைக்க ஆரம்பித்து விட்டாள்.

“யார்? பண்டிகையும் அதுவுமா அழுகிறது? நளினீ தானே?”

என்னசெய்வாள் நளினீ? மேலும் விசிப்பதைத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை. சரோஜீயைப் பார்க்கக் கட்டோடு பிடிக்கவில்லை.

ராகிணி அம்மாள் மட்டும் சற்றுப் பொறுமையுடன் செய்யாமல் இருந்தால் நளினீ ஒரு வழிக்கும் வந்திருக்கமாட்டாள். அன்று கொஞ்சிக் கெஞ்சி எப்படியோ நல்லதனப் படுத்திப் பாவாடையும் சொக்காயும் போட்டு அனுப்பினாள். பாவாடையை இடுப்பில் கட்டும் சமயம் நளினீயின் துக்கம் தாங்கவில்லை. விசித்துக்கொண்டே வெளியில் வந்தாள்.

சரோஜீயுடன் பேசமட்டும் கட்டோடு பிடிக்கவில்லை. இருவரும் பேசாமல் ஒருவர் எதிரில் ஒருவர் உட்கார்ந்திருந்தனர்.

சரோஜீ! நளினீ!

“ஏண்டி?”

புதுப் பாவடையை விசிறிக்கொண்டு ஓடி வந்தாள் பட்டு. ஒருகண நேரம் அவள் கண்கள் சரோஜீயின்பேரில் பதிந்து நின்றது. அடுத்தது நளினீயின்பேரில் பாய்ந்ததும்,

“எவ்வளவு நன்னா இருக்குடீ சரோஜீயின் சட்டை! உனக்குத் தெக்கலே அது மாதிரி” என்றாள் நளினீயின் தோளில் கையைப் போட்டுக்கொண்டே.

அவள் கையைப் பிடித்துத் தள்ளினாள் நளினீ. முகத்தில் கோபம் தெறித்தது.

“நான் எதைப் போட்டுண்டா உனக்கென்ன? போடீ பேசாமே!” என்று எரிந்து விழுந்தாள் பட்டுவின்பேரில்.

“கேட்டா என்னமோ இப்படிக்கோவிச்சுக்கறயே? நான் போறேண்டியம்மா வீட்டுக்கு.”

“அவளுக்கும் இது மாதிரி தச்சுக் கொடுக்கலையாம். கோவிச்சுண்டு என்னோடேபேசவே மாட்டேங்கறா. நான் என்ன செய்யறதுடீ

அதுக்கு?" என்றாள் சரோஜா தாங்கலுடன், தன் சட்டையைப் பார்த்துக் கொண்டு.

"ஏண்டியம்மா அவளுக்குமட்டும் ஆசை இருக்காதோ உன்னாட்டமா? போட்டுக் கொண்டு என்னமோ பிரமாதமாக மினுக் கறயே?"

"ஆசையாய் இருந்தா நாளைக்குப் போட்டுக் கொள்ளட்டுமேடீ; யார் வேண்டான்னா அவளை?"

"ஆமாண்டீ; இன்னிக்கிப்போட்டுக்காமே நாளைக்கிப்போட்டுக்குவா! நாளைக்கி. நானா இருந்தா சண்டை போட்டுப் பிடுங்கிக்கொண் டிருப்பேன்? பாவம் நளினி!"

பட்டு பெருமையாகப் பேசப்போகிறாள் என்று எதிர்பார்த்த சரோஜாவுக்கு முகம் சுண்டி விட்டது. இதுவரையில் யாராவது பட்டுவைப்போல் கொஞ்சம் நினைத்துப்பார்த் தார்களா? அம்மாவுக்குக்கூட அல்லவா தெரியவில்லை. துக்கம் பொங்கிக்கொண்டி ருந்த நளினியின் உள்ளத்தின் ஒரு மூலையில் கொஞ்சம் அமைதி தோன்றியது. "பட்டு வுக்குத்தான் என் பேரில் எவ்வளவு ஆசை! எவ்வளவு பரிவு!" என்று நினைத்தவள் ஓடி வந்து பட்டுவை அணைத்துக்கொண்டு விட் டாள்.

"வாடீ, இனிமேல் ரெண்டுபேரும் இந்தச் சரோஜீயோடு பேசவே வேண்டாம். ரொம்ப கெட்டவள்" என்று சொல்லிக்கொண்டே பட்டுவின் வீட்டிற்குப் போய்விட்டாள்.

"ரொம்ப ஆசைக்காரீடீ. வீட்டிலேயே ஒத்தருக்கும் என்மேல் ஆசைகிடையாதுடீ பட்டு. எல்லாம் சரோஜீக்கித்தான். எனக்கு ஒண்.........ணும் கிடையாது" என்று நளினி சொல்லும்பொழுது பட்டுவுக்கே துக்கமாய் இருந்தது.

"பட்டு................"

"பேசாதேடீ; சரோஜீ கூப்பிடறா"

"நீயும்பேசாதே. நன்னா கோழிசொல்லட் டும் அம்மாவிடம் போய்."

சரோஜீ வந்ததும் ஒருவரும் பேசவில்லை. ஊஞ்சல்பலகையில் உட்கார்ந்திருந்தனர்.

சரோஜீக்கு அசடு தட்டியது முகம். இரு வரையும் ஒரு முறை முறைத்துவிட்டுப் பட்டு வின் தாய் இருந்த இடத்திற்குப் போனாள். பட்டுவும் நளினியும் பேசாவிட்டாலும் பட்டு வின் தாயார் உடைகளைப் பார்த்துச் சந்தோ ஷப் பட்டதும், "சாபாஷ்" என்றதும் மிகவும் பெருமையைத் தந்தது.



"ரெண்டு பேரும் என்னோடே பேசவே மாட்டேங்கறா மாமீ" என்றாள்.

ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்திருந்தவருடைய மௌனம் "சடக்" என்று கலைந்தது. இருவரும் ஒரே தாவலாய்த் தாவினார்கள்.

"பாருங்கோ மாமீ நீங்களே! அவளுக்கு மட்டும் எல்லாம் ஒசத்தி! எனக்கு மட்டும் இந்தச் சொத்தைப் பாவாடை" என்று நளினி பாவாடையை விசிறினாள்.

"ரொம்ப ஜோரா இருக்கே. உனக்கு இது தான் நன்னா இருக்கு. சரோஜீயைப் பார்! அசல் வடக்கத்திக் குட்டி மாதிரி! இப்பவே யாராவது கொத்திண்டு போயிடுவென்போலிருக்கே! இங்கே வாடா சரோஜ்!" என்று பட்டுவின் தாய் சொன்னதும் நளினீயின் கோபம் எல்லை கடந்துவிட்டது.

வீட்டில்தான் சரோஜ்—சரோஜ்-சரோஜ். இவளுக்குக் கூடவா அப்படி தோன்ற வேணும்? முகம் வாடி நிற்கும் நளினீயைப் பார்த்துப் பொறுக்கவில்லை பட்டுவுக்கு.

"போம்மா! உனக்கு எப்பொழுதும் அப்படித்தான். நாளைக்கி நளினி அம்மா அவளுக்கும் பைஜாமா தைத்துத் தரப் போறாளாம். நாங்க ரெண்டு பேரும் போட்டுக்கறம், எனக்கும்மா;" என்றாள்.

"ரொம்ப சரி. முதலில் செய்துட்டு மறு வேலை பார்க்கிறது!

"திருப்பதி மரப்பாச்சி போல்! இருக்கற அழகுக்கு அதுஒண்ணுதான் பாக்கி போ!"

பட்டுவின் முகத்தில் ஈயாடவில்லை. பேசாமல் வாசலுக்கு வந்துவிட்டாள்.

"ஏண்டி உங்கம்மா அப்படி சொல்லறா?"

"நாமரெண்டுபெரும் கறுப்பாம். சரோஜீ தான் சே.........ப்பாம். அவள்தான் ஒசத்தி எல்லோருக்கும்!" நளினீக்கு ஒன்றும்தோன்றவில்லை. தன்னைப் பார்த்துக்கொண்டாள். பட்டுவைப் பார்த்தாள். சந்தேகம் ஒன்றுமில்லை. கட்டாயம் இருவரும் கறுப்புத்தான். சந்தேகமே இல்லை. கறுப்பாய் இருப்பதினாலா ஒருவருக்கும் பிடிக்கவில்லை? அம்மாவுக்குக் கூடவா? நளினீயின் யோசனை எங்கெங்கோ ஓடிவிட்டது. யோசனை செல்லச் செல்லக் கவலை உண்டாகி வேதனை பிடித்துக்கொண்டது. இரண்டுநாள் முந்தி அப்பா சொன்னாரே? அடுத்தாத்து மாமியும் சொன்னாளே? பிடித்துக்கொண்டிருந்த பட்டுவின் கையை உதறித் தள்ளினாள். தீபாவளி, பாவாடை, பைஜாமா எல்லா நினைவும் எங்கேயோ பறந்துவிட்டது. ஒரே ஓட்டம் பிடித்தாள். ஒருவரையும் திரும்பிப் பார்க்காமல் பூஜை உள்ளுக்கு ஓடி வந்தாள். அங்கு வேதாசலம் உட்காந்திருப்பதைக்கூடக் கவனிக்கவில்லை. பூஜையின் கீழ் மண்டியிட்டுக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டாள்.

"என்னடீ இது?"

"அம்மாவுக்கு அம்பிப் பாப்பா பொறக்கப் போறதுன்னு சொன்னியே நீ தான். அது கஷ்டப்படாமே இருக்கணும்னு வேண்டிக்கப் போறேன் சுவாமியை"

"கஷ்டப்படுவானேன்? போடீ அசடு"

"கறுப்பா இருக்கேன்னு தானே யாருக்கும் என்னைக் கண்டால் பிடிக்கலே. சுவாமியை வேண்டிண்டா அம்பிப் பாப்பா கறுப்பா பொறக்காமே இருக்குமென்னு?" நளினீயின் கண்களில் கண்ணீர் பொங்கி வந்தது.

வேதாசலம் ஒருகணம் அப்படியே அயர்ந்து போய் விட்டார். எவ்வளவு வேலை செய்கிறது குழந்தையின் உள்ளம்! கண்ணீர் பெருகி நின்ற நளினீயைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தவர்,

"குழந்தை என்ன வருத்தப்படுகிறாள், பார். யார் இதை எல்லாம் சொன்னது அவளுக்கு?"

"அம்மா தான் எனக்கு ஒரு பைஜாமா கூடத் தைத்துக் கொடுக்க மாட்டேன்னுட்டாளே! பாவம் அம்பிப் பாப்பாவும் இப்படியே பொறந்துட்டா?"

நளினீயின் துக்கம் அவளை அணைத்துக் கொண்டு விட்டதால் மாறிவிடுமா உடனே?"

# நமது புராதன சிற்பக் கலை

தென் இந்தியாவில் நிறைந்துகிடக்கும் ஆயிரக்கனக்கான அற்புதக் கோயில்களும் வானளாவும் கூடகோபுரங்களும் ஆயிரக்கால் மண்டபங்களும் மேல்நாட்டு விஞ்ஞானிகளையும் யாத்ரீகர்களையும் வியப்புறச்செய்கின்றன. நாகரிக உச்சாணியில் நிற்கிறோம் என்ற மனோநிலையில் உள்ள அவர்கள் இங்கு வந்து இவ்வுன்னத ஸ்ருஷ்டிகளைக் கண்டதும் அடக்கம்கொண்டு நம் நாகரிகத்தை இகழ்வதைவிட்டு, புகழக்கிளம்பி விடுகிறார்கள். வெள்ளையர்கள் இந்நாட்டில் காலடி வைத்தது முதல் நடந்துவரும் சர்வ சாதாரணமான நிகழ்ச்சி இது. மேல்நாடுகளில் இந்தியாவின் புகழ் ஓங்கி நிற்கிறதென்றால் தற்காலத்தில் நாம் அடைந்துள்ள மேன்மைகளால் அல்ல; நமது முன்னோர்கள் பலதுறைகளிலும் அடைந்துள்ள முன்னேற்றத்தினால்தான். அவைகளுள் முக்கியமானதொன்று சிற்ப சாஸ்திரம்.

தற்கால இந்தியர்கள் இக்கோயில்களைக்கண்டு அவ்வளவாகப்பெருமைப்படுவதில்லை. நமக்கு அவை சர்வசாதாரணம். ஆனால் மேல்நாட்டார்களுக்கு அவை ஓர் அசாதாரண சிருஷ்டியாகத்தான் படுகிறது. விஞ்ஞான சாஸ்திரத்தைக் கரைத்துக்குடித்து அரிய பெரிய ஆராய்ச்சிகள் செய்து, தங்கள் ஞானத்தைப்பெருக்கியுள்ள எஞ்ஜினீயர்கள் நமது கோயில்களைப்பார்த்து வாயடைத்து நிற்கிறார்கள். இத்தகைய கற்பனை, அதற்குப்போதிய சாதனங்கள் இவை எல்லாம் இல்லாத காலத்தில் எப்படி இக்காலத்தில் கூட கட்ட இயலாத இப்பெரும் கோபுரங்களை எழுப்பினார்கள் என்று திகைத்துப் போகின்றனர். அவர்கள் அதோடு நிற்கவில்லை. இச்சிருஷ்டி கர்த்தாக்களுக்குத் துணைபுரிய ஏதேனும் நூல்கள் உளவா? அப்படியிருப்பின் அவைகளைச் சேகரித்து ஆங்கிலப்படுத்தி, தங்களதாக்கிக் கொள்ளச் சென்ற நூற்றாண்டிலேயே ஆரம்பித்தார்கள். லண்டனிலுள்ள ராயல் ஏஷியாடிக் சொஸைட்டியார் ராமராஜு என்பாரைக் கொண்டு இதை ஆக்க முயன்றார்கள். பெங்களூரில் அவர் மாஜிஸ்திரேட்டாக இருந்தார்; ஸம்ஸ்கிருதம் நன்கு படித்தவர். அவற்றோடு தம் சொந்த முயற்சியால் கணித சாஸ்திரம், வான சாஸ்திரம் எல்லாவற்றிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். 1827—28 ராமராஜு நாட்டின் பல பாகங்களிலும் சுற்றி, சிற்ப சாஸ்திர நூல்களைச் சேகரிப்பதோடு அனுபவத்தில் வழங்கி வரும் கட்டிட முறைகளையும் ஒன்று சேர்த்துத் தொகுக்க முயன்றார். அவர் தம்முடைய ஆராய்ச்சிகள் அனைத்தையும் முடிக்கு முன்னரே காலமாய்விட்டார். அவர் லண்டனிலுள்ள ராயல் ஏஷ்யாடிக் சொஸைட்டியாருக்கு ஓர் கட்டுரையாக எழுதியுள்ளதை அச்சங்கத்தார் புத்தக ரூபமாக 1834ம் வருஷம் "ஹிந்துக்களின் சில்ப சாஸ்திரம்" என்று வெளியிட்டுள்ளனர். மேல்நாட்டு எஞ்சினியர்களுக்குப் பயன் தரும் என்ற நோக்கங்கொண்டே வெளியிடப்பட்ட நூல் இது.

அந்நூலில் ராமராஜு தம்மால் சேகரிக்க முடிந்த சிற்ப நூல்களிலிருந்து சிற்பக் கலையின் தத்துவங்களையும் முறைகளையும் விளக்கியுள்ளார். சில்ப சாஸ்திரத்தைப்பற்றி முப்பத்திரண்டு அரிய பெரிய நூல்களும் இன்னும் முப்பத்திரண்டு உப நூல்களும் இருந்திருக்கின்றன என்று தெரிய வருகிறது என்று கூறியிருக்கிறார். அவைகளிலே பெரும்பாலானவை முற்றும் மறைந்துபோய் விட்டன. அந்நூல்களின் பெயர்களை மட்டும் சாஸ்திர அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். சில நூல்களின் சொற்ப பாகங்கள் மட்டுமே அத்தொழிலில் ஈடுபட்டு உழைத்து வரும் ஸ்தபதிகளிடம் காணக் கிடைக்கின்றன. இச்சிற்பிகளும் முப்பத்திரண்டு சிற்ப சாஸ்திர நூல் இயற்றிய அறிஞர்களின் பெயர்களை ஆதாரமாகக் கூறுகிறார்கள். கிடைத்துள்ள நூல்களின் சில பகுதிகளைக் கொண்டு ராமராஜு கோயில் நிர்மாணம் செய்வதற்காக விதித்துள்ள முறைகளைத் தம் புத்தகத்தில் விளக்கியுள்ளார். மானஸாரா என்ற நூல் முதன் முதலாகச் சிற்ப சாஸ்திரத்தில் உபயோ

கப்படும் அளவுக் கருவிகளை விளக்குகிறது. பிரிக்கமுடியாத அளவு பரமாணு என்று வைத்துக்கொண்டு பரமாணு என்ருல் சூர்ய வெளிச்சத்தின் எதிரொளியில் மிதக்கும் தூள்கள்என்று விளக்கியிருக்கிருர்கள். எட்டுப்பரமாணுக்கள் கொண்டது ஒரு ரதரேணு (அதாவது வண்டி செல்லும்பொழுது எழுப்பப்படும் தூசி) எட்டு ரதரேணுக்கள் ஒரு வலாக்ரம் அல்லது மயிர்இழை அதிலிருந்து படிப்படியாக யவம், அங்குலம். பன்னிரண்டு அங்குலம் ஒருவிதஸ்தி. இரண்டு விதஸ்தி ஒரு ஹஸ்தம். இப்படியாக ஒரு முறை பற்றிப்போகிறது. பிறகு ஸ்தபதி எப்படியிருக்கவேண்டும், கோயில் குளங்கள் கட்ட, பூமி எப்படியிருக்க வேண்டும், விமானம் கோபுரம் இவைகள் எப்படிக் கட்டப்படவேண்டும், அஸ்திவாரம் எப்படி இடப்பட வேண்டும், விமானத்தின் அகலம் நீளம்எப்படி எப்படி அமைக்கப் பட வேண்டும் என்றெல்லாம் சவிஸ்தாரமாக விவரிக்கப் பட்டிருக்கிறது. ராமராஜு இவைகளைப் படம்போட்டு ஒரு மாடி விமானக்கோயில் எப்படி அமைப்பது, பன்னிரண்டு அடுக்கு விமானக் கோயில் எப்படி சிருஷ்டி செய்வது, தூண் வேலைப்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் தென் நாட்டிலுள்ள கோயில்களை ஆதாரமாகக் கொண்டு எடுத்துக் காட்டியுள்ளார். மிகவும் அற்புதமான நூல் இது. ராயல் ஏஷ்யாடிக் சொஸைட்டியார் இதைப் பிரசுரித்தது சிற்ப சாஸ்திரத்துக்கே பெரிய சேவை செய்ததாகும்.

இப்புத்தகம் 1834ல் பிரசுரிக்கப்பட்டது. ராமராஜு காலத்திலேயே சில்ப சாஸ்திர நூல்கள் மறைந்து போயின. 'சில்பிகளுக்கு நூலிலுள்ள விஷயங்கள் தெரியா. மேல் குலத்தார் அவர்களுக்கு வழிகாட்டினுர்களே ஒழிய, அந்நூல்களை அவர்களுக்குப் பயிற்றி வைக்கவில்லை. எனவே பிற்காலச் சில்பிகள் தங்கள் அனுபவங்களை மட்டுமே ஆதாரமாகக்கொண்டு சில கோயில்களை நிர்மாணித்தார்களே யன்றி சாஸ்திரஞானம் கொண்டு செய்யவில்லை' என்று ராமராஜு கூறுகிருர். எஞ்சியுள்ள சில்ப சாஸ்திர நூல்களும் ஸம்ஸ்கிருதத்தில் இருப்பதால் அவர்களுக்கு அவை விளங்கவில்லை. அக்கலையில் ஞானமில்லாத ஸம்ஸ்கிருத பண்டிதர்களுக்கும் அந்நூல்களில் வழங்கப்பட்டுள்ள சில்ப நூலுக்குரிய டெக்னிகல் வார்த்தைகள் விளங்கவில்லை. 1830-லேயே இங்ஙிலை என்ருல் இக் காலத்தில் கேட்பானேன்?

சுயராஜ்யம் நமக்குக் கிடைத்துவிட்டது. நமது முன்னோர்கள் அடைந்துள்ள அரிய பெரிய சாதனங்களையும் கலைப் பொக்கிஷங்களையும் அன்னியன் ஆட்சியின் காரணமாக நாம் இழந்துவிட்டோம். அவைகளை நாம் சேகரித்துக் கற்ருலொழிய, சுயராஜ்யத்திற்கு அர்த்தமில்லை. மேல்நாட்டு முறைகளையும் நூல்களையும் மட்டுமே நாம் பயின்று அவர்கள் வாலைப் பிடித்து நடப்பது சுதந்திரமாகாது. நமது முன்னோர்கள் காட்டிய வழிகளையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். சிற்பத் துறையில் உள்ள நூல்களைச் சேகரித்து அவைகளை மக்களுக்கு உணர்த்த, நமது குடியரசு கவர்மெண்டார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிருேம்.

திருவாரூர் கோயிலின் பிளான் (வழிவகை) ஒன்று ராமராஜுவின் புத்தகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதை இங்கே பிரசுரித்துள்ளோம். இத்தகைய பெரிய கலை ஸ்ருஷ்டிகளை நிர்மாணித்த நமது முன்னோர்களுக்குத் தலைவணங்க வேண்டியதே நமது கடமை.

வெறும் பத்தாம்பசலிகள் என்றும் மடிசஞ்சிகள் என்றும் உதாசீனமாகக் கூறும் நவீன மேல்நாட்டு நாகரிக மோகம் படைத்த நம்மில் பெரும்பாலோர் இதைக்கண்டு விழிப்படைவார்கள் என்று நம்புகிருேம். இப்பிருமாண்டமான ஸ்தாபனங்களைக் கட்டியவர்கள் எந்த எஞ்ஜினீரிங் காலேஜில் படித்தவர்கள் என்று யோசித்துப் பாருங்கள். இக்காலத்து மெத்தப்படித்த எஞ்ஜினியர்களால் காலத்தை எதிர்த்துத் தலை ஓங்கி நிற்கும் இத்தகைய பெரிய கோயில்களையும் விமானங்களையும் கட்ட இயலுமா என்பதையும் சற்று யோசித்துப் பார்க்குமாறு வேண்டுகிருேம்.

## திருவாரூர் கோயிலின்

வெளித் தோற்றம் [1830]





# துணைக்கடிதம்

ஆர். எஸ்பி

"தபால்!"

வாசல் பக்கத்து ஜன்னல் வழியாக ஒரே ஒரு கவர் பறந்து வந்து உள்ளே விழுந்தது. பார்வதி அவ்வளவு நேரம் உழைத்து ஓய்ந்து போய், படுத்துக் கொண்டிருந்தவள் எழுந்து அதைக் கையிலெடுத்தாள். அவள் உடல் புல்லரித்தது. எழுத்தைப் பார்த்ததும் அப்பாவுக்கு என்று நினைத்தாள். உள்ளே பிரித்ததும் தனக்கு என்று தெரிந்தது. அவளுக்கு வெட்கமாகக் கூட இருந்தது.

வழக்கமாகக் கடிதம் அப்பாவுக்குத் தான் வரும். அவளுக்கு வந்ததில்லை. வந்தால் அவள் பதில் போடமாட்டாள் என்ற எண்ணமாக இருக்கலாம். அப்பா அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு "அவர் கடிதாசு போட்டிருக்கார் அம்மா!" என்று வாசித்துச் காட்டுவார். அவள் அதைச் சரியாகக்கூடக் கவனிக்க மாட்டாள். எங்கேயோ பார்த்துக் கொண்டு அரைகுறையாகக் கேட்டு வைப்பாள். அதை அவள் செய்யும் அலட்சியம் என்று சொல்ல முடியாது. ஒரு விதமான கூச்சம். சங்கோஜம். பிறந்த வீட்டாருக்கு முன்னால் கணவரிடத்தில் தனக்கு இருக்கும் பிரேமை—அவர் க்ஷேமத்தில் தனக்கு இருக்கும் கவலை—இவைகளை வெளிப்படையாக அவள் காட்டிக் கொள்ள முடியுமா? "வயசு ஆன கணவரிடத்தில் ஆசையைப் பார்!" என்று அவர்கள் பரிகாசமாக நினைத்தால்...?

ஆறு வருஷங்கள் ஆகிவிட்டது. இது வரையில் அவர் அவளுக்கென்று ஒரு வரி எழுதினதில்லை. அவருக்கே வெட்கமாக இருந்ததோ என்னவோ! எல்லோரையும் போல அவள் கணவரும் வாலிபம் பூத்துக் குலுங்கக் கண் நிறைய இருந்தால் ஒரு வேளை அவளுக்கு வரிந்து எழுதி இருக்கலாம். ஆனால் அதெல்லாம் இப்போது சொல்லிப் பிரயோசனப்படாத விஷயம். உபயோகமில்லாத குப்பை.

கடிதத்தை அவள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவள் தாய் சட்டென்று அறைக்குள் நுழைந்தாள்.

"யார் கடிதாசு?"

கேள்விக்குப் பதில் அவளால் நேரே சொல்ல முடியவில்லை. நாக்கு நிலைப்படாமல் தடுமாறியது. அவள் கணவர் அவளுக்கு நேரே கடிதம் எழுதினார் என்பது தெரிந்ததும் அவளுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. அது யாரும் எதிர்பாராத ஒரு விஷயம் தானே?

அவள் தம்பிகூட "என்ன? அத்திம்பேருக்குப் பால்யம் திரும்பி விட்டது போலிருக்கே? கடிதம் எழுதக் கிளம்பி விட்டார்!" என்று சொன்னான். அவள் சொல்வதற்கென்ன இருக்கிறது? கடிதம் வந்தபோது வெட்கமாக இருந்தது. இப்போது எல்லாம் தணிந்து விட்டது. வேதனையாகக்கூட இருந்தது.

2

பார்வதி நல்ல அழகி. கொடி போலத் துவண்டு விழும் மேனி. கறுத்துச் சுருண்டு தொங்கும் அடர்ந்த கூந்தல். களை பொருந்திய முகம். அந்த நாளில், குடத்தை இடுப்பில் எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பினால் கண்பட்டு விடுகிற மாதிரி இருக்கும்.

அழகோ, புத்திசாலித்தனமோ பணம் படைத்தவர்களிடம் இருந்தால் தான் பரிமளிக்கும். ஏழைகளுக்கு அதனால் என்ன பயன்? அது அநேகமாய் வெறும் பலியாகவே முடிந்து விடுகிறது. பெரிய குடும்பம் படைத்த அவள் தகப்பனார் சொற்பக் குடித்தனக்காரர். அதுவும் முதல் நான்கு பெண்களுக்கு விவாகம் செய்து வைத்து அலுத்துப் போனவர். "இன்னும் ஒரு பெண்ணுக்கு வரன் தேடியாக வேண்டுமே? இந்தத் தொல்லைக்கு முடிவே இல்லையா?" என்று அவர்

அமர்ந்திருக்கும் சமயம், அவர் மனைவிக்கு ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவருக்கு மனைவி இறந்து போய் விட்டாள். நல்ல சொத்துடையவர். பார்வதியை விவாகம் செய்து கொடுக்கும்படி கேட்டார்.

வீட்டில் கூப்பிட்ட குரலுக்குப் பதில் சொல்ல யாரும் இல்லையே என்ற குறை மட்டும்தான். வயசுதான் கொஞ்சம் அதிகம், அதைப்பற்றிக் கொஞ்சம் யோசனை செய்தார்கள். "எல்லாம் சேர்ந்து அமையுமா?" என்று தோன்றிவிட்டது.

பார்வதிக்குச் சம்மதம்தானா? அவளுக்கென்று செய்யும் ஒரு விவாகத்தில் அவள் சம்மதத்தைப் பற்றிக் கேட்டவர் யார்? தாய் தந்தையர்களுக்குத் தோன்றினால் அதைமீறி என்ன சொல்ல முடியும்? ஒரு கிராமத்தில் வயதான பெண்ணை வைத்துக்கொண்டு காலந் தள்ளுவது லேசான காரியமா?

பார்வதிக்கும்கூட அந்தக் கிராமவாசம் அலுத்துப்போயிருந்தது. குளத்தங்கரையிலும் கோவில் பிராகாரத்திலும் ஊரார் பேசும் வம்பு அவள் காதைத் துளைத்தது. அப்பா படும் வேதனைதான் என்ன? அவள் ஏன் அந்த வீட்டில் வந்து பிறந்தாள்? ஐந்தாவது பெண்ணாகவந்து பிறந்து அவர்களையெல்லாம் ஏன் கலங்க அடித்தாள்? ஊரார் அபவாதம் கொஞ்சமா! கலியாணம் செய்துகொள்ளாவிட்டால் என்ன என்று நினைத்துவிட முடிகிறதா? இப்படியெல்லாம் எண்ணி மனம் ஓய்ந்து போனவளுக்கு இந்தச் செய்தி காதில் விழுந்ததும், "அப்பா! கடவுள்தான் அப்பாவைப் பெரிய கஷ்டத்திலிருந்து காப்பாற்றினார். ஒரு வழியாக இந்தக் கிராமத்தை விட்டுத் தொலையப்போகிறோம்?" என்று நினைத்தாள்.

இந்த எண்ணமெல்லாம் ஒருபுறம் அவளை ஆட்டிவைத்தாலும் மனம் சலித்தது. வாழ்க்கையில் ஒரு சம்பவம். ஓடி ஓடி அலுத்துப் போன குதிரையைப் புது வண்டியில் பூட்டி விட்டதனால் வண்டி வேகமாக ஓடுமா! ஏற்கனவே இருபது இருபத்தைந்து வருஷம் வாழ்க்கையை அநுபவித்து அலுத்த மனிதர்; வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் அறியாத புதுமையை எதிர்பார்த்து ஏமாந்து நிற்கும் பெண். இரண்டுபேருக்கும் என்ன பொருத்தம்? 'எல்லாம் அநுகூலமாகத் தான் இருக்கிறது?' என்று அப்பா சொல்கிறார். அந்த எல்லாம் என்கிற வார்த்தையில் அவள் பூரண சம்மதம் அடங்கி இருக்கிறதா? மனமுவந்து அவள் அந்த விவாகத்தை வரவேற்கிறாளா? எப்படி அது சாத்தியமாகும்?

"அப்பா சொல்கிறார். அம்மாவுக்குத் திருப்தி. இதனால் மற்றவர்களுக்கெல்லாம் சௌகரியம். நமக்கும் இது சம்மதமாகத் தான் இருக்க வேண்டும்." இவ்வளவு தான் அவளால் நினைக்க முடிந்தது. அப்படி நினைத்து நினைத்து அவள் பழக்கப் படுத்திக் கொண்டாள். அதற்கு முன் அவள் அழகு, இளமைக் கனவுகள், ஆசை, தாபம் எல்லாம் அழுந்திக் கிடந்தன. அதைப் பற்றி நினைக்கவும் அவளுக்கு ஆசை இல்லை.

ஆனி மாதக் கடைசி. ஏற்பாடுகள் எல்லாம் மளமளவென்று நடந்தன. கல்யாணத்துக்கு முகூர்த்தம் வைத்தார்கள்.

நிச்சயதார்த்தத்திற்குப் பார்வதியை அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள். கையில் அடங்காமல் கூந்தல். பின்னல் போட்டுக் கை வலித்தது. அணு அணுவாகச் செய்திருந்த அலங்காரம். கண்ணுக்கு இட்டிருந்த மை அவள் நீண்ட அழகான கண்களை எடுத்துக் காட்டியது. அவள் தமக்கை, முதல் சகோதரி விசாலம்—அவள் தான் அலங்காரம் செய்தவள். இயல்பான அழகுக்கு மெருகு கொடுத்தாற்போல இருந்த புடவையையும் அலங்காரத்தையும் பார்த்த அவளுக்கு என்னவோ உணர்ச்சி பொங்கியது. அவளால் அடக்க முடியாமல் அது கொந்தளித்தது.

"புடவையைக் கொஞ்சம் தழைய விட்டுக்கோ." கீழே குனிந்து புடவைக் கரையைத் தொட்டு இழுத்தாள். பார்வதியின் காலில் சூடாக இரண்டு நீர்த் துளிகள் விழுந்தன. பார்வதிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"அக்கா! அழுகிறாயா என்ன?"

விசாலம் பதில் சொன்னாள்: "என்ன இருந்தாலும் உன் அழகு இப்படிப் போக வேண்டுமா? ரோஜாப் புஷ்பம் மாதிரி இருக்கிறாயே? உன் பாக்கியம் இப்படியா இருக்கணும்?" அவளை அறியாமலே அந்த வார்த்தைகள் தெறித்து விழுந்தன.

அவை அந்தப் பேதையின் மனதில் தைத்தன. அழகு என்பதும் இளையாள் என்பதும் இரண்டு பொருத்தமில்லாத விஷயங்கள்; இரண்டும் ஒன்று சேர்ந்து ஒரு பெண்ணிடம் அமைவது பொருந்தாதது என்று அப்போது தான் அவள் உணர்ந்தாள். அழகு ஒரு பெரிய பாக்கியம். இளையாள் பதவி பெரிய அவமானம். அழகைப் பலி கொடுக்கும் பீடம் தான் அந்தப் பதவி. இந்த எண்ணத்தால் உண்டான வேதனை அவள் முகத்தில் அலை ஓடியது.

இரண்டாம் தாரம் என்ற வார்த்தைக்குள் அவ்வளவு அடங்கி இருக்கிறதென்று அவள் நினைத்ததில்லை. கணவனுக்கு வயதாகி

விட்டதென்று அவளுக்குத் தெரியாதா? அவளும் எத்தனையோ கதைகள் படித்திருக்கிறாள். இளையாளுக்குக் குறை இருப்பதாக யார் சொல்லியிருக்கிறார்கள்? 'இளையாள் என்பவள் ஒரு பாக்கியசாலி; கணவனைக் கைக்குள் போட்டுக் கொண்டு ஆட்டி வைக்கும் ஒரு ராணி'. இப்படித்தான் அவள் அபிப்பிராயம் இருந்தது. கிட்ட நெருங்க நெருங்க அதில் இருந்த பயங்கரமான தன்மை அவளை உலுக்கினது. அவள் தமக்கை சொன்ன வார்த்தைகள் அவள் ஹ்ருதய அந்தரங்கத்திலிருந்து பிறந்தவை. அவை பார்வதியை ஒரு கலக்குக் கலக்கி விட்டன.

மாலை மாற்றும் போது ஒரே ஒரு தடவை அவளை அறியாமல், அடக்கம், நாணம் எல்லாவற்றையும் மீறி நிமிர்ந்து, அவர் முகத்தைப் பார்த்தாள். பாதி வழுக்கை விழுந்த தலை-சுருங்கிய தோல்-இவைகள் வயதை, அவள் கேள்விப்பட்ட வயதை, கொஞ்சம் அதிகப் படுத்தியே காட்டின. அவரைக் கடைக் கண்ணால் பார்க்கும் போதெல்லாம் அவள் மனம் அவள் தமக்கை சொன்னதையே நினைத்தது. காதிலே ஒலித்த அந்த வார்த்தைகளை அவளால் அகற்ற முடியவில்லை.

3

நாயனம் வாசித்துக் கொண்டிருந்தான். தாலி கட்டி முடிந்தவுடன் தம்பதிகள் நமஸ்கரித்துக் கொண்டு வந்தார்கள். மூன்றாவது அக்கா, பங்கஜத்தின் கணவர்—அவர் நமஸ்காரம் பண்ண வந்த போது—அடக்க முடியாமல் சொல்லி விட்டார். விலகிக் கொண்டே, "நான் உங்களைவிடச் சின்னவனாகத்தான் இருப்பேன். எனக்கு நமஸ்காரம் செய்யாதீர்கள்" என்றார். இந்த வார்த்தைகள் நெருப்பில் நெய்யை விட்டது போல இருந்தன. அவள் தமக்கை அவளை விட எட்டு வயது பெரியவள். அவள் கணவரோ அவரை விடச் சின்னவர். சொல்லப் போனால்—அவர்...அவர் கிட்டத்தட்ட அவள் தகப்பனார் ஸ்தானத்தில் இருக்க வேண்டியவர். அவளால் மேலே சிந்திக்க முடியவில்லை. அழுகை வந்து விடும் போல இருந்தது. மை கரைந்து விடுமோ என்ற பயத்தால் அடக்கிக் கொண்டாள்.

வாடிய முகத்தோடு அவள் உள்ளே போய் மாலையைக் கழற்றினாள். பங்கஜம் அம்மா



விடம் சொல்லிக் கொண்டிருந்தாள்: "பாவம்! பார்வதியின் அதிருஷ்டம் அவ்வளவு தான்!"

அம்மா சமாதானமாகச் சொன்னாள். "அவளுக்கென்னடீ குறைச்சல்? அவள் தான் எல்லோரையும்விட ஓசத்தியாக இருக்கப் போகிறாள் பாரேன்." அம்மாவின் பதில் அவள் காதில் ஏறவில்லை. உள்ளுக்குள் குமுறிய வருத்தம் கண்ணீர் வெள்ளமாகப் பெருகியது. தனக்கு நேர்ந்த அவமானம் ஒருபக்கம். பிறர் பரிகசிக்கிறார்களே என்பது மற்றொரு பக்கம்.

ஊர்வலம் கிடையாது. "ஊர்வலம் எதற்கு? ஆடம்பரம் ஒன்றும் வேண்டாம்" என்று அப்பா மழுப்பி விட்டார். உள் அர்த்தம் அவளுக்குத் தெரியாதா? பழுத்து உதிரப்போகும் வயதான மாப்பிள்ளைக்குப் பக்கத்தில் அழகு பொங்கும் அந்தப் பேதைப் பெண்ணை உட்காரவைத்து ஊர்வலம் விடுவதால் யாருக்கு என்ன சந்தோஷம் இருக்க முடியும்? அப்படி அவர்கள் ஒப்புக் கொண்டிருந்தாலும் அவள் சம்மதம் என்று சொல்லி இருப்பாளோ என்னவோ?

அவைகளெல்லாம் அவள் துரதிருஷ்டத்தை மேலும் மேலும் விளம்பரப் படுத்துவதைவிட வேறென்ன செய்ய முடியும்? நல்ல வேளையாக அவரும் அதெல்லாம் வேண்டாமென்று சொல்லி விட்டார். அதில் அவளுக்கும் ஒரு ஆறுதல் இருந்தது.

மங்கைப் பருவத்தை அடைந்து வாழ்க்கையைத் தொடங்கப் போகிறோம் என்று எண்ணிய போது அவள் மனத்தில் கட்டிய கோட்டைகள் எத்தனையோ? அடுத்தடுத்து நிகழ்ந்த இந்த நிகழ்ச்சிகள் அவள் மனத்தில் மாறாமல் பதிந்து விட்டன. கொஞ்சம் கொஞ்சமாக அவள் மனத்தில் இருந்து அரும்பின பசுமையும் இருந்த இடம் தெரியாமல் பறந்து போயிற்று.

அது முதல் அவள் மாறிவிட்டாள். யாருடனும் அவள் மனம் விட்டுப்பேசவில்லை. சுகமோ துக்கமோ அவளுக்குள்ளேயே அடங்கிக் கிடக்கத் தொடங்கின. சாம்பல் மூடிய நெருப்புப்போல அவளுக்குள்ளேயே அவை பொங்கிப் பொங்கி அவிந்து போயின.

கல்யாணமாகிப் புக்ககம் போனவர்கள் எப்படி எப்படியோ வாழ்க்கை நடத்துவார்கள் என்று எண்ணியிருந்தாள். அவளுக்கு அப்படி ஒன்றும் புதிதாக ஏற்படவில்லை. அவளையறியாமல் அவள் மனத்துக்குள்ளேயே என்னென்னவோ தோன்றும். எதையும் வெளியே சொல்ல அவளுக்குத் துணிவு இல்லை. பரிகாசமாகவோ, உல்லாசமாகவோ எதையாவது பேச அவள் மனம் துடிக்கும். ஆனால் இழுத்து மூடியிருக்கும் உதடுகளைத் தாண்டி அவைவெளியில் வந்ததில்லை.

தன்னுடன் சரிசமமாக வைத்துப் பாவிக்கும் ஒரு காதலர் அல்லது கணவர் என்ற நிலையில் அவரை அவளால் நினைக்க முடியவில்லை. தன்னை மறந்து எழும் ஒரு பிரேமை— அதை அவளால் நினைக்கவே முடியவில்லை. அது அவளுக்குள்ளேயே அடைத்துப் போய் நின்றது. கணவனைப்பற்றி எப்போது நினைத்தாலும் அவள் மனத்தில் அவளை அறியாமல் ஒரு மரியாதை, பயம் இவை தான் தோன்றின. அவருக்குச் சிச்ரூஷை செய்யத்தான் அவளால் முடிந்தது. அவருக்குச் சமமாகப் பேசவோ, பழகவோ அவளால் முடியாமல் போயிற்று.

எல்லாப் பெண்களையும் போல அவள் அவருக்கு எதிரே கூட வருவதில்லை. தாராளமாக அவருடன் பேசவே அவளுக்கு என்னவோ போலிருந்தது. செய்யப் பொருத்தமில்லாத எதையோ செய்வது போன்ற ஒரு உணர்ச்சி. இதை அவளால் அழிக்கவே முடியவில்லை. கலகலவென்று சிரித்துப் பேசினால் "வயதான கணவரோடு என்ன சல்லாபம் வேண்டியிருக்கிறது?" என்று சொல்வார்களோ என்ற பயம் அவளை அரித்தது. கூடிய வரையில் யார் கண்ணிலும் படவே அவள் விரும்புவதில்லை.

4

ஒரு நாள். அவள் ஹால் பக்கம் உட்கார்ந்து கொண்டிருந்தாள். யாரோ அவருடன் பேசிவிட்டு அந்தப் பக்கம் போனார்கள். வாசலில் அவர் சேவகனை ஏதோ கேட்டார். அது அவள் காதிலும் விழுந்தது.

"உள்ளே யாரோ உட்கார்ந்திருக்கிறார்களே? அது யாரு? அவர் பெண்ணா?"

அவள் அதைக் கேட்டதும் அயர்ந்து போனாள். மனதை என்னவோ செய்தது. சொல்ல வொண்ணாத வேதனை இருள் வந்து மனதைக் கப்பியது. அன்றைக்கெல்லாம் அவள் அழுதாள்.

"கண் சிவந்து கிடக்கிறதே? அழுதாயா என்ன?" என்று அவர் கேட்டார்.

"ஒன்றுமில்லை. கரி விழுந்து விட்டது" என்று சொல்லிவிட்டாள். அவள் துயரத்தை அவள் யாரிடம் சொல்லி ஆறுதல் அடைய முடியும்? அது முதல் அவள் வெளியில் வருவதே இல்லை. உள்ளுக்குள்ளே இருந்து ஏதாவது வேலை செய்து கொண்டே இருப்

பாள். அவளுடைய கலகலப்பான பேச்சு இருந்த இடம் தெரியாமல் அடங்கியது. உள்ள உணர்ச்சியை அடக்கினாள். பேச்சை அடக்கினாள். செயல்களிலும் அடங்கியே நின்றாள். அடக்கமே அவள் உருவமாகி விட்டது.

பிறந்தகம் வரும் சமயங்களிலும் அவள் தன்னைப் பிறருக்குச் சமமாக நினைப்பதில்லை. ஏதோ ஒரு எண்ணம் அவளை உறுத்திக் கொண்டே இருந்தது. ஏழைகளாக இருந்தாலும் இளமையின் இன்பத்தில் மூழ்கி நின்ற பெண்கள் அவள் கண்ணுக்குத் தெய்வமாகத் தோன்றினார்கள். அவர்களுடைய வாழ்க்கையோடு ஒப்பிட்ட போது தன் வாழ்வு அவளுக்குத் துச்சமாகத் தோன்றியது. எல்லோருக்கும் மத்தியில் வாழ்ந்தும் அவள் தன்னந்தனியாகத் தான் நின்றாள். அவளால் யாருடனும் கலந்து பழக முடியவில்லை.

தக்க பருவத்தில் எந்தப் பொருள்களும் அவளுக்குக் கிடைக்கவில்லை. சிறு குழந்தையாக இருந்தபோது பணமில்லை என்ற காரணத்தால் அவளால் விரும்பின பல பொருள்களை அடையமுடியாமல் போயின. அப்போதெல்லாம் அவள் பணம் படைத்தவர்களைப் பார்த்துப் பொறாமைப் பட்டதுண்டு. இப்போது செல்வம் வந்துவிட்டது. ஆனால் அதனால் யாருக்கென்ன பிரயோசனம்? இன்னும் அவள் குறை தீர்ந்தபாடில்லை.

அவருடன் இருக்கும்போது அவளால் அதிகம் நினைக்கமுடிவதில்லை. இப்போது அவரிடமிருந்து விலகியிருந்தபோது கொஞ்சம் கொஞ்சம் அவளால் நினைக்க முடிந்தது.

அவர் சாது. மணமான புதிதில் அவரைத் தனியே சந்தித்தபோது அவள் தன் துரதிருஷ்டத்தை நினைத்து விம்மி விம்மி அழுததுண்டு. அந்த அழுகையைப் புரிந்துகொண்டதுபோல் அவர் மௌனமாகவே இருந்துவிடுவார். அவளைச் சமாதானப்படுத்த அவர் முயன்றதில்லை. அவள் துயரத்தை அவரால் போக்க முடியாது என்பதை அவர் உணர்ந்திருந்தாரோ என்னவோ? அவர் அப்படி ஒன்றும் பேசாமலிருந்ததே அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

அந்தச் செய்கையில் இருந்த பெருந்தன்மையை அப்போது அவரால் உணர முடியவில்லை. இப்பொழுது கொஞ்சம் தெரிந்தது. அந்தக்கடிதத்தைப் படித்ததும் கொஞ்சம் பரபரப்புக்கூட உண்டாயிற்று. அந்தக் கடிதம் ஒன்றும் அப்படிப் பிரமாதமானதாக இருக்கவில்லை. ரகசியமாக மறுபடியும் மறுபடியும் படித்துப் பார்த்து மகிழ்ந்துபோவதற்கு அதில் ஒன்றும் கிடையாது. சர்வசாதாரணமான கடிதம்தான். இருந்தாலும் அவளுக்கு அதைப் படிப்பதில் ஒரு ஆவல் இருந்தது. சாதாரணமாக அவள் சௌக்கியத்தைப் பற்றி விசாரித்துவிட்டுக் கடைசியில் எழுதி இருந்தார்.

"நீ எவ்வளவோ நன்றாக வாழ ஆசைப்பட்டிருப்பாய். நான்தான் குறுக்கே நின்று தடுத்துவிட்டேன். இளமைப் பருவத்தில் என்னென்ன அடையவேண்டுமென்று நீ ஆசைப்பட்டாயோ? அவைகளை நான்தான் பாழாக்கிவிட்டேன். இப்போது நினைத்துக் கொண்டு என்ன செய்கிறது? என் உடம்பு பலஹீனமாக இருக்கிறது. உன்னைப் பார்க்க வேண்டுமென்று ஆவலாக இருக்கிறது. உன்னால் வரமுடியுமா?" என்று கடிதம் முடிந்திருந்தது.

## 5

தகப்பனார் சாப்பிடும்போது தாய் அவர் காதில் இந்த விஷயத்தைச் சொல்லி வைத்தாள்.

"இப்பொழுது அறுப்புக் காலமாச்சே? யார் கொண்டுபோய்விடுகிறது? கோபு எனக்கு ஒத்தாசையாக இருக்கவேண்டுமே? வேறு யாரும் ஊரில் இல்லை. நான் எழுதுகிறேன் அவனுக்கு" என்று சொல்லிவிட்டார்.

பார்வதி அங்கே இருக்க மனமில்லாமல் எழுந்து உள்ளே வந்தாள்.

"என்ன அவசரமாம்? எனக்கு எழுதாமல் அவளுக்கு என்ன எழுதி இருக்கிறான்?" என்றார் தகப்பனார்.

"என்னவோ பால்யம் திரும்பி இருக்கிறது." என்று அத்தை சொன்னது அவள் காதில் விழுந்தது. அவள் அதற்கப்புறம் அந்தப் பேச்சையே எடுக்கவில்லை.

அசந்தர்ப்பமான நிலைமையைப்பற்றி அவருக்கு அவளே கடிதம் எழுத நினைத்தாள். மனதைத் திடப்படுத்திக்கொண்டு வேலைக்காரியிடம் ஒரு கவர் வாங்கிக்கொண்டு வரச் சொன்னாள். "எதுக்கம்மா?" என்று கேட்டபோதுகூட அதுவும் அவளுக்குக் குறும்புத்தனமாகவே பட்டது. "எதுக்கானால் என்ன? வாங்கிக் கொண்டுவா!" என்று அதட்டினாள். எல்லோரும் மத்தியான்னம் சாப்பிட்டுவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தபோது கடிதம் எழுத ஆரம்பித்தாள்.

'க்ஷேமம், நமஸ்காரம்' என்று கொஞ்சம் எழுதினாள். அப்புறம் வீட்டு விஷயமாகக்

கொஞ்சம் எழுதினாள். கடிதத்துக்குப் பதில் எழுதுகிறோம் என்று கொஞ்சம் சந்தோஷமாக இருந்தது. "நீங்கள் என்னென்னவோ எழுதி இருக்கிறீர்கள். நான் ஒன்றும் தெரியாதவள். அப்படியெல்லாம் நான் நினைத்ததில்லை." என்று எழுதும்போது கண்ணீர் பெருகியது. கடிதத்தைக் குறையாக நிறுத்தினாள்.

அரைக் கண் மூடி அப்படியே எத்தனை நேரம் உட்கார்ந்திருந்தாளோ? தெருவில் ஸைக்கிள் மணி அடிக்கும் சப்தம் கேட்டதும் விழித்துக் கொண்டாள். எழுந்து வாசற்படியைத் தாண்டி முன் திண்ணைக்கு வந்தாள்.

கையிலுள்ள கவரை அவள் கையில் கொடுத்த சேவகன் கையெழுத்து வாங்கிக் கொண்டான். அது ஒரு தந்தி. தந்தியில் வந்திருப்பது நல்ல செய்தியோ கெட்ட செய்தியோ அது அவசரமாக வந்தது. அதை அறிந்து கொள்ள அவள் மனம் துடித்தது. உள்ளே தூங்கிக் கொண்டிருந்த அப்பாவை எழுப்பினாள். அவள் மனம் படபடத்தது.

"ராமாமிருதத்துக்கு உடம்பு அதிகம். உடனே வரவும்" என்ற தந்தியைப் படித்து அயர்ந்து போனார்கள். "அடி பெண்ணே! மஞ்சளும் குங்குமமுமாய் இருந்தாயே! என்ன சந்தியில் என்னை இழுத்து விடப் போகிறாயோ?" என்று அம்மா கதறி விட்டாள்.

அவள் அப்பா, அம்மா, இருவரும் அவளுடன் வந்தார்கள். வரும்போதே அவருக்குப் பிரக்ஞை இல்லை. என்னென்னவோ சொல்ல நினைத்தாள் பார்வதி. ஒரு வேளை அவ்வளவு நாளாகக் கொட்டி ஆற்றாத மனப் புண்ணை ஆற்றிக் கொள்ள நினைத்தாளோ என்னவோ! சொல் எழும்பவேயில்லை

நடுவில் அவருக்குக் கொஞ்சம் நினைவு வந்தது. பார்வதியை அருகில் அமரச் சொன்னார். அவள் முதுகில் தட்டிக் கொடுத்தார். "பயப்படாதே!" என்று சொல்ல நினைத்தாரோ என்னவோ? அவள் கண் கலங்கியது.

அவர் அவளிடமிருந்து எதையோ விரும்புவது போலத் தோன்றியது. அவர் எதை விரும்பினார்? அவளுடைய பதில் கடிதத்தையா? இத்தனை நாளும் எழுதி அறியாமல் போட்ட ஒரே கடிதம்—முதலும் முடிவுமாய் நின்று போய் விட்ட அந்த அநாதைக் கடிதத்துக்குப் பதிலையா அவர் விரும்பினார்? அவர் பேசவே இல்லை. அவர் உயிர் பறந்து விட்டது. முகத்தில் மட்டும் அந்த, பாவம் மாறவில்லை.

அவள் மனம் பிளந்து விடும் போல இருந்தது. வாய் விட்டுக் கதறி அழ நினைத்தாள். அவருடைய சடலத்தையாவது கட்டிக் கொண்டு புலம்ப நினைத்தாள். இவ்வளவு பேர் முன்னிலையிலா? அந்தப் பாழும் சங்கோஜம் இன்னும் அவளை விடவில்லை.

உடைந்து போன உள்ளத்தை வெளிக் காட்ட அவளுக்குச் சக்தி இல்லை. வாய் விட்டுக் கதற அவளுக்கு வகை இல்லை. ஆனால் அவள் கண்களில் நீர் பொங்கியது. அவளைப் பார்க்கவே எல்லோருக்கும் எரிச்சலாக இருந்தது. அவள் இளமை எல்லோர் கண்களிலும் பரிதாபத்தை எழுப்பியது.

எது போனால் என்ன? இவ்வளவு நாளும் அவளுக்கு என்ன இருந்தது? இப்போது என்ன போய் விட்டது? ஆனால்.........ஆனால் அந்தக் கடிதத்துக்கு அவள் எழுதின பதில் அவருக்குப் போய்ச் சேர்ந்திருக்கக் கூடாதா? சேர்ந்திருந்தால் அவளை அவர் புரிந்து கொண்டிருப்பாரோ என்னவோ? மன நிம்மதியோடாவது செத்துப் போயிருக்கலாம்.

அந்தப் பதில் கடிதமும் முடிவு பெறாமல் அவள் வாழ்க்கையைப் போலக் குறையாகவே நின்று விட்டது.

# புத்தக விமர்சனம்

### மாதர் நீதி அல்லது பெண் மதிமாலை

[ஆசிரியையின் பெயர் வெளியிடப்படவில்லை. திருச்சி கண்டோன்மெண்ட், செயின் பிரிண்டர்ஸ் லிமிடெட் அவர்களால் வெளியிடப்பட்டது. விலை அணா 6.]

குடும்பப் பெண்கள் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு வரும்பொழுது சில நெறிகளைக் கையாண்டுவந்தால் வாழ்க்கை மிகவும் ரசமாயிருக்கும். பழமை புதுமை இவை இரண்டிலும் அனுபவம் வாய்ந்த ஆசிரியை பெண்கள் கையாளவேண்டிய சில அரிய முறைகளையும் பழக்க வழக்கங்களையும் தெள்ளென எடுத்துக் காட்டியிருக்கிறார் இச் சிறிய புத்தகத்தில். கணவனிடம் எப்படிப் பழகுவது, மனைவி அவருக்கு உற்ற துணைவி என்பதை எப்படி நடைமுறையில் காட்டுவது, குழந்தைகளை எப்படிப் பராமரிப்பது, தங்கள் சமையல் வேலைகளையும் கவனித்துக்கொண்டு, குழந்தைகளையும் கணவன் காரியங்களையும் செவ்வனே எப்படிச் சமாளிக்க வேண்டுமென்பதை ஆசிரியை கூறியுள்ளார். பெண்கள் கல்வி, குழந்தை வளர்ப்பு இவைகளைப் பற்றி நமது முன்னோர் வழங்கியுள்ள பழமொழிகளை எடுத்துரைத்து, குடும்பப் பெண்கள் எப்படி ஒழுகவேண்டும் என்று போதிக்கிறார். குடும்பங்களில் வழங்கி வந்த கைமருந்துகள் தயாரிக்கும் வகைகள், அவற்றின் உபயோகம் இவைகளையும் ஆசிரியை புத்தகத்தில் இணைத்திருப்பது பழைய வழக்கங்களையும் முறைகளையும் மறந்துள்ள இக்கால மக்களுக்கு மிகவும் பயன் தரும்.

இப் புத்தகம் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டியது. மாதர் அனைவரும் படிக்கவேண்டியது வைஷ்ணவ சம்பிரதாயத்தை ஒட்டி எழுதியிருப்பதாகச் சொல்லுகிறார் ஆசிரியை. இது அனுவசியம். எல்லாச் சம்பிரதாயத்தாரும் கிட்டத்தட்ட இதே முறைகளைத்தான் கையாண்டுவந்தனர். எனவே அக் குறிக்கோளை மறு பதிப்பிலாவது எடுத்து விடலாம் எனத் தோன்றுகிறது.

### நான் கண்ட வெளிநாட்டுக் காட்சிகள்

[சோம. லெ. இலக்குமணச் செட்டியார். கண்டனூர் வெள்ளையன் பதிப்புக் கழகத்தினால் வெளியிடப்பெற்றது. விலை ரூ. 1.]

ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்குச் சென்று சுற்றுப் பிரயாணம் செய்து வந்த சோம. லெ. இலக்குமணச் செட்டியார் தமது அனுபவங்களையும் தாம் கண்ட சில காட்சிகளையும் இப்புத்தகத்தில் தொகுத்துள்ளார். சில கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளிவந்தவை. இத்தகைய பிரயாண நூல்கள் தமிழில் மிகச் சொற்பம். எனவே திரு. இலக்குமணச் செட்டியாரின் நூல் தமிழ் மக்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும் என்று நம்புகிறோம். புத்தகம் படிப்பதற்கு மிகவும் ரஸமாயுள்ளது.

### சக்தி

[ஆர். கே. விசுவநாதன், எம். ஏ., அண்ணமலை சர்வகலாசாலை. விலை ரூ. 1-8-0]

மராமத்து மந்திரி கனம் எம். பக்தவத்ஸலம் இப் புத்தகத்துக்கு ஓர் முகவுரை எழுதியுள்ளார். விஞ்ஞானம் நமக்கு எட்டாப் பொருள் என்று பலர் ஒதுங்கிவிடுகிறார்கள். இக்காலத்தில் விஞ்ஞானம் புகாத இடமே கிடையாது. சக்தியை அறியாதார் உலகத்தை, கடவுளை அறியாதார். சக்திமயம் ஜகத். ஆசிரியர் இதை நமக்கு ஒவ்வொரு கட்டுரையிலிருந்தும் எடுத்துக் காட்டுகிறார். நவீன வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள நாம் இந் நூலில் விளக்கியுள்ள விஞ்ஞான விஷயங்களை அறியவேண்டியது அவசியம். விஞ்ஞானம் எட்டாப் பொருள் என்று நினைத்தவர்கள் இந்நூலைப் படித்தால் எப்படி சிறந்த ஆசிரியர்கள் அதைப் பாமரர்களுக்குக் கூட விளங்கும்படி ஆக்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொருவரும் கற்றுணர வேண்டிய நூல் இது. தமிழுக்கு இப்புத்தகத்தின் மூலம் ஆசிரியர் விசுவநாதன் பெரிய தொண்டாற்றியுள்ளார்.

### திருக்குறள் மணி விளக்க உரை

[வித்வான் தி. பட்டுச்சாமி ஓதுவார் எழுதியது. பழனியப்பா பிரதர்ஸ், திருச்சிராப்பள்ளி பிரசுரம். விலை 5 அணா.

அரசாங்கத்தார் அமைத்த பாடப் பட்டியலின்படி 100 குறள்களுக்குப் பதவுரை, விளக்க உரை எழுதியுள்ளார் ஆசிரியர்.

### பூஜா கல்பத்ரயம்

[தி. ராமசர்மா சேகரித்து T. R. சாஸ்த்ரி & கம்பெனி, திருவல்லிக்கேணி சென்னை. பிரசுரம். விலை அணா 5.

மஹாகணபதி, ஸரஸ்வதி, வரலக்ஷ்மி பூஜா கிரமங்கள் விளக்கப்பட்டுள்ளன.

### சென்னை நகரமும் தமிழ்நாடும்:

[எம். கே. ரெங்கஸாமி ஐயங்கார், திருவரங்கம், ஸ்ரீராம் நகர், தேனும்பேட்டை, சென்னை — 18.]

ஆங்கிலத்தில் எழுதியுள்ள இச்சின்ன பிரசுரத்தில் சென்னைப்பட்டணத்தின் பல பாகங்களின் பூர்வ சரித்திரம் என்ன, எப்படி அவை பிரிட்டிஷ் வசமாயின, அங்கெல்லாம் தமிழர்கள்தான் வசித்து வந்தனர் என்பதை ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டுகிருர் ஆசிரியர். சென்னை நகரம், செங்கல்பட்டு ஜில்லா, காளஹஸ்தி, திருத்தணி, சித்தூர் தாலூகாக்கள் தமிழ் மாகாணத்தில் தான் சேர வேண்டுமென்பதற்கு ஆதாரம் காட்டுகிருர்.

### ராஜாஜி

[ஹிந்துஸ்தான் பதிப்பகம், 69, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-6. விலை ரூ. 2-8-0]

ராஜாஜியைப் பற்றிய அரிய பெரிய கட்டுரைகள் அடங்கிய புத்தகம். கே. ஸந்தானம், ஸர். வி. டி ஆசார்யா, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், டாக்டர் ராஜன், பண்டித நேரு போன்ற பெரியார்கள் எழுதிய மதிப்புக் குறிப்புகள் அடங்கியது. தன்னலமற்ற ராஜாஜியின் புகழ் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே போகிறது. அவரைப்பற்றி அறிய மக்களுக்கு ஆவல் அதிகரித்துகொண்டேதான் வருகிறது. இதை இத்தொகுப்பு ஒருவாறு பூர்த்திசெய்யும். ஹிந்துஸ்தான் பதிப்பகம் இப்புத்தகத்தை வெளியிடுவதினுல் தமிழ் நாட்டுக்கு நல்ல தொண்டு புரிந்துள்ளார்கள் எனக் கொள்ளவேண்டும்.

ராஜாஜியின் வாழ்க்கைச் சரிதம் தயாராகி வருகிறது என்பதையும் காரியாலயத்தார் வெளியிட்டிருக்கிருர்கள். அதையும் விரைவில் வெளியிட ஆவன புரிவார்களாக.

### "நித்ய கர்மானுஷ்டான விதிகள்" (தமிழ்)

[ஆசிரியர்: நே. ஈ. வேங்கடேச சர்மா கிடைக்குமிடம்:—நே. ஈ. துரைஸாமி ஐயங்கார், தக்ஷிண தேச க்ரந்தாலயம், 7, ரங்கராயர் அக்ரஹாரம், கும்பகோணம். விலை ரூ. 1-0-0]

இந்நூல் வைத்யநாத தீக்ஷிதீய ஸ்மிருதியை அனுசரித்து எழுதப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆஸ்திகர்கள் அனைவருக்கும் மிகவும் பயன்படும்படி எளிய நடையில் எழுதப் பட்டிருக்கிறது. ஆஸ்திகர்கள் ஒவ்வொரு தினமும் காலையிலிருந்து இரவு வரை அனுஷ்டிக்க வேண்டிய ஜபம், ஹோமம், போஜனம் முதலிய பல நியமங்களும் அவை காலந் தவறினுல் ஏற்படும் தோஷங்களும் குறிக்கப் பட்டுள்ளன.


## 79 வருஷங்களுக்கு மேலாக

ஆரம்ப முதலே ஜனநாயகக் கொள்கையின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட பம்பாய் மியூச்சுவல் 1871-ல் அதன் முதல் பாலிஸியை வெளியிட்டது. அந்த நாள் முதலாக மிகக் குறைந்த செலவில் மிகச் சிறந்த இன்ஷ்யூரன்ஸ் ஊழியம் புரிய முனைந்து வெற்றி பெற்றுள்ளனர். இன்ஷ்யூரன்ஸ் வியாபாரத்தில் இருதரப்பினரிடமும் எமது சொஸைடி அடைந்துள்ள புகழே இதற்கு அடையாளமாகும்.

**பம்பாய் மியூச்சுவல் லைப் அஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்.**

ஒவ்வொரு பாலிஸிதாரரும் ஒரு பங்குதாரர்.

வசீகர நிபந்தனையின்பேரில் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு:

**S. A. ராமஸ்வாமி & பிரதர்ஸ்,**

பிரதான ஏஜண்டுகள்:- சென்னை ராஜதானி, திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களுக்கு

பம்பாய் மியூச்சுவல் பில்டிங், 378, எஸ்பிளனேட், மதராஸ்.


துணிகள்
வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
துணிகள்
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
SUNLIGHT SOAP
ஸன்லைட்
சோப்பினுல்
தான்
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!

S. 123-50 TM




கே. எம். முன்ஷி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு—"சேதி"

## பட்டணின் தாய்

ஜயதேவன் திரும்பிவந்தபோது மீனல் தேவி படுக்கையில் கிடந்தாள். "அம்மா ஏன்? சற்றுமுன் நன்ருயிருந்தாயே?" என்ருன் அருமை மகன். அவன் குரல் ராணியைப் பயமுறுத்திற்று. "ஜயதேவ், என் தலை கொஞ்சம் வலித்தது. மயக்கம் வருகிறது. நீ சுற்றி வந்துவிட்டாயா?"

"ஆம். இன்று மிகவும் ஜோராயிருந்தது. ஆம், சமர் எங்கே? அந்தக் கிழவன் என்ன ஒன்றுக்கும் உதவாதவனுக ஆகிவிட்டானே?"

"இல்லை, குழந்தாய்! வயதானவர்களிடம் வெறுப்புக் காட்டக் கூடாது!"

"ஸமர், ஸமர்......ஏய்? எங்கே போய்விட்டான்?"

"வருகிறேன், மஹாராஜா!" சோப்தார் வந்தான். அவன் முகத்தில் ஒரு அர்த்தமற்ற ஆனந்தம்போலப் படர்ந்திருந்தது.

"இந்தா, பிடி. முடியையும் வாளையும், இதுவரை எங்கிருந்தாய்?"

"முஞ்ஜால் மேதா கூப்பிட்டார்!" என்று சொல்லியபடியே கிழவன் முடியையும் வாளையும் மிகவும் மரியாதையுடன் வாங்கினன். ஜயதேவன் ஸ்நானத்துக்கு வெளியே சென்ற பிறகு ராணிபக்கம் திரும்பிய கிழவன், ஆதரவுநிறைந்த குரலில், "அம்மணி, இனிக் கவலை நீங்கிற்று. முஞ்ஜால் சமாசாரம் அனுப்பிவிட்டார்."

விஷத் தீண்டல் பட்டவள்போல் குரலைத் தணித்து ராணி கேட்டாள்: 'என்ன?' என்று.

"எதை வேண்டுமானுலும் நாளை செய்ய வேண்டாம்; மறுநாள் செய்யலாம் என்று சொல்லியனுப்பினர். முஞ்ஜாலே பட்டண் நகர் போகிருர்."

எழுந்து படுக்கையில் அமர்ந்த அரசி 'என்ன சொல்கிருய்?' என்று கேட்டாள். அவள் முகத்தில் ஆடிக்கொண்டிருந்த கலவரம் சற்றே கலைந்தது.

"ஆம். நாளைக் காலை போகிருர். இனிக் கவலையில்லை." முஞ்ஜாலின் சக்தியைத் தேவசக்தி என்று நம்பின சோப்தார் உற்சாகம் துள்ளச் சொன்னுன். அவனுடைய பண்படாத வார்த்தைகளிலும்கூட வெற்றி தொனித்தது.

ராணியின் இதயம் இன்பம் நிறைந்தது. அவளுடைய நெற்றில் நம்பிக்கையினுடைய அடையாளங்கள் துளிர்விட்டன. தன் கலவரத்தைக் கலைக்க அவள் தன் காதுகளிடத் துக்கடியில் கையை வைத்தாள்; முயன்ருள். ஆனல் செத்திருந்த மனது, உற்சாகம் கொள்ள மறுத்தது.

"மகாராணி! என்றும் ஸோமநாதன் அருள்."

ராணியும் பதிலுக்குக் கடவுளை எண்ணி, கழுத்தை உயரத் தூக்கினள். தூரத்திலிருந்தே கேட்ட ஓர் ஆரவாரம் இதற்குப் பதில் போல் கிடைத்தது.

---

(ஹிந்திப்பிரதி பிரசுர கர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னகர காரியாலயத்தைச் சார்ந்த க. ஸ்ரீ நாதூராம் பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

அந்தச் சமயம் படைகள் அநேகமாக ஏதாவது கோயிலுக்கருகில்தான் தண்டு இறங்குகிற வழக்கம். ராணியின் படையும் மஹாதேவன் கோயிலுக்கருகில்தான் இறங்கியிருந்தது. கோவிலுக்கு நாலு பக்கமும் மதில் சுவர் உண்டு. அதைச் சுற்றி டேராக்களும் கூடாரங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்துதான் இந்த ஒலி கேட்டது.

"ஸமர், போய்ப்பார். இது என்ன ஆரவாரம்?" "பார்க்கிறேன்" என்று சொல்லி சமர் கிளம்பிப்போனான். உடனே திரும்பி, "கொஞ்சதூரத்தில் தீவட்டிகள் கிரணங்களைத் தூதனுப்புகின்றன. சென்று பார்த்து வருகிறேன்" என்று சொல்லி மீண்டும் வெளியே சென்றுவிட்டான்.

ராணி மறுபடியும் கலவரமடைந்தாள். முஞ்ஜால் போவதாகச் சொன்னதைக் கேட்டு எழுந்திருந்த நம்பிக்கையின் நிழலும் அழிந்து நின்றது. இது வல்லபன் சேனையானால்? கோலாகலம் நெருங்கி வந்தது. அதில் சண்டைக்கு இழுக்கும் கூவல்களைக் காணோம், ஆனால் ஆனந்தத்தின் ஆரவாரம் காணப்பட்டது. ராணி இதென்ன புதுமை என்று யோசிக்கத் தலைப்பட்டாள். கொஞ்ச நேரத்தில் சப்தம் கூடாரத்தை நெருங்கிவிட்டது. குதிரைகளின் காலடிச் சத்தம், யுத்த பேரிகைகளின் சமாதானச் சத்தம்; ஜனங்கள் போடும் 'ஜே' கூச்சல். இவை எல்லாம் எதற்காக?

இவ்வளவில் வெளியிருந்து விசுவபாலனும் முரார்பாலனும் வந்தார்கள். ராணி அவர்களைத் தன் அறைக்குள் அனுமதித்தாள்.

"முரார்பால், இதெல்லாம் என்ன? யார் வருகிறது?"

"தாயே! இது ஆனந்தசூரியல்லவா சேனையுடன் வருகிறார்?"

ராணி அமைதியிழந்தாள். 'என்ன சொல்கிறாய்?' அவள் ஏதோ பிசாசறைபட்டவள் போல் கேட்டாள். "அவரைத்தான் வல்லபன் சிறைபிடித்திருந்தானே?"

"யார் கண்டது?"

இதற்குள் வெளிச்சுவரைத் தாண்டிவந்த ஜனங்களின் சத்தம் கேட்க ஆரம்பித்தது. சிலர் வேகமாகத் தாழ்வாரத்தில் வந்து சேர்ந்தார்கள். ஆனந்தசூரியும் விஜயபாலனும் ஜயதேவ குமாரனைக்கூட அழைத்துக் கொண்டு உள்ளே வந்தார்கள்.

'தாயே! மகாராஜா ஜயதேவனுக்கு வெற்றி; பகவான் மஹாவீரன் வெற்றி" ஆனந்தசூரியின் பழக்கப்பட்ட குரல் காதுகளில் விழுந்தது. இந்தக் கொஞ்ச நாட்களிலேயே அவர் முகத்தில் விசித்திரமான மாறுதல் ஏற்பட்டிருந்தது. அவர் கண்களில் நெற்றியில், உடல்நடையுடைபாவனைகளில், அங்க அசைவில் எங்கும் ஒரே குறியை நோக்கி இயங்கும் ஒருமை காணப்பட்டது. கண்களில் இந்த உலகத்தை மீறிய ஓர் ஒளி, ஓர் வெறி தென்பட்டது. உற்சாக அலைகளில் நீந்திக் களித்து எழும்பிக் குதிக்கும் அவர் தோற்றம் ராணியின் மனதில் கொஞ்சம் வருத்தத்தை ஏற்படுத்திற்று.

"ஆனந்தசூரி! நீங்கள் இங்கே எப்படி வந்திர்கள்?"

"நானா? தாயே! வல்லபன் என்னைச் சிறைபிடித்தான். கடைசியில் நான்தான் வெற்றி பெற்றேன். அவன் சேனையில் ஒரு பகுதியையே கொண்டுவந்துவிட்டேன். இனி நமக்குத்தான் வெற்றி. விஜயபால், ஏதோ நீங்கள் நம்பிக்கை குன்றியிருப்பதாகச் சொன்னார். இனி ஒரு கவலையும் வேண்டாம்; இன்னலும் கிடையாது. நாளைக் காலையிலேயே பட்டண் நம் கைவசம்." ஆனந்தசூரி விரைவில் உயர்ந்த குரலில் சொல்லிச் சென்றார்.

ராணிக்கு என்ன சொல்வது என்று தோன்றவில்லை. அறைக்கு வெளியே அநேகர் உள்ளே நடப்பதை அறிய ஆவல் கொண்டு துடித்து நின்றனர்.

விஜயபாலன் சொன்னான்: "தாயே உத்தரவிடுகிறீர்களா, கதவைச் சாத்தி வருகிறேன்...... நாம் பேசுவது வெளியே போக வேண்டாம்!"

முரார்பால் ஆமோதித்தான். "ஆம் விஜயபால், சொல்வதுதான் சரி" என்றான். ராணியும் தலையசைத்து அனுமதி கொடுத்தாள். ஸமர் கதவைச் சாத்தினான்.

ராணி பெருமை தோன்றி அதிகாரம் காட்ட, "சொல்லும், என்ன சொல்கிறீர்?" என்றாள்.

ஆனந்தசூரி ஆத்திரப்பட்டார். "என்ன சொல்கிறேனா?" இனிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது. இனி செய்கைதான் பாக்கி. ஜயதேவகுமார் நாளைக் காலையிலேயே குஜராத்தின் கொற்றக் குடையரசாகவேண்டும். மூன்றே நாட்களில் பட்டண் பிடிபட்டுவிடும். நேற்றுமுதல் ஓடிய நான் இதை எல்லாம் அறிந்தே வந்திருக்கிறேன். இனியும் கலவரப்படவேண்டாம். பின்னால் இருக்கிற வல்லபனும் இரண்டு நாட்களில் நம்பிக்கை குன்றி ஓடிவிடுவான்."

எல்லோரும் ராணியைப் பார்த்தனர். ஆனால் அவள் அமைதியாய்க் கவலை தோய்ந்த

கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். இவ்வளவு கேட்டும் அவளுக்கு உற்சாகம் பிறக்கவில்லை. முஞ்ஜாலுடன் பேசிப் பொங்கிய பிறகு அவள் இதயம் ஒரேயடியாக ஆழத்தில் அமர்ந்துவிட்டது.

ஜயதேவன் நடுவிலேயே "அம்மா, என்ன யோசனை செய்கிறாய்? நாம் பட்டணைப் பிடிப் போமே!" என்றான்.

ராணி அமைதி நிறைந்து ஆழ்ந்த குரலில் "இல்லை குழந்தாய், அதைநான் செய்யத் தயாரில்லை. பட்டண் தன் கடமையில் தவறினால் தவறட்டும். நான் தாய்மையில் தவறமாட்டேன்."

எல்லோரும் திடுக்கிட்டு வாயடைத்து அமர்ந்தனர். விஜயபாலன், "ஆனால். அம்மணி, இதை விட்டால் வேறுவழி?" என்றான். "நேற்று முழுவதும் யோசனை செய்தோமே"

"விஜயபாலா! ஆம், நேற்று முழுவதும் யோசித்தோம். நான் முடிவு செய்து விட்டேன். நான் ஒன்றும் செய்யப் போவதில்லை. நாளை முஞ்ஜால் மேதாவே பட்டண் போகிறார். ராணி விளக்கமாய்ச் சொன்னாள். எப்பொழுது அவள் இதயம் வருஷக் கணக்கில் கட்டியிருந்த விலங்கை முறித்து இயற்கைப் போக்கில் அவளைக் கொணர்ந்து நிறுத்திற்றோ அதுமுதல் அவள் செயற்கையால் கொண்டிருந்த ஆணவம் அழிந்து, உண்மைப் பெருமை இடம் கொண்டிருந்தது. இயற்கையாக, சரளமாகப் பேசவும் தானாகவே வந்திருந்தது.

ஆனந்தசூரி அதிசயமடைந்தார். முஞ்ஜால் பெயரைக்கேட்டு, கொஞ்சம் பொறாமை கலந்த வருத்தமும் கொண்டார். கேட்டார், "யார்' முஞ்ஜாலா?"

"யார் அம்மா? நம் முஞ்ஜால் மேதாவா?" என்றான் ஜயதேவனும்.

ராணி மெதுவாகத் திருத்திச் சொன்னாள்: "ஆம், முஞ்ஜால் மந்திரி பட்டண் போகிறார். அவர் பட்டண் தலைவர்களைச் சந்தித்துப் பேசி வருவார். அதில் ஒன்றும் நடக்காவிட்டால், என் காரணமாகவே பட்டண் மக்கள் பிடிவாதம் காட்டினால் நான் நாளையே என் இறந்த கணவர் சென்ற இடத்துக்குச் செல்ல முடிவு செய்துவிட்டேன். நான் என் மகனுக்காகத்தான் இதுவரை சதி ஆகவில்லை. என் தேசத்திற்காகத்தான் அந்தப் புண்ணிய வேலையை மேற்கொள்ளாமலிருந்தேன். ஆனால் தேசமும் சரி, என் குமாரனும் சரி, நான் இல்லாமலேயே சுகமாக இருக்க முடியும். பிறகு நான் ஏன் என் தெய்வத்தைப் பிரிந்து இருக்கவேண்டும்? பிரிவாற்றாமையைத் தாளவேண்டும்? எனக்காக ஏன் தேசத்தை மூழ்க அடிக்கவேண்டும்?"

"இது என்ன? ராணி கனவில்தான் பேசுகிறாளா?" என்றே சந்தேகிப்பதுபோல் எல்லோரும் பார்க்க ஆரம்பித்தனர். அங்கே இருந்தவர்களில் பட்டணில் பிறந்தவர்கள் இந்த வார்த்தையைக் கேட்டு இன்பத்தால் மயிர்க்கூச்செறிந்தனர். எஜமான விசுவாசத்துக்காக ராணியுடன் இருந்தாலும் அவர்களுக்குப் பட்டண் பெருமைதரத் தக்கது தான். அதை அவர்கள் மறக்கவில்லை. ஆனால் ஆனந்த சூரி தோற்றம் மாறினார். கண்கள் கொலைகாரன் பார்வை செலுத்தின. பல்லை நறநற என்று கடித்துக் கர்ஜித்தார். "இதுஎன்ன சொல்கிறீர்கள், ராணி! வெற்றி எதிர்ந்த போதா இந்த வாதம்? இனி தாங்கள் உலகத்தின் நம்பிக்கை நிலை. அதை நம்பித்தான் எல்லோரும் இருக்கிறார்கள். ஜைனபகவான் கிருபையால் ஜைனப் பெரியவர்களின் ஆசீர்வாதத்தால் தங்கள் கையில் அதிகாரம் வந்திருக்கிறது. அறிவிருக்கிறது. வெற்றி அடைய வலுவிருக்கிறது. பிறகுமா இந்தப் பேச்சு?"

அருகே நின்ற வீரர்கள் பேச ஆசை கொண்டனர். ராணி பேசவிடாமல் சொன்னாள்: "அதிகாரம்,! அறிவு!! வெற்றி!!!. இதைஎல்லாம்விட என் மக்கள் தான் எனக்கு வேண்டியவர்கள். துறவி, நீர் குஜராத் ராணியின் முன்னிலையில் மரியாதையுடன் பேசக்கூட மறந்துவிட்டீர்!"

ஆனந்தசூரி உதட்டைக்கடித்துக்கொண்டார். "மறக்கவில்லை ராணி, தாங்கள் குறிப்பிட்ட அரசியல் முறையை வகுக்க நான் அழிந்தேன். அது முற்றுப்பெறவரும் போது நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள். இப்படிப்பட்ட சமயம் சரித்திரத்தில் ஒரு முறைதான் வரும். அதையும் நம் அசட்டுத்தனத்தால் இழப்பதா?"

"ஆனந்தசூரி, நான் செய்த தீர்மானம் அசையாது. மாறாது. முஞ்ஜால் தம் முயற்சியில் வெற்றி பெற்றால்தான் நான் பட்டணம் போவேன்."

"திரிபுவன் வலுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான் என்று தெரியுமா, தங்களுக்கு? ஒன்றல்ல, ஐந்து முஞ்ஜால்கள் வந்தாலும் அவன் கலங்கமாட்டான். அப்பொழுது என்ன செய்வீர்கள்?"

ராணி அழுத்தமாய், "நான் 'சதி' ஆகி விடுவேன்; கட்டை ஏறுவேன்! என் புத்திரன் அரசைவிட எனக்கு உயிர் பெரிதல்ல."

ஜயதேவ் குறுக்கிட்டான். "அம்மா, இது என்ன சொல்கிறாய் அம்மா?"

மீனல் சொன்னாள்: "குழந்தாய். க்ஷத்திரியத்தன்மையை நிலைநாட்டப் பின்வாங்கக் கூடாது அப்பா. குஜராத் அரசி அதற்குக் கலங்கக்கூடாது."

யதி: "ஆனால் மதத்தின் கொடிக்கெதிரே யாருடைய பெருமை பெருமைபெறமுடியும்? எங்கேயாவது பிடிவாதம் அரசமைத்ததுண்டா? க்ஷத்திரியர்களின் இந்த வீண் டம்பம்தானே குஜராத்தை, ஏன் பாரத தேசத்தையே பல கூறுகளாக்கியிருக்கிறது. காலம் வாய்த்தபோது ஒரு மதம் உறுதி பெற்று அதிகாரம் பெறாமல் போனால் ஒரு மதத்தில் உறுதியுள்ள யவனர்கள் நாளையே நம்மை அடக்கி அடிமையாக்கி விடுவார்கள். நன்றாய் யோசி! இந்தச் சமயத்தை நழுவ விடாதே. தேசத்தில் சக்கரவர்த்தியாக வேண்டும் என்றால் அது ஒன்று தான் வழி."

மீனல்தேவி அலக்ஷியத்துடன் சொன்னாள்: "ஆனந்தசூரி, உங்களுடைய வழியில் எனக்கு நம்பிக்கை இல்லை. சக்கரவர்த்தியாகவேண்டுமானால் மக்களின் உற்சாகம் ஒன்றுதான் அதை அளிக்கமுடியும். அவர்கள் பேராவல்களை முடித்துக் கொடுத்தால் அதை அடைய முடியும்"

"அந்தப் பேராவல்களையே ஜைனதர்மம் தான் கொண்டுவரமுடியும்"

"எல்லா மக்களும் இதை ஏற்கத் தயாரில்லை. ஆகவே எனக்கும் வேண்டாம்"

"அவர்கள் ஏற்க மறுத்தால் ஏற்கச்செய்யத்தான் அரசு" என்று கூவிக்கொண்டே ஆனந்தசூரி வாளில் கைவைத்தார்.

ராணி சொன்னாள்: "அஹிம்ஸா பரமோ தர்ம" ஆனந்த சூரி ஊமையானான். "துறவியாரே! என்ன ஆனால் என்ன? என் முடிவு உறுதியானது. உயிருடன் வாழ்ந்தால் பட்டண் விருப்பம் பெற்று; இறந்தால் பட்டண் பெருமைக்குப் பெருமை சேர்க்க!"

"வீணில் பின்னால் வருந்துவாய்!"

ஜயதேவன் கோபம்கொண்டு இளையபெருமான்போலத் துடித்தான்.

ராணி தடுத்தாள். "ஆனந்த சூரி, நீங்கள் தர்மாத்மா. இல்லாவிட்டால் இவ்வளவு நேரம் இப்படிக் கூறத்துணிந்த நா கிழித்து இழுக்கப் பட்டிருக்கும்; போம்." என்று சொல்லிய ராணி வாயிற்பக்கம் கைகாட்டினாள். பிறகு விஜயபாலனைப்பார்த்து, "ஏ சந்திராவதி நகர் சேனாதிபதியே! என் முடிவைக் கேட்டுக்கொண்டீரல்லவா? இனி உம் விஷயத்தை நீரே முடிவு செய்துகொள்ளலாம்."

ஆனந்தசூரி ஆத்திரக் குரலில் அலக்ஷியம் பேச, "இப்படி. மதத்தின் வெற்றிக்கிடையே சுயநலத்தின் தூண்டுதல்களைக் கலப்பதால் தான் இந்த உலகமே அழிவைநோக்கிப் பாய்கிறது" என்றார்.

முரார்பால் நடுவேவந்து. 'துறவியே, நீங்கள் உலகம் வெறுத்தவர். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இனி ஒருமுறை மகாராணியிடம் இந்தவிதம் பேசமுற்பட்டால் தங்கள் தலை எங்கோ சென்று உருண்டுவிடும். விஜயபாலரே வாரும். ராணியைத்தொந்தரவு செய்வது சரியில்லை!" என்றழைத்தான். எல்லோரும் வெளியேறினர். முரார்பால், தங்கினான். "தாயே, நீங்கள் கடைசியில் பட்டண்பெருமையைக் நன்றாய்க் காப்பாற்றி விட்டீர்கள். ஒருமுறை நீங்கள் சொல்வதைக் கேட்கத் தட்டினேன். இனி என் உயிர் உங்கள் பொருள்" என்றார் உணர்ச்சி ததும்ப.

"முரார்பால், உங்கள் ராணியாக நான் இருந்தபோது எவ்வளவு அருமையான சந்தர்ப்பத்தை இழந்து விட்டேன் என்று இப்பொழுது அறிகிறேன். நீங்கள் எல்லாம் நம்பிக்கைக்கு உகந்தவர்கள். பார். ஒருகால் எனக்கு எதாவது நேர்ந்துவிட்டால் ஜயதேவனைக்காப்பாற்ற நீ ஒருவன்தான். கவனித்துக் கொள்வாயா?"

"தாயே. என் உடலில் உயிருள்ள வரை ஜயதேவனுக்கு ஒரு கெடுதலும் வராது. நீங்கள் அதிகம் களைத்து விட்டீர்கள். கொஞ்சம் இளைப்பாறுங்கள்"

குமார் ஜயதேவன் தங்கி நின்றான். அவன் சுயநலம் கொண்ட இதயத்தில் மீனல் தேவியிடம் அன்பு இருந்தது. அவள் வார்த்தைகளுக்கு மதிப்பு இருந்தது. அவள் புத்தியில் நம்பிக்கை இருந்தது. மீனல் தேவியின் பிரதிக்ஞையைக் கேட்டு அவன் அதிசயமடைந்தான். தான்என்ன செய்வது? என்று புரியவில்லை. அவள் ஏன் 'சதி' யாக வேண்டும் என்று அறிய முயன்றான். அவள் 'பிறகு சொல்கிறேன்' என்று அவனை அமர்த்தி விட்டாள். ராணியின் உள்ளம் ஏதேதோ எண்ண அலைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தது.

## உடன்படிக்கைத் தூது

திரிபுவன் கொஞ்ச நாட்களிலேயே அழகான செயல் திறமையைக் காட்டினான். நகரின் கட்டுப்பாடு அமைதிக்காக வேண்டிய அநேக நல்ல ஏற்பாடுகளைச் செய்தான். கேங்காரின் வயதும் ஊதாவின் அரசியலறிவும் உதவி புரிந்தது உண்மை தான்.

ஆனாலும் திரிபுவனைப் போல் உற்சாகம் ஊட்டும் திறமை மற்றவரிடம் இல்லை. ஜனங்கள் முன்னமேயே அவனைச் சூரர்களான சோலங்கிகளின் முடியணி என்று எண்ணி வந்தார்கள். அவன் வார்த்தைகளுக்கு உயிரைக்கூடத் தரத் தயாராயிருந்து வந்தனர். பெண்கள் அவனுடைய அழகிய இளமுகத்தைக் கண்டு அன்பு



கொண்டனர். புருஷர்கள் அறிவு நிறைந்த நடத்தைக்கு வணக்கம் செலுத்த ஆரம்பித்தனர். கிழவர்கள் அவன் தாய்தந்தையரின் செயல்களை எண்ணி அவனைப் போற்றினர். டுங்கர்நாயக் அவனைக் கடவுள் என்றே எண்ணி, பக்தியுடன் பின்னால் அலைவதையே தன் பெருமையாகக் கொண்டான். பிரஸன்னாவும் அவனுக்காக எல்லாம் செய்து அவன் உள்ளத்தின் ஆயாசத்தை நீக்க முயன்று வந்தாள்.

பட்டண்வாசிகளின் உற்சாகம் சிலஅம்சங்களில் அதிகரித்திருந்தது. இப்படிக் கதவை அடைத்துக்கொண்டு உள்ளே இருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை, அநேகர் திக்விஜயத்தைப்பற்றி எண்ண ஆரம்பித்துவிட்டிருந்தனர். அவர்களைத் திரிபுவன் கொண்டுள்ள திடமும் ஊதாவினுடைய ஏற்பாடுகளும் அடக்கிவைத்திருந்தன. ஊதா தன் நிலைமையை நன்கு உபயோகப்படுத்திக்கொண்டான். அவன் ஏற்கனவே உள்ள நிலைமையையே சீர்திருத்தி வந்ததினால் அவனுக்கு வேண்டிய அளவு வெற்றி கிட்டிவந்தது. இவர்கள் இருவரின் ஒருமித்த முயற்சிகளால் கலவரம், அமைதியின்மை அல்லது நிலை தடுமாறல் இவைகளின் பயமே ஏற்படவில்லை. பட்டண் வாசிகள் கவலையின்றி ராணியை எதிர்க்கத் தயாராய்விட்டனர்.

திரிபுவனுக்குக் கிடைத்த தகவல்களிருந்து ராணி ஏதும் செய்யும் நிலைமையிலில்லை என்று அறிந்தான். ஆகவே பட்டணின் அதிகாரத்தை எப்படி அதிகரிக்கலாம் என்று எண்ண ஆரம்பித்தான். காலையில் தூங்கி எழுந்தவுடன் தாய்தந்தையரின் சாவினால் ஏற்பட்ட துயரம் இருந்தும்கூட அவன் மனம் சந்தோஷம் நிறைந்திருந்தது. பேராவல் கொண்ட அவன் உள்ளம் பாரததேசத்தை ஜயிப்பதைக்கூடச் சுலபமாக எண்ண ஆரம்பித்தது. சூதகம் காரணமாக நித்யகர்மாக்கள் ஒன்றும் செய்யவேண்டிய அவசியம் இல்லாததனால் ஸ்நானம் செய்தவுடன் வெளியேற முடிவுசெய்தான். ஆனால் சூரியோதயமாக இன்னும் அதிகநேரம் இருந்தது. ஊதாவை அழைத்துக் கொஞ்சம் பேசிக்கொண்டிருந்து விட்டு யானையைக் கொண்டுவர உத்தரவிட்டான்.

ஊதா சால்வையை மடித்துக் கொண்டே, "மகாராஜ்! எல்லோரும் ஒரேவார்த்தையைப் பேசிக்கொள்கிறார்கள்;" என்றாரம்பித்தான்.

"என்ன வார்த்தை?"




குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்கரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.

கண்களைச் சுருக்கி மார்வாடி சொன்னான்: "தங்களைப் பற்றித்தான்" திரிபுவன் ஊதாவின் பேச்சுத் திறனை வியந்துகொண்டே, "ஆம் என்ன விஷயம்?" என்றான்.

"ஏன், தங்களை...... ஆனால் மகாராஜ் கோபிக்கக் கூடாது."

"சரி சொல்லேன், கேட்கலாம்."

"எல்லோரும் தங்களைக் குறைகூறுகிறார்கள்!"

"ஏன், எதற்காக? நான் என்ன செய்தேன்?"

"நேற்று நான் சொன்னேனல்லவா, அதைப் பற்றித்தான்"

"ஊதாசேட், நீ என்ன சாமர்த்தியம் வேண்டுமானாலும் செய். நான் ஒன்றுக்கு இரண்டு மாறமாட்டேன். என் தந்தை கொடுத்த வாக்கு. நான் அதை மீறுவேனா? பட்டன் அரியாசனத்தில் கர்ணதேவன் குமாரன் உயிர்வாழும்போது நான் உட்காருவதா? இது என்ன பைத்தியம்? எப்படி முடியும்? பட்டணின் நாயகன் அவன்தான்; நான் அவனுடைய ஊழியனே."

"இதில் தான், இதிலே தான்."

"பார். இனி இந்தப் பேச்சை." என்று சொல்லி, திரிபுவன் திரும்ப இருந்தசமயம் ஒரு வேலையாள் கலவரப்பட்டு இரைக்க இரைக்க ஓடிவந்து யாருடன் பேசுகிறோம் என்று கூட அறியாமல், "கேங்கார்பாபூ இருக்கிறாரா, கேங்கார்பாபூ!" என்று கேட்டான்.

ஒரு கூர் விழியால் அவன் நிலையைச் சரி செய்து, "ஏன் என்ன கொள்ளைபோகிறது? நீ யார்?" என்று அதட்டினான் திரிபுவன் மகாராஜன்.

"மகாராஜ்! நான் மோண்டேரி வாயிற்படியின் காவற்காரன்" என்று சொல்லி மூச்சை நிறுத்தி விடமுயன்றான். திரிபுவன் கொஞ்சம் கடுமுகம் காட்டி, கேட்கத் தயாரானான். "வாயிலுக்கு வெளியே நகர்சேட் வந்திருக்கிறார், எழுந்தருளியிக்கிறார் என்று கேங்கார்சிங் மகாராஜரிடம் சொல்ல வந்தேன்."

திரிபுவனும் ஊதாவும் அடிநிலம் நழுவியவர்கள் போல் "என்ன, என்ன" என்று கேட்டனர்.

"ஆம் மகாராஜ், முஞ்ஜால் மேதா..."

கேட்டவர் இருவரும் அமைதி இழந்து நடுங்கி முகம் வெளுத்தனர். திரிபுவன், "ஸேனையுடனா? எவ்வளவு சேனையுடன்?" என்று கேட்டான்.

"இல்லை, மகாராஜா, தனியே தான் வந்துள்ளார்."

"ஊம்?"

"சொல்கிறார்கள்—தங்களுடன் பேசவேண்டுமாம். உத்தரவு கொடுத்தால் இங்கே அழைத்து வருகிறேன். இல்லாவிடில் மகாராஜா வெளியே.........!"

"ஊதா. போ. கேங்கார்சிங்கை அழைத்துவா."

ஊதா யோசித்துக் கொண்டே போக ஆரம்பித்தான். அவன் தான் அதிகம் நடுங்கியது. அவன் சுயநலபுத்தி சொல்லிக் கொடுத்தது. முஞ்ஜால் நகருக்குள் வந்தால் முழு வேலையும் வீண்தான். அவன் தனித்தன்மை, பேச்சுத்திறன் அறிவு எல்லோரையும் தன் வயப்படுத்தி விடும். இனி என் செய்வது?. கேங்கார் சிங்கிடம் சேர்வதற்குள்ளேயே அவன் ஒரு வழி செய்ய முடிவு செய்தான்.

"பாபூ, முஞ்ஜால்மேதா வந்துகோட்டைக்கு வெளியே நிற்கிறாராம்; திரிபுவன் மகாராஜாவுடன் பேச விரும்புகிறார். மகாராஜா தங்களைக் கூப்பிடுகிறார்"

கேங்கார்சிங், "என்ன ராணி அனுப்பியிருப்பாளோ?" என்றுகேட்டான்.

"ஆம் வேறு என்ன? ஆனால் கேங்கார்பாபூ! ஏமாறுதீர்கள். ஆள் பெரிய ஆள்."

கிழவன் நரைத்த மீசையை முறுக்கிக் கொண்டே, "என்ன பேசுகிறாய்? இது முடிந்த வேலையா?" என்றான் அழுத்தமாய்.

"இல்லை பாபு, பேசுவதற்குத் திரிபுவன் பாலனை வெளியே அனுப்பிவிடுங்கள், முஞ்ஜாலை உள்ளே அழைக்கவேண்டாம்."

"போ அப்பா, பித்துப்பிடித்துப் பேசுகிறாய்! முஞ்ஜால் எங்கேயாவது பட்டணுக்குக் களங்கம் ஏற்படுத்துவானா?" பேசிக்கொண்டே இருவரும் திரிபுவன் பாலனிடம் வந்தனர். கிழவன், "ஏன் திரிபுவன்! முஞ்ஜாலை உள்ளே அழைத்துவிடுவதுதானே" என்றான்.

"ஆம், நானும் அதைத்தான் எண்ணினேன்"

ஊதாவால் சும்மா இருக்க முடியவில்லை." "மஹாராஜ். நீங்களே வெளியே போய்ச் சந்தித்தால்.........இல்லை ஒரு யோசனை சொல்கிறேன்."

"எதற்காக" மேதா அவர்களும் பட்டண் வாசிதான்!"

ஊதா பெருமூச்சு விட்டான். உதட்டைத் தெரியாமல் பிதுக்கி, "சரி பாபூ!" என்றான்.

"என்ன பெரியப்பா! என் யானையை அனுப்பட்டுமா? நகர் சேட்டுக்குத் தக்க மரியாதை செய்ய வேண்டாமா?"

கேங்கார்சிங் சொன்னான்: "சரி ஆனால் வேறு ஒருவரும் கூட வராமல் பார்த்துக்கொள்"

"தர்வான் கூட ஒருவரும் இல்லை என்று சொல்கிறானே!"

கேங்கார்சிங்: "சரி. நான் போய் அழைத்து வரட்டுமா?" என்று உத்தரவு கேட்டான். ஊதா பார்த்தான், "நகர் சேட்டின் பெயருக்கே இந்தப் பெருமை ஆனால்.........?" அவன் குறுக்கிட்டு, "சரி, நானும் போகின்றேன்." என்றான். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் ஏமாறும் அசட்டுத்தனம் அவனிடம் கிடையாது.

"சரி போங்கள்" என்று உத்தரவிட்டு, திரிபுவன்பால் அங்கேயே தங்கினான். கொஞ்ச நேரத்தில் விஷயம் கேட்டறிந்த பிரஸன்னாவும் ஓடி வந்து சேர்ந்தாள். முஞ்ஜால் வரும் விஷயத்தைக் கேட்ட அரண்மனையே அலைந்து நின்றது.

"என்ன, இது உண்மைதானா?"

"ஆம், என் இவ்வளவு பதற்றம்?"

"எங்கேயாவது உன் விரதம் வீணாகி விடுகிறது. பார்த்துக்கொள்." திரிபுவன் கர்வத்துடன், "பயப்படாதே; நான் அசையவில்லை!" என்றான். இருவரும் சேர்ந்து மாமாவின் வரவை எதிர்பார்த்தனர். அவருடன் பேசும் ஆசையினால், அதனால் எற்பட்ட அலையினால் இருவரும் பேச்சு வன்மையைச் சற்று நேரம் இழந்தனர். இவ்வளவில் சமாசாரம் அறிந்த இரண்டொரு சிற்றரசர்களும் வந்து சேர்ந்தனர். சற்று நேரம் இந்தப் புதிய உணர்ச்சி வேகத்தை அனுபவித்தபிறகு திரிபுவன் அவர்கள் வரும் சப்தத்தைக் காதில் கேட்டான். மேடை மேல் ஏறி நின்று பார்த்தான். முஞ்ஜால், கேங்கார், ஊதா மற்றும் அங்கங்கே சேர்ந்த பலரும் நடந்து வந்துகொண்டிருந்தனர்.

முஞ்ஜாலின் உடை அழுக்கடைந்து மிகவும் சாதாரணமாயிருந்தது; கைதான அந்த வேஷத்திலேயே இங்கும் வந்துகொண்டிருந்தான். உயர்ந்த கட்டமைந்த உடல்




எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள்!!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவாமிநாதன் & கம்பெனி
24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.
பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

சற்றுக் குனிந்து காணப்பட்டது. அவன் நெற்றியில் பெருமையின் சாயல் கொஞ்சம் குறைந்து அடக்கத்தின் சாயல் அதிகரித்துக் காணப்பட்டது. கண் ஒளியில் அதிகார ஓட்டம்குறைந்து, வெறுப்புக் குடிகொண்டிருந்தது. அவன் நடை வழக்கம்போல் கம்பீரமாகவும் அதிகார ஆணவத்தைக் காட்டக் கூடியதாகவும் இருந்தது. அவன் தோற்றமும் முன்போலவே மனிதர்களை அடிமை செய்யக் கூடியதாகவே இருந்தது. தனித்து மற்றவரிலிருந்து மாறுபட்டு ஒளிரும் தோற்றம்.

திரிபுவன் வரவேற்க எதிரே சென்றான். அவன் உள்ளம் பலவிதத்தில் பொங்கி வந்தது. அவன் ஒரு கர்வம் கொண்ட மந்திரி,



அரசியல் வாதி, நகர் சேட், ராணியின் அபிமானத்தைப் பெற்ற முஞ்ஜாலை எதிர் பார்த்தான். ஆனால் இதோ முஞ்ஜால் தானம் கேட்பவனைப் போல் விண்ணப்பம் செய்ய வருகிறான். இந்தச் சமயம் திரிபுவன் உள்ளே எங்கோ ஒளிந்திருந்த வார்த்தைகள் தலை காட்டி ஒலித்தன. "திரிபுவனா! என் வெற்று இதயத்தின் ஆவல்களை நிரப்புவாயா?" இந்த வார்த்தைகள் ஞாபகம் வரவே அவன் எல்லாவற்றையும் மறந்தான். மாமா-தன் மாமாவைப் பார்க்கவே அவன் துடித்தான். ராணி கையில் சிறைப் பட்ட மாமாவைப் பார்க்க ஆவல் கொண்டான். திரிபுவன் ஓடினான். மாமாவை இறுகக் கட்டிக் கொண்டான். முஞ்ஜாலின் கண்கள் அசைவற்று நின்றன.

திரிபுவன் அவனைக் கையைப் பிடித்து மரியாதையுடன் உள்ளே அழைத்துச் சென்று வணக்கத்துடன் ஆசனத்து அமர்த்தி, "மாமா, நீங்கள் ஏன் இந்தக் கஷ்டப்பட வேண்டும்?" என்று அன்பாய்க் கேட்டான்.

"திரிபுவன், நான் ஏன் வந்தேன் என்பதை அறிந்து கொண்டிருப்பாய்? ஆனால் நான் ராணிக்காக வரவில்லை. எனக்காகவே வந்தேன். நீங்கள் பட்டண் கௌரவத்தைக் குலைக்க வந்து விட்டேன் என்று எண்ணினீர்களானால் அது பிசகு. நான் உங்களுடைய ஒன்றிரண்டு தலைவர்களுடன் பேசிப் போக வந்தேன். நான் சொல்வதைக் கேட்பீர்களானால் பட்டணின் பெருமை அதிகமாகும்." முஞ்ஜால் மெதுவாக வருத்தத்தால் கனத்த குரலில் சொல்லிச் சென்றான்.

கேங்கார் சொன்னான்: "மேதா அவர்களே! நீங்கள் சொல்வதைக் கேட்கத் தயாராயிருக்கிறோம். நாங்கள் என்ன இதை எல்லாம் வேடிக்கை என்றா ஆரம்பித்திருக்கிறோம்? சொல்லவேண்டியதைச் சொல்லுங்கள்."

"சரி. ஆனால் இந்த மாதிரி பேசக் கூடாது. நாம் இருவர் மூவர் உட்காரலாம். சில வார்த்தைகள் பரவுவது நல்லதல்ல."

திரிபுவன்: "சரி, நீங்கள் சொல்வது சரி. பெரியப்பா! கொஞ்சம் சேட் வஸ்துபாலரைக் கூப்பிடுங்கள். அவர், நான், நீங்கள், மேதா......" என்றான்.

"சரி."

"வாருங்கள் மேலே போகலாம்." எல்லோரும் எழும்பி மாடிப் படிப்பக்கம் திரும்பினர். பிரஸன்னா ஓடிச் சென்று பக்கத்தறையில் ஒளிந்தாள். முஞ்ஜாலின் கூரிய விழிகள் கவனித்து விட்டன. "யாரது பிரஸன்னாவா?"

திரிபுவன்: "ஆம் பிரஸன்னா தான். கூப்பிடட்டுமா? பிரஸன்னா, ஏ பிரஸன்னா, மாமா கூப்பிடுகிறார், பார்?"

சிரித்துக் கொண்டு, முகம் சிவந்து, தலை தாழ்த்தி, பிரஸன்னா வந்தாள். "எப்படி இருக்கிறாய் குழந்தாய்? ராணியைப் பார்த்தாயா?... சரி. நீயும் வா. உங்களுக்கு ஒன்றும் தடை. இல்லையே!"

கேங்கார் தடையில்லை என்பதைத் தெரிவித்தான். அந்தக் கிழவனும் கொஞ்ச நாள் பழக்கத்திலேயே பிரஸன்னாவை நேசிப்பதில் மிகவும் அதிகப்பட்டிருந்தான். "வா, பிரஸன்னா!"

ஐவரும் மேலே சென்று அமர்ந்தனர். கொஞ்ச நேரத்தில் சேட் வஸ்துபாலனும் வந்து சேர்ந்தான். வந்ததும் முஞ்ஜாலின் உடல் நிலையைப் பற்றிக் கேட்டான்.

'சேட் வஸ்துபாலரே! இனி யாருக்கு உடல் நலம்? கடந்த ஐந்து நாட்களில் எனக்கு எவ்வளவு யுகங்கள் கழிந்து விட்டன தெரியுமா? இதெல்லாம் முடிய வேண்டும். நான் ஆபூவின் காலடிக்குச் சென்று விடுவேன். உலகில் மிகுந்த மிகுந்த லாபங்கள் எல்லாம் அனுபவித்தாய் விட்டன"; மங்கிய கருணை வேண்டும் சிரிப்பின் சாயலைத் தாங்கிய முகத்துடன் முஞ்ஜால் சொன்னான்: "கடைசி முறையாக உங்களிடமும் ஒருலாபம் கிடைத்தது" என்று திரிபுவன் கேங்கார்சிங் பக்கம் திரும்பினான்.

இருவரும் "அது என்ன "என்று ஒரு குரலில் கேட்டனர்.

"எனக்குத் தெரியும், நான் சொல்லியும் வந்தேன், பட்டண் நகரம் எரியும் நெருப்பு என்று; இதைக் கிளப்பிவிட்டால் ஆபத்துத்தான் என்று. அதை நீங்கள் உண்மையாக்கிக் காட்டி விட்டீர்கள்!"

வஸ்து பால்: "அப்படியானால் நாங்கள் செய்ததை நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்களா?"

"ஒத்துக்கொள்வதா? வேற்று நாட்டவரின் காலடிச் சத்தம் கேட்டு, பட்டண் வாசிகள் ஒருமித்து எழுந்தனர், என்று கேள்விப்பட்டவுடனேயே என் வாழ்வு பயன் பெற்றது என்று எண்ணி விட்டேனே. இந்தப் பூமி தேவ பூமி. இதனுடைய வீர மக்களிடம் தேவாம்சம் உண்டு என்று கண்டிப்பாய் அறிந்து கொண்டேன்" என்று சொல்லும் போதே முஞ்ஜால் மார் நிமிர்ந்து தலை தூக்கினான். அவன் திருமுகத்தில் மங்கல் நீங்கி, பழைய "பெருமை" ஒளிர்த்தெழுந்தது.

திரிபுவன், "நாங்கள் செய்வது தங்களுக் குப் பிடித்தால் இப்பொழுது எங்களை என்ன செய்யச் சொல்ல வந்தீர்கள் நீங்கள்?" என்று கேட்டான்.

"அப்பா. ஜனங்கள் சொல்வதைச் சொல் லிக் கொள்ளட்டும். நான் இவ்வளவு வரு ஷங்களாகப் பட்டண் அரசனைச் சக்கரவர்த்தி யாக்கிப் பார்க்க விரும்பிக் கொண்டிருந்தேன். இது எல்லாம் எனக்கு உவகை அளிக்கிறது. உன் தைரியம், திடம், வீரம் எல்லாவற்றை யும் கேட்டு என் உள்ளம் ஒரு முழம் உயரு கிறது. இனி, செய்வதை எண்ணித் துணிந்து செய் என்று சொல்லவே நான் வந்தேன். இந்தச் சமயத்தில் அசட்டுத்தனம் செய்து விட்டால், தவறுதல் செய்து விட்டால், ஏமாந்து விட்டால் பிறகு ஏற்படும் வீழ்ச்சியி லிருந்து பட்டணைத் தவிர்க்க முடியாது.

கேங்கார் "அது எப்படி?" என்று கேட் டான்.

"மண்டலேசுவரா, முதலில் நான் சொல் லும் ஓர் வார்த்தையைக் கேட்டுக் கொள் ளும். ராணி என்னிடம் 'சென்று பட்டணைச் சமாதானப்படுத்தி வா!' என்றாள். நான் மறுத்து விட்டேன். பிறகு என் மனது தூண்டிற்று. நான் வர முனைந்தேன். அது எனக்காகவும் அல்ல, ராணிக்காகவும் அல்ல, பட்டணுக்காக மட்டிலுமே வந்தேன்."

"புரியவில்லையே"

"கேங்கார்சிங். நேரத்தின் மதிப்பை நீர் அறிவீரா? அறியீர். நான் அறிவேன். பதி னைந்து வருஷம் ஏன் சும்மா இருந்தேன், தெரியுமா? குறிப்பிட்ட நேரம் வரவில்லை. இன்று பல வருடங்களுக்குப் பிறகு பட்டண் வாசிகள் எல்லோரும் ஒருவர் விடாமல் ஒரே உள்ளத்துடன் பட்டண் பெருமைக்குத் தவிக் கிறார்களே, அப்படியும் ஏன் ஒன்றும் செய்ய இயலவில்லை? அந்த நேரம் வரவில்லை."

திரிபுவன் "மாமா நீங்கள் பேசுவது ஒன் றும் புரியவில்லையே."

"திரிபுவனா! பட்டண் உலகின் முடியாக எப்பொழுது ஆகும் என்று யோசித்திருக் கிறாயா? பட்டணில் இன்று காணும் உற் சாகம் குஜராத் முழுவதிலும் கனத்துப் பரவ வேண்டும். அப்பொழுதுதான் பீம தேவர் ஒரே ஒரு கொடியில் பட்டணைத் திரும்பி அடைய முடிந்தது என்றால் என்ன காரணம் தெரியுமா? தேசம் முழுவதும் இந்தத் தூண் டுதல் இருந்தது. நம் மக்கள் எல்லாம் எழுந்து நிற்க வேண்டும். நம்முடைய சேவல் கொடிக்குப்பின் எல்லா மக்களும் திரண்டு வர வேண்டும். அந்த நேரம் இது வரை வர வில்லை. இனி வரப் போகிறது."

"எப்படி?"

"நீ சிறியவன். பழைய வேற்றுமை விரோதங்களைப் பற்றி நீ அறிய மாட்டாய். ஆனால் மற்றவர் அறிவர். பட்டணுக்கு 'நாலி லொரு பங்கு கப்பம் கட்டுபவர்களிடையே எவ்வளவு விரோதம்? திரிபுவனா! பன்னி ரண்டு மண்டலேசுவரர்களுள் உன் தந்தை, கேங்கார் சிங், மதனபால், வல்லபசேன் இவர் கள் தான் பட்டணுக்கு வரவாவது செய் கிறார்கள். மற்றவர்கள் தங்கள் மண்டலங் களில் கேளிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். நமக்கு ஐம்பத்திரண்டு பட்டணங்கள் என்று சொல்லப்படுகிறது. பார்க்கப் போனால் மோண்டேரா, கர்ணாவதி, ஒருகால்சோம்நாத், பட்டண் இவைகளை விட்டு மற்ற நகரங்கள் எங்கே? எல்லோரும் பட்டண் தலைமையை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது வீண் வெளிச்சம்!"

"அப்பாவும் அதைத் தான் சொல்லிக் கொண்டிருந்தார்."

"அப்பா, உன் தந்தையின் எண்ணங்கள் பெரியவை. ஆனால் அவர் சுபாவம் ஆத்திரம் கொண்டது. அவர் ஒவ்வொரு மண்டலத்தை யும் முற்றிலும் சுதந்திரமாக்கிப் பட்டண் பெருமையை அதிகரிக்க ஆசைப்பட்டார். அது முடியுமா? போதாததற்கு நம் ஜைனர் களின் சண்டை இடையூறாக வந்தது. விமல்ஷா நிலை நாட்டிய அதிகாரத்தில் தம் கருத்தழிந்த அவர்கள் அங்கங்கே அதையே ஏற்படுத்திப் பார்க்க முற்பட்டார்கள்."

"அப்படியானால் அந்த விஷயத்தில் தங்கள் எண்ணம் என்ன?"

"இந்த இன்னல்களுக்கிடையே வழி காணவே நான் முயன்று களைப்படைந்து கொண்டிருந்தேன். முடிந்த வரை ஆவன வும் செய்து வந்தேன். என் எண்ணம் வேறொன்று. நான் பட்டண் அரசின் சிறப் பைப் பெருக்கி, மற்றத் தேசங்களில் அதன் பெருமையைப் பறையடிக்க விரும்பினேன். எதுவரை அதிகாரம் ஒரு கைக்குள் வராதோ அது வரை அரசாங்கம் நடக்காது."

"இதைத் தானே மஹாராணியும் சொல் கிறாள்."

"இல்லை, நீ தெரியாமல் சொல்கிறாய். அவர் களுக்கு அதிகாரப் பித்து. எந்த விதமாகக் கிடைத்தாலும் சரி, அதிகாரம் தான் வேண் டும். அதன் பழக்கத்தைத் தான் அவர்கள் இப்பொழுது சுவைத்துக் கொண்டிருக்கிறார்

கள். அதற்காகத்தான் சந்திராவதி சேனையைக் கூப்பிட்டிருக்கிறார்கள்."

"ஆம் அந்தத் துறவியையும் அழைத்து வைத்துக் கொண்டாள்."

"அந்தத் துறவி உரம் கொண்டவர். அவர் சித்தாந்தம் மிகவும் பயங்கரமானது. ஜைன மதத்தின் வெற்றியின் அடிப்படையில் அவர் பட்டண் ராஜ்யத்தை நிறுவ முயலுகிறார்."

வஸ்துபால்: "இது எப்படி முடியும்?" என்று கேட்டான். வைஷ்ணவ வணிகர்களுக்குத் தலைவனானபடியால் அவனுக்கு ஜைனர்களின் அதிகாரம் கேட்கவே பிடிக்காத பொருளாயிருந்தது.

"ஏன் முடியாது? அது முட்டாள்தனமான வீண் வார்த்தையல்ல. மதத்தின் பேரால் அதன் ஆற்றலைத் துணை கொண்டு ராஜ்யம் நிறுவ முற்பட்டால் பத்து வருஷங்களுக்குள் தேசத்தையே வெற்றி கொள்ளலாம். ஆனால் நாம் அந்த நிலைமையிலில்லை. மேலும் ஜைன மதத்திற்கு அந்த ஆற்றலும் கிடையாது,"

கேங்கார்: "அப்படியானால் உங்கள் வழி தான் என்ன?"

'என் வழி ஒன்றே தான். சில மண்டலேசுவரர்கள் ஒன்று சேரட்டும். குஜராத் சேனைகளை ஒன்று சேர்த்து மாளவம் தாக்கப்பட வேண்டும். தாக்குதலில் உதவி செய்யாதவர்களை அடக்கிக் கொள்ள வேண்டும். இதைச் சொல்லவே நான் வந்தேன்."

"என்ன?"

"எந்தச் சரியான தருணத்தை எதிர்பார்த்து நான், மண்டலேசுவரன் ஏன் ஒவ்வொரு பட்டண் வாசியும் துடித்துக் கொண்டிருந்தோமோ அந்த நேரம் வந்து விட்டது. பட்டண் முழுவதும் திரிபுவனை வழி படுகிறது. தேஹஸ்தலமும் வல்லபனும் திரிபுவன் கீழ் இருக்கின்றனர். பீமதேவ மஹாராஜன் பட்டணை மீண்டும் பிடித்த பிறகு எவ்வளவு ஆண்டுகள் கழித்து மக்களிடையே இந்த ஊக்கம் வந்திருக்கிறது! எல்லோரும் ஓர் மனிதன் உத்தரவுக்கு அடிபணியத் தயாராயிருக்கிறார்கள். அந்த மனிதன் நேரத்தைச் சரிவர உபயோகித்தால் பட்டணின் பறை ஒலி எட்டுத் திசைகளிலும் முழங்கும்." மெல்ல மெல்ல முஞ்ஜாலின் வார்த்தைகளில் வேகம் ஏற்பட ஏற்பட அவன் முக ஒளியும் பெருகிக் கொண்டே வந்தது.

ஊதா குதித்தான்: "ஆம் சரி. நீங்கள் சொல்வதைத் தான் நானும் எண்ணினேன்."

முஞ்ஜால் தான் பேசும் வார்த்தைகளின் கௌரவத்தினாலேயே குரல் நடுங்கச் சொல்லிச் சென்றான்: "இனி எண்ணத்தில் கழிக்க நேரமில்லை. செல்லும் கணங்கள் எல்லாம் பொற்கணங்கள். ஒரு மாதம் இந்த விதம் தங்கி விட்டால் உற்சாகம் குன்றிவிடும். பட்டண் நகரமே அரண்மனைக்குள் திரும்பி நின்றது என்று கேள்விப்பட்டேன். அதை இப்பொழுது தடுக்காதே. மேலேற விடு. அந்த ஓட்டத்தின் உயர்ந்த அலைகளை அவந்தி வரை பாயச் செய்."

ஊதா: "நாங்களும் அதைத் தான் வேண்டுகிறோம். ஆனால் எந்த விதம்?"

"எப்படிச் செய்வதா? யோசித்துப் பாருங்கள். நீங்கள் எல்லோரும் மீனல் தேவி இங்கே வருதல் கூடாது என்று பிரதிக்கினை செய்து விட்டு உட்கார்ந்திருக்கிறீர்கள். இதைக் காப்பாற்ற விரும்பினால் இரண்டே வழிகள் தான் உண்டு."

திரிபுவன்: "அவை என்ன?"

"ஒன்று இதே மாதிரி இருங்கள். உற்சாகம் ஒழியட்டும். அல்லது திரிபுவன் சிங்காதனம் ஏறட்டும்; உலகறியப் பறை கொட்டட்டும்."

திரிபுவன் வேகமாகத் தலையசைத்துச் சொன்னான்: "நானா? அது ஒருகாலும் முடியாது. என் தந்தையின் வார்த்தைக்கு எதிரா?"

"யோசி. நீ செய்யா விட்டால் இன்று ஒருவர் கூட உதவ இல்லாமல் தவிக்கும் ராணிக்கு நாளையே பல தோழர்கள் ஏற்பட்டு விடுவார்கள். குஜராத்தில் ஒருவருக்கொருவர் வெட்டி மடிவர். பட்டண்வாசிகளும் பொறுமை இழந்து விடுவர். உங்கள் உற்சாகம் குளிர்ந்து உறைந்து விடும். பிறகு பட்டண் பெருமை பட்டணுக்குள்ளேயே தங்கி விடும்."

கேங்கார் விழித்தான். "அப்படியானால் என்ன செய்வது?"

"ஒரே காரியம் தான் செய்ய உள்ளது; செய்யவும் செய்யலாம். குமாரன் ஜயதேவனைச் சிங்காதன மேற்றுவது."

திரிபுவன் பொங்கி எழுந்தான், "மாமா நீங்கள் சொல்ல வருவதை உணர்ந்தேன். எங்கள் பிரதிக்கினையை மண்ணாக்க முயலுகிறீர்கள். மீனல் தேவிக்கு மறுபடி வரவேற்பு அளி; சந்திராவதி சேனை சுற்றப் பட்டணைத் திறந்து வை."

"இல்லை, இப்படி நான் எங்கே சொன்னேன்? சந்திராவதி சேனையைத் திருப்பி மட்டும் அனுப்பினால் போதாது என்று சொல்கிறேன். சந்திராவதியும் கப்பம் கட்டட்டும். அதன் சேனை எதிரியை ஒதுக்க அனுப்பப்பட வேண்டும். அது பட்டணில் அரசன் இருந்து அவன் உதவிக்குத் திரிபுவனும் இருந்தால் தான் ஆகும்."

"இது எப்படிமுடியும்? மீனல் தேவிதான் குமாரனை அனுப்ப மறுத்துவிட்டாளே!"

"மீனல்தேவி நாளையே 'சதி' ஆகத் தயார். நீங்கள் குமாரனை அரசனாக ஏற்றுக்கொள்ள வேண்டியது தான் தாமதம். பிறகு என்ன தடை?"

கேங்கார் "அது சரிதான்" என்றான்.

"ஆனால் இதன்பயனைப்பற்றி எண்ணினீர்களா? பிறகு உங்கள் அரசனுக்கும் உங்களுக்கும் இடையே மனப்பொருத்தம் ஏற்படாது. உங்கள் காரணமாக இறந்த தன் தாயின் பிரிவை அவன் மறக்கமாட்டான். பிறகு ஒற்றுமை எங்கிருந்து வரும்? ராஜ்யம் எப்படிப் பரவும்?"

எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"நான் மறுபடியும் சொல்கிறேன். பட்டண் பக்திதான் என்னை இழுத்துவந்தது. உங்களிடையே ஊறிவந்த உற்சாகத்தைச் சரியான முறையில் உபயோகப்படுத்த விரும்பினால்; பீமதேவன், கர்ணதேவன், நான், உன் பிதா முதலியவர்களின் கனவை நனவாக்க விரும்பினால்; குஜராத்தில் பட்டண் பெருமையை நிலைநாட்ட விரும்பினால்; ஒரே வழிதான் உண்டு. நீங்கள் ராணியையும் குமாரனையும் மீண்டும் ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்களுக்கு நீங்கள் கொடுத்த தண்டனை எந்தக் குற்றத்துக்கும் போதும்?"

"ஆனால் சந்திராவதி?"

"நீங்கள் இவ்வளவு ஒப்புக்கொண்டால் அதற்கு வழிகாட்டுவது என் கடமை. சந்திராவதி சேனை? ராணியிடம் அதைத் திருப்பி அனுப்பிவிடும்படி சொல்லி அனுப்பிவிடுங்கள். தாயும் மகனும் தனித்து வந்தால்தான் பட்டண் வழி விடும் என்று சொல்லி விடுங்கள். பட்டண் அரசிக்கு இது என்ன குறைந்த அவமானம்?"

கேங்கார் "எங்கள் வார்த்தை என்ன ஆவது?" என்று கேட்டான்.

"மண்டலேசுவரா! அரச அலுவல்களில் பெரிய முறைகள் காப்பாற்றப்படவேண்டும். தனிப்பிரதிக்கினைக்கு இடமில்லை. பட்டண் தன் சுதந்தரத்தைக் காப்பாற்றிக் கொள்கிறது, சந்திராவதியும் ராணியும் அசட்டுப் பட்டம் கட்டிக்கொள்கிறார்கள். உங்கள் தலைக்கு மேல் நிற்கும் ஆபத்து விலகுகிறது; அதிகாரம் வலுக்கிறது. இது அதிகமா அல்லது ஆத்திரத்தில் எடுத்துக் கொண்ட பிரதிக்கினையா?"

"மாமா, என் பிரதிக்கினை, என்சொல்?"

முஞ்ஜால் தன் மருமகனுக்கு வந்த பெருமைக்கு மகிழ்ச்சி காட்டும் பாவனையில் மார் தூக்கி, "குழந்தாய்! தந்தை செய்த தப்பை நீயும் செய்யாதே. விரதம் முதல்தான்; ஆனால் எந்த விரதம்? உன் தனி விரதம் இல்லை. ஒருமித்த பட்டணின் பெருமை. யோசி. பட்டணின் தலை எந்தச் செய்கையால் நிமிரும்? ஒரே நிமிஷத்தில் வாழ்க்கை முழுவதிலும் காணும் கனவு பலிக்கும் விஷயத்திலா அல்லது தன்னை மறந்த ஒரு கணத்தில் செய்த பிரதிக்கினையை நிறைவேற்றும் விதத்திலா?"

கேங்கார்: "மேதா நீங்கள் சொல்வது சரியாகத்தான்படுகிறது. ஆனால் இதைப் பட்டண் நகரத்துப் பெரிய மனிதர்களிடம் எல்லாம் சொல்லிக் கேட்கவேண்டும், இல்லாவிடில் குற்றச் சாட்டு ஏற்படும்!"

"அதை நான் எங்கே தடுக்கிறேன்? பட்டண் வாசிகளின் அறிவுத் திறமையில் எனக்குச் சந்தேகமா? அரசியலில் ஆத்திரப்பட்டவர்கள், கோபம்கொண்டவர்கள் என்றாவது நன்மையடைந்ததுண்டா? முதலில் ராணியை வெற்றிகொள்ளுங்கள். பிறகு சந்திராவதியை வெற்றி கொள்ளுங்கள். குஜராத் உங்களதாகும்: உலகம் முழுவதும் உங்கள் காலடியில் வரும்."

ஊதா: "ஆனால் மேதா, ராணிவந்து எல்லாரையும் நசுக்க ஆரம்பித்தால்? அவர்கள் தான் தனக்குச் செய்த குற்றத்தை மறக்கிறவர்களில்லையே!"

"இதை நான் அறிவேன். ஆனால் திரிபுவன் தண்ட நாயக் ஆகி விட்டால் வல்லபசேன் சேனாதிபதி ஆவான். உங்களில் ஒருவர் மந்திரியாகலாம். பிறகு என்ன இருக்கிறது மிஞ்சி? ஆனால், திரிபுவனா? ஏன் பேச மாட்டேன் என்கிறாய்? என்ன யோசிக்கிறாய்?"

"நான் என்னசொல்வது? என் பிரதிக்கினை மாறாது. என்றாலும் நீங்கள் சொல்வதும் உண்மையே. அதில் ஒன்றும் சந்தேகம் தோன்றவில்லை. பட்டண் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்!"

"இல்லை, திரிபுவன் இப்படி ஏன் விட்டுப் பேசுகிறாய்? பின் தள்ளி உட்காருகிறாய்?"

"இல்லை, நான்எனக்காகப் பட்டணின்மேல் வெந்நீர் ஊற்றுகிறேனா? ஊதா சேட்! போ. பட்டணத்தில் தண்டோரா போடச் சொல். ஒருவருக்கும் குறைகூற இடம் இருக்க வேண்டாம்!"

வஸ்துபால்: உண்மை தான். இடம் கொடுக்கக் கூடாது. வாருங்கள். நாம் கீழே சென்று உட்காரலாம். எல்லாரிடமும் பேசி விட்டுத் தங்களைக் கூப்பிட்டனுப்புகிறோம்.

"சரி எனக்குத் தடைஒன்றுமில்லை" என்று சொல்லி முஞ்ஜால் உட்கார்ந்து கொண்டான். கேங்கார், ஊதா, வஸ்துபால் மூவரும் கீழிறங்கினர்."

(அடுத்த இதழில் முடிவுறும்.)




# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

*Stocked by all important Chemists & Druggists of South India*

**K. S. MEHTA & CO.**

250, China Bazaar, MADRAS.

# உங்கள் (தேக) ஆரோக்கியத்தை

# பருகுங்கள்




**போர்ன்-வீடா** பாலை விடச் சிறந்தது, அதில் சக்தி தரும் விடமின்களும், கால்ஷியமும் அடங்கியுள்ளன. விளையாட்டுக்காரருக்கும் பலஹீனருக்கும் ஒருங்கே இன்றியமையாதது. குழந்தைகள் அதன் சாக்லேட் மணத்தை விரும்புவர். காலையிலும் இரவிலும் சூடாகவோ அல்லது குளிர்ந்த பானமாகவோ, ஒரு கிளாஸ் பாலுடன் இரண்டு தேக்கரண்டியளவு சேர்த்துப் பருகவும்.

Cadbury

THE TREE OF HEALTH

—ஆரோக்ய விருக்ஷம்—




CFY 2 TAM

## காட்பரீஸ்

# போர்ன்-வீடா

கால்ஷியமும், ஏ & டி விடமின்களும் நிறைந்தது

...ட்பரி ... ரை (இந்தியா) லிமிடெட்

... 1417 ... 231 ... 1728 ...


Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# ஏ.சி.சி. சிமென்ட்

உபயோகிப்பவர்களுக்கு தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியாவின் இலவச டெக்னிகல் உதவி எப்பொழுதும் கிடைக்கும்.

எக்காலத்திலும்
மேன்மையானது
என்று போற்றப்ப
டும் இந்த பிரான்
டு ஏ.சி.சி. சிமின்
டை வாங்கவும்.

"நீலகிரி"

"ஏ.சி.சி."

"சார்-மினர்"

தி சிமென்ட் மார்க்கெட்டிங் கம். ஆப் இந்தியா, லிட்.
தி ஏ.சி.சி. லிமிடெட்டின் விற்பனை பொருப்பாளர்.

ADTS CMI 726 TAMIL.


உடலுக்கு
குளிர்ச்சியையும்
கேசத்துக்கு
வளர்ச்சியையும்
கொடுப்பதில்
நிகரற்றவை
டி.எஸ்.ஆர்.
கோகுல் ஹேர் ஆயில்
சந்தனாதி தைலம்
அரைக்கீரைவிதை தைலம்
கோகுல் அம்பர் வத்தி
எஸ்.ஆர். & கோ,
கும்பகோணம்.
இணையிலா வாசனை
தயாரிப்புகளுக்கு
டி.எஸ்.ஆர்.
FAS-390.